Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 15

வாரப்பதிப்பு

# ஈழநாடு

ஈழநாடு
சந்தா விபரம்
வாரப்பதிப்பு உட்பட
ஒரு வருடத்துக்கு ரூபா 40-00
6 மாதத்துக்கு ரூபா 21-00
3 மாதத்துக்கு ரூபா 11-00

போன்: 389

EELA NADU National Tamil Daily தேசிய தினசரி

மலர் 5 யாழ்ப்பாணம், சுபகிருது மாசி 19ஆம் நாள் றம்ழான் பிறை 6 (3-3-63) ஞாயிற்றுக்கிழமை தபாற் பெட்டி எண் 49 இதழ் 23

# எம். பி. க்கள் வழக்கு கிராமக் கோர்ட்டில்?

## பொலிஸ் அப்பீல் தோற்றிய புதிய பிரச்னை

யாழ்ப்பாணம், ஞாயிறு
யாழ்ப்பாணம் பொலிஸைச் சேர்ந்த மூன்று அதிகாரிகள் மீது, வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம், ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. ஏ. கந்தையா ஆகியோர் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் தாக்கல் செய்திருந்த வழக்கை விசாரணை செய்வதில் புதிய பிரச்னையொன்று தோன்றியுள்ளது.

ஜனவரி மாதம் ஐந்தாம் திகதி உணவு, வர்த்தக மந்திரி கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனக் கடையைத் திறந்து வைப்பதற்காக யாழ்ப்பாணம் வந்தபோது அவருக்கு எதிராக நடைபெற்ற கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தின் போது தம்மைத் தாக்கியதாக இரு எம். பி. க்களும் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக வழக்கொன்றை, கடந்த மாதம் 23-ம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் தாக்கல் செய்திருந்தனர்.

யாழ்ப்பாணம் பொலிஸைச் சேர்ந்த மூன்று அதிகாரிகளுக்கு எதிராக இரு எம். பி. க்கள் தாக்கல் செய்திருந்த வழக்கை, மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரிக்கலாமா அல்லது கிராமக் கோர்ட்டில் அது விசாரிக்கப்பட வேண்டுமா என்பதுதான் இப்போது தோன்றியுள்ள புதிய பிரச்சினையாகும்.

நேற்றையதினம் வழக்கைத் தாக்கல் செய்த இரு எம். பி. க்களும் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. வி. எம். குமாரசாமி முன்னிலையில் ஆஜரானார்கள்.

மாஜிஸ்டிரேட், இரு எம். பி. க்களிடத்தில் இது சம்பந்தமாகத் தெரிவிக்கையில்; அவர்கள் தாக்கல் செய்த வழக்கை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரிக்கலாமா, இல்லையா என்பது பற்றி முடிவு செய்ய நீதிமன்றத்துக்கு அவகாசம் வேண்டுமெனக் கூறினார்.

டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் முன்னர் தாக்கல் செய்த வழக்கில், குற்றவாளியாகக் கண்ட இரு எதிரிகளுமான சப் இன்ஸ்பெக்டர் பிலபிட்டியா, பெரேரா ஆகியோர் அப்பீல் செய்திருப்பதாகவும், அப்பீல் செய்த எதிரிகள், காயமுண்டுபண்ணிய வழக்கைக் கிராமக்கோர்ட்டிலே தான் விசாரிக்க வேண்டுமென்றும், மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரித்துத் தீர்ப்பளிக்க முடியாதென்றும் தங்கள் அப்பீலில் தெரிவித்திருப்பதால் எம். பி. க்களுடைய வழக்கை எந்தக் கோர்ட்டில் விசாரணை செய்வது என்பது இனிமேல் தான் முடிவு செய்யப்பட வேண்டுமென்றும் கூறி மாஜிஸ்டிரேட் இம்மாதம் 23-ம் திகதி வரை வழக்காளிகளின் சாட்சியங்களை ஏற்றுக்கொள்வதனை ஒத்தி வைத்தார்.

## சிங்களத் தேர்வு பரீட்சை ஆசிரியர்கள் அதிகமாகத் தோற்றினர்

யாழ்ப்பாணம், ஞாயிறு.
அரசாங்க ஊழியர்களுக்கான சிங்களத் தேர்வுப்பரீட்சை நேற்றுநடைபெற்றது. பரீட்சை நிலையங்களின் முன்பாக எதுவித சம்பவங்களும் நடைபெறவில்லை.

திருமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் சிங்களத் தேர்வுப்பரீட்சை மந்தமான நிலையிலே காணப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் பாடசாலை நிலயங்களில் சிங்களத் தேர்வுப் பரீட்சை நடைபெற்றது. பரீட்சை நிலயங்களை பொலிசார் அடிக்கடி பார்வையிட்டுச் சென்றனர்.

யாழ்ப்பாணத்தில் சிங்களத் தேர்வுக்கு விண்ணப்பித்தவர்களில் அரைவாசிக்குச் சற்று அதிகமானோர் பரீட்சை எழுதினர். அரசாங்கஊழியர்களை விட, ஆசிரியர்கள்தான் அதிகமாக பரீட்சை எழுதியிருப்பதாகத் தெரிகிறது.

பரீட்சை நிலயங்களின்முன் அடிக்கடி பொலிசார் காணப்பட்டனர். பொதுமக்கள் எவரையும் பரீட்சை நிலயத்திற்கு முன்னல் காணமுடியவில்லை

சிங்களத்தேர்வுப் பரீட்சை சம்பந்தமாகச் சிலரிடம் விசாரித்தபோது அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தினதும், தமிழரசுக்கட்சியினதும் வேண்டுகோள்காலம் கடந்துவிட்டமையே பரீட்சையில் ஊழியர்கள் பங்குபற்றக்கூடிய நிலையை உண்டாக்கியது என்று தெரிவித்தனர்.

திருக்கோணமலையில் இரு பரீட்சை நிலயங்களில் பரீட்சை நிகழ்ந்தது. பரீட்சைக்கு விண்ணப்பித்த 300 விண்ணப்பகாரர்களில் 200 பேர் பரீட்சைக்குத் தோற்றினர். பொலிசார் அடிக்கடி நிலயங்களைப் பார்வையிட்டுச் சென்றனர். பாடசாலை அதிபர்கள் உட்பட ஏராளமான தமிழாசிரியர்களும், பட்டதாரிகளும் இப்பரீட்சை எழுதினர். இராணுவ, கடற்படை ஊழியர்கள்கூட இங்கு பரீட்சை எழுதினர்.

## அரிசி விலையில் மாற்றம் யாழ்ப்பாணத்தில் மட்டும் நாலு சதம் கூட!

கொழும்பு, சனி
அரிசி விலையிலும், மாவு விலையிலும் மாற்றமேற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வெளியிடங்களில் அரிசி, மாவு விலை அதிகரிக்கப்பட்டபோதிலும், யாழ்ப்பாணத்தில் அரிசியின் விலை மற்ற இடங்களிலும் பார்க்கச் சிறிது அதிகமாகும்.

வெளியிடங்களிலுள்ள பாவனையாளர்கள், ஒரு டி அரிசிக்கும், ஒரு ரூத்தல் மாவுக்கும் அரைச்சதத்திலிருந்து ஒன்றரைச்சதம் வரை கூடுதலாகச் செலுத்தவேண்டும். ஆனல் யாழ்ப்பாணத்தில், ஒரு படி அரிசியின் விலையில் 4 சதம் அதிகரித்துள்ளது. இது மற்ற இடங்களிலும் பார்க்க அதிகமாகும். புதிய விலைகள் இம்மாதம் 4-ம் திகதி திங்கட்கிழமை முதல் அமுலுக்குவருவதாக உணவு, வர்த்தக, கப்பல் அமைச்சு அறிவித்துள்ளது.

ஆனல் சில இடங்களில், அரிசி, மாவு விலையில் ஒரு சதம் குறைக்கப்பட்டிருக்கிறது. கொழும்பில் அரிசி, மாவு விலையில் எந்தவிதமான மாற்றமும் இல்லை.

இது சம்பந்தமாக உணவு, வர்த்தக, கப்பல் அமைச்சு நேற்று வெளியிட்டுள்ள சுற்றிநிருபத்தில் தெரிவிக்கப்பட்ட விலை மாறுதல் வருமாறு: யாழ்ப்பாணம்: அரிசி படிஒன்று 29 சதம்; மாவு ரூத்தல் 30 1/2 சதம். மட்டக்களப்பு: ஒரு படி அரிசி 28 1/2 சதம். மாவு 30 சதம். திருக்கோணமலை: ஒரு படி அரிசி 28 சதம்; மாவு 30 சதம். வவனியா: ஒரு படி அரிசி 28 சதம்; மாவு 30 சதம். மன்னர்: ஒரு படி அரிசி 28 1/2 சதம்; மாவு 30 சதம்.

அரிசி விலையில், இந்த மாதம் 4-ம் திகதி முதல் மாற்றமேற்படவிருக்கிறதெனச் சென்ற வாரம் 'ஈழநாடு' வெளியிட்டிருந்தது வாசகநேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

## சாட்சிகளுக்கு வாறண்ட்


யாழ்ப்பாணம், சனி
யாழ்ப்பாணம் மஜிஸ்ரேட் கோர்ட்டில்நீதிபதி திரு அரசவால்டன் முன்னிலையில் இன்று இரணைதீவு கொலைவழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, சாட்சிகள் வராதபடியால், அவர்களுக்கு வாறண்ட்' பிறப்பிக்கப்பட்டு, 'இம்மாதம் 9-ம் தேதி விசாரணையை நீதிபதி ஒத்திப்போட்டார். அடுத்த தவணைக்கு நாலு சாட்சிகளையாவது கட்டாயம் ஆஜராக்கும்படி இன்ஸ்பெக்டரிடம் நீதிபதி தெரிவித்தார்.

எதிரிகளின் சார்பில் திரு. ஜி. ஜி பொன்னம்பலம், திரு. ரீ. கணேசலிங்கத்தின் உதவியுடனும், திரு. ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடனும் ஆஜரானர்.

வழக்காளி தரப்பில் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன், திரு. விஸ்வநாதனின் உதவியுடனும் பொலிஸ் இன்ஸ்பெகடர் திரு. பொன்னுத்துரையின் உதவியுடன் ஆஜரானர்கள்.

புளுக்களை அழிப்பதற்கு

BAYER



பொலிடோல்
FOLIDOL
Agents:
ROYAL DISPENSARY
PHONE: 397 JAFFNA.

T'GRAMS:
ROYAEL

# உங்கள் இராசி பலன்

சோதிட ஆசான் செ. தெல்லியூர் எழுதுவது

சுபகிருது ஆண்டு மாசித் திங்கள் 19-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (3-3-63) முதல் மாசித் திங்கள் 25-ம் நாள் (9-3-63) சனிக்கிழமை வரை உள்ள பலன்கள்.

### மேட இராசி

(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் முயற்சிகளில் வெற்றி, அந்தஸ்து உண்டு, ஆதாயச் சிறப்பு, தேகாரோக்கியம், குடும்பசுகம், மாதுருவழிக் கஷ்டம், பெண்களால் கஷ்டம், குடும்ப சச்சரவு, உத்தியோகத்துறையினர்க்கு எதிர்பாராதவாறு உயர்ச்சி, வருவாயதிகரிப்பு, வர்த்தகத்துறையினருக்கு அரசாங்க உதவி, நண்பர்களால் பலன் கிட்டுதல், ஒப்பந்தங்களால் அதிக ஆதாயம் கிடைத்தல், செல்வதிகரித்தல், கமத்தொழில்-கல்வித் துறையினருக்கு மத்திமபலிதம், பெண்களுக்குக் கல்விச்சிறப்பு, உறவினர் தொல்லை, தொழில் பார்ப்போருக்கு உயர்ச்சி, குடும்பச் சிறப்பு, கணவர்-குழந்தைகள் மேன்மை ஆதியன காணப்படும். இவர்களுக்கு மார்ச் 4, 5 சுபதினங்களாகும்.

★

### இடப இராசி

(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடம் முன்னரை.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில சமூக ஆதரவு கிடைத்தல், பொதுச்சமயப் பணியில் ஈடுபடல், குடும்பச் சிறப்பு, வீடு–வண்டி-வாகனச் சீர்திருத்தம், கொள் முதல் தொழில் விருத்தி, உறுதி-உற்சாகம்-ஊக்கம் தொழிலை விருத்தியடையச் செய்தல், சந்ததிலாபம், வர்த்தகருக்குத் தொழிற்சிறப்பு, கமத்தொழிலாளருக்குத் தீப்பலிதம், மாணவருக்கு கல்விமுன்னேற்றம், சுபகரும முயற்சிகள், உத்தியோகத்துறையினருக்கு துரிதமான முன்னேற்றபலன் நடத்தல், தேகாரோக்கியச் சிறப்பு, உடன்பிறந்தோருக்கு இடமாற்றம், பெண்களுக்கு கேளிக்கைகளில் மனம்படிதல், ஆடம்பரத்தில் செலவு அதிகரித்தல், களத்திர-புத்திரசுகம் மிகுதல், தெய்வ வழிபாடு ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் 6, 7, 8 சுபதினங்களாகும்.

★

### மிதுன இராசி

(மிருகசீரிடம் பின்னரை, திருவாதிரை, புனர்பூசம் முன்முக்கால்.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் பெருமுயற்சிகள் கைகூடல், தெய்வவழிபாடு நிறைவேறல், விவேகச்சிறப்பு, வீண்வம்புவழக்குகள் தோன்றல், பணமுடை தொடர்ந்து இருத்தல், உத்தியோகத்துறையில் மேலதிகாரிகள் வெறுப்பு, அவர்களது கண்டனங்களுக்கு ஆளாதல், குடும்ப சச்சரவு, வர்த்தகத்துறையில் பணவரவு மந்தமாக இருக்கும். பெருமுதலீடுகளைத் தவிர்த்தல் நலம் தரும், கொடுக்கல் வாங்கல்கள் சிரமம் இருக்கும். மாணவருக்கு கல்விச் சிரமம், கமத்தொழிலில் மத்திமபலிதம், பெண்களுக்கு வீண்பழி வந்துசேரல், கல்வித்தடை, உடல்நலக் குறைவு, களத்திரத்திற்கு நலம் குறைந்து வைத்தியச்செலவு ஏற்படல் ஆதியன காணப்படும். இவர்களிக்கு மார்ச் 4, 5, 9 சுபதினங்களாகும்.

★

### கடக இராசி

(புனர்பூசம் நான்காம் பாதம், பூசம், ஆயிலியம்.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் தேகநலம் கெடுதல், உட்டண ரோகம் தோன்றல், பிரயாணக் கஷ்டம், குடும்பத்தை விட்டுப் பிரிந்திருத்தல், எதிரிகள் தொல்லை, பெண்களால் தொல்லை, உத்தியோகத்தருக்கு வெளியிடமாற்றமும் மேலதிகாரிகள் பகைமையும பிரயாணவிபத்தும் தோன்றுதல், வர்த்தகத்துறையினருக்கு இலாபம், கமத்தொழிலில் மத்திமபலிதம், மாணவருக்குச் சோம்பல், கல்வியில் ஊக்கக்குறைவு, பெண்களுக்கு தேகநலம் கருச்சிதைவு போன்றவற்றால் கெடுதல், களத்திர-புத்திர சுகமும் முன்னேற்றமும் காணல், கன்னியருக்கு விவாகமுயற்சி நடத்தல் ஆதியன காணப்படும். இவர்களுக்கு மார்ச் 6, 7 சுபதினங்களாகும்.

★

### சிங்க இராசி

(மகம், பூரம், உத்தரம் 1-ம் பாதம்.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் வீண்செலவு, பிரயாணக்கஷ்டம், வீண்பழிவந்து சேரல், கோரபயம், வழிநடைப் பயம், வர்த்தகருக்கு நஷ்டம். திடீர் பொருட்சேதம், நாணயக்குறைவு, கமத்தொழிலாளருக்கு தாயாதிகள் கஷ்டம், பயிர்த்தொழில்பலிதக்குறைவு, மாணவருக்கு கல்வியில் ஊக்கமின்மை, பணமுடை, உத்தியோகத்தருக்கு தொழிலிடத்தில் எதிர்பாராத பகைமை தோன்றல், பொறுப்புகள் அதிகரித்தல், மனம் சோர்வடைதல், பெண்களுக்கு முயற்சிக்கு எதிர்ப்பு, சரீரத்தளர்ச்சி, இடமாற்றம், குடும்பத்திலுள்ளவர்களுக்கு ஓரளவு சுகம், கன்னியருக்கு விவாகப்பேறு முயற்சிகள் நடத்தல் ஆதியன காணப்படும். இவர்களுக்கு மார்ச் 3, 4, 5, 9 சுபதினங்களாகும்.

★

### கன்னி இராசி

(உத்தரம் பின் முக்கால், அத்தம், சித்திரை முன்னரை.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் குடும்பவிருத்தி, தொழில்துறைகளில் உற்சாகம், சமூகத்தில் மதிப்பு, அரசாங்கஆதரவு, வாக்குமேன்மை, வருமான உயர்ச்சி, வர்த்தகருக்கு தொழில் விருத்தி, பணவரவு, உத்தியோகத்துறையினருக்கு நல்ல பதவிஉயர்ச்சி, மேலதிகாரிகள் மதிப்பு, மாணவருக்கு கல்விச்சிறப்பு, கமத்தொழிலில்மத்திமபலிதம்பெண்களுக்கு ஆடையாபரண சேர்க்கை, சுகப்பிரசவம் முதலிய சுபசெய்திகள், பூமி முதலியன சேர்தல், பெற்றோர் ஆதரவு, தெய்வவழிபாடு ஆதியன காணப்படும். இவர்களுக்கு மார்ச் 4, 5, 6, 7 சுபதினங்களாகும்.

★

### துலா இராசி

(சித்திரை பின்னரை, சுவாதி, விசாகம் முன்முக்கால்)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் உடலாரோக்கியக் குறைவு, எதிரிகள் தொல்லை, வழக்கு விவகாரங்கள் விருத்தியின்மை, உடன்பிறந்தோருக்கு சுபகருமங்கள் நடத்தல், வாரபிற்பகுதியில் குடும்ப ஒற்றுமை சிறக்கும், பொருள் வரவு, தெய்வானுக்கிரகம், வர்த்தகருக்கு வாரமுற்பகுதியில் கஷ்டம், பிற்பகுதியில் தொழிற்சிறப்பு, மாணவருக்கு மத்திமபலிதம், பிற்பகுதியில் கல்விமேன்மை, கமத்தொழிலாளருக்கு மத்திமபலிதம், உத்தியோகத்துறையினருக்கு மத்திமபலிதம், பெண்களுக்கு மறைமுகமான எதிர்ப்புகள், மனச்சஞ்சலம், ஆரோக்கியக்குறைவு ஆதியன முற்பகுதியிலும் பிற்பகுதியில் இவை குறைந்தும் காணப்படும். இவர்களுக்கு 6, 7, 8, 9 சுபதினங்களாகும்.

★

### விருச்சிக இராசி

(விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் மனத்திடம் பெருகுதல், கவலைகள்மறைதல், மறைமுகமான எதிர்ப்புக்கள் தொடர்ந்து இருக்தல், பெண்களால் உதவி, பொருள்வரவு. பிரயாணச்செலவு, வர்த்தகத்துறையில் முற்பகுதி மத்திம பலன், பிற்பகுதி அபிவிருத்தி, உத்தியோகத் துறையினருக்கு முற்பகுதி மேலதிகாரிகள்பகை, பிற்பகுதி அவர்களால் உதவி கிட்டுதல், கமத்தொழிலாளருக்கு ஆதாயப் பெருக்கம், மாணவருக்கு கல்விமுயற்சிகள் வாரப்பிற்பகுதியில் நலன் தரல், பெண்களுக்கு குடும்பஒற்றுமை, களத்திர-புத்திரசுகம், தெய்வ வழிபாடு ஆதியன காணப்படும். இவர்களுக்கு மார்ச் 8, 9 சுபதினங்களாகும்.

★

### தனு இராசி

(மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் பாதம்)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் தொழில்முன்னேற்றம், தெய்வானுக்கிரகம், புதியன முயற்சி, குடும்ப சுகம், மதிப்புயர்ச்சி, நண்பர்களால் உதவி, சிலருக்கு விபத்து ஏற்பட்டு இரத்தச்சேதம் காணல், பிரயாணத்தால் கஷ்டம், வர்த்தகர் - கமத் தொழிலாளருக்கு மத்திமபலிதம், களத்திர-புத்திர சுகக்குறைவு, கருச்சிதைவு போன்றவை தோன்றல் முதலியன காணப்படும். இவர்களுக்கு மார்ச் 3, 4, 5 சுபதினங்களாகும்.

★

### மகர இராசி

(உத்தராடம் பின்முக்கால் திருவோணம், அவிட்டம் முன்னரை.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் குடும்ப விருத்தி, புதிய தொழில்சேர்க்கை, மதிப்புயர்ச்சி, பணவரவு, உடல் நலம் இடையிடைபாதிக்கப்படல், அந்தரங்கமாக மனத்தில் சஞ்சலம், வர்த்தகத்துறையில் மத்திம பலிதம், கல்விச் சிறப்பு, உத்தியோகத்துறையில் மத்திம பலிதம், வாக்கு வன்மையால் பலன்கிட்டல், கமத்தொழில் சிறப்பு, பெண்களுக்கு உடல் ஆரோக்கியம் சற்றுக் குறைதல், வீண்செலவுகள், கணவர் குழந்தைகள் சுகம், தெய்வவழிபாடு ஆதியன காணப்படும். இவர்களுக்கு மார்ச் 4, 5, 6 சுபதினங்களாகும்.

★

### கும்ப இராசி

(அவிட்டம்பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் குடும்பத்தில் ஆரோக்கியச்சிறப்பு, வருமான உயர்வு, குடும்பத்தில் பிரிந்திருந்தால் சேர்க்கை, செலவு குறைதல், கமத்தொழிலாளருக்கு கால்நடைச் சிறப்பு, பயிர்த்தொழில்மேன்மை, வர்த்தகருக்கு தொழில் விருத்தி, பணவரவு, மாணவருக்கு கல்வியில் பிற்போக்கு, ஆதரவுகுறைதல், உத்தியோகத்துறையினருக்கு நன்மை, அதிகாரிகள் உதவி, பெண்களுக்கு குடும்பத்தில் அமைதி, பொறுப்புணர்ச்சி அதிகரித்தல், குடும்பமுன்னேற்றம் சந்தோஷம்தரல், எதிரிகள் பணிவு ஆதியன காணப்படும். இவர்களுக்கு மார்ச் 6, 7, 8 சுபதினங்களாகும்.

★

### மீன இராசி

(பூரட்டாதி நாலாம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் தொழிலில் அலைச்சல் மிகுதி, சுகக்குறைவு, பலவித கஷ்டங்களும் தோன்றல், பிரயாணக் கஷ்டம், சச்சரவு, உத்தியோகத்தருக்கு இடமாற்றம், பெற்றோருக்குக் கஷ்டம், வர்த்தகத்துறையினருக்கு சஞ்சலம், பணமுடக்கம், கல்வியில் ஈடுபட்டவர்களுக்கு சோர்வு, ஆதரவின்மை, கமத்தொழிலாளருக்கு ஆதாயமின்மை, ஊழியர் தொல்லை, பெண்களுக்கு உடல்நலம்குறைதல், களத்திரவழிநன்மை, பணவரவு ஆதியன காணப்படும். இவர்களுக்கு மார்ச் 8, 9 சுபதினங்களாகும்.


## தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இனாம். தொய்வுக்கு 10நாள் மருந்து 12/50. நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.


வைத்தியர் பரிபூரணாநந்தர். கைலாயபிள்ளையார்கோவிலடி. யாழ்ப்பாணம்.



யாழ். மற்போர் கைப்போர் கழகம் (Jaffna Wrestling and Boxing Club) பயிற்சி வகுப்பு ஆரம்பம் 1-3-63. விபரங்களுக்கு எழுதவும். கா. துரைசிங்கம், காரியதரிசி, சுழிபுரம். 700


ஸி. டபிள்யூ. ஈ.

உங்களுக்கு வரவழைத்துள்ள

## ஏககால ஒளி இணைப்புகள்





கிடைக்குமிடம்:

ஸி. டபிள்யூ. ஈ. ரேடியோ இலாகா

85, மெயின் வீதி, : : கொழும்பு.

ஸி. டபிள்யூ. ஈ. விற்பனை நிலையம்

21, பிறின்ஸ் வீதி, : : கோட்டை.

REMEMBER NOW AND ALWAYS THE CWE BRINGS YOU TOP QUALITY AND VALUE

சிறுகதை

**தொட்டிலில் படுத்துறங்கிய குழந்தையை அழகு பார்த்து நின்ற கதாசிரியர் குழந்தை கண்விழித்து அழத் தொடங்கிய மாத்திரத்தே—**

**குழந்தையின் அழுகையை நிறுத்த வகை தெரியாது திகைத்துப் போகிறார். அப்பொழுது அவர் படும் அவஸ்தையும் துன்பமும்—**

**குழந்தையின் அழுகை எப்படி நின்றது?**

**அதுதான் கதை—**

# வெயிலும் மழையும்

குழந்தை தொட்டிலில் படுத்துறங்கிக் கொண்டிருந்தது. அவனைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பை என் தலையில் சுமத்திவிட்டு தாய் இரண்டு வீடுதாண்டி மூன்றுவது வீட்டுக்கு ஒருக்கால் 'தலையைக்காட்டி' விட்டு வரப் போயிருந்தாள். மாமன்மகள் மைத்துனியாக உள்ள இருபத்தெட்டு அவதாரங்களிலே இவளும் ஒருத்தி. கொழும்பிலிருந்து ஒருவாரத்துக்கு முன்பாகத்தான் வந்திருந்தாள்.

மூன்றுவது வீட்டுக்குப்போய் ஒன்றரை மணிக்கு மேலாகிறது. இவ்வளவு நேரமாக தலையைக் காட்டிக்கொண்டிருக்க அவளுக்கென்ன தலையிலே பேன்பிடித்திருக்கிறதா? ஒரு பழைய உபகதையில் சொல்வதுபோல தலையைக் கழற்றி இன்னொருவர் கையிலே கொடுத்திருந்தால் கூட தலை வாங்கிய அந்த அபூர்வமனிதர் அதில் ஒவ்வொரு பேனைப் பொறுக்கி அதற்கு மேலும் தலைக்குள்ளே களிமண் இருந்தால் அதையும்துப்புரவுசெய்து இம்மட்டில் ஆளைத் திருப்பி அனுப்பியிருப்பார்......

எனக்கு ஒரே எரிச்சலாக இருந்தது. இரண்டு பெண்கள் கூடி இப்படி மணிக்கணக்காக உரையாடுவதற்கு அப்படி என்னதான் இந்த உலகத்தில் நடைபெறுகிறதோ!

உலகத்தை வாரிச் சுருட்டிக் கொண்டு எங்கள் வீட்டுப் படலையிலேவந்துவிழும் புதினப் பத்திரிகையைக்கூட ஒருமணி நேரசமாச்சாரம் என்றுதான் சொல்லுகிறார்கள். இங்கே நம் வீட்டுப் பெண்களுக்கோ...

தொட்டில் இலேசாக அசையவே, மெல்ல எழுந்துசென்று அதை ஒருக்கால் மெதுவாக ஆட்டிவிட்டேன்.

பனிக்காலத்து விடியற்காலையில் மொட்டவிழ்ந்து நிற்கும் ரோஜா மலரைப்போல சலனமற்ற இன்பத்துயிலில் ஆழ்ந்திருந்த குழந்தையின் அமைதி தொட்டிலை நான் அசைத்த மாத்திரத்தே கலைந்துபோய் விட்டது. மின்சாரத்தில் வைத்தகையை எடுப்பதுபோல சட்டென்று பின்னுக்கு இழுந்துக் கொண்டேன்.

என்ன காரியம் செய்துவிட்டேன். இதை அடுத்து ஓர் உலகப் பிரளயமல்லவா நிகழப் போகிறது. இரண்டடி பின்னுகவே நகர்ந்து நின்றுகொண்டேன். தொட்டிலை மட்டும் ஆட்டிவிடாதீர்கள் என்று திரும்பத் திரும்பப் பலதடவை சொல்லிவிட்டுப் போயிருந்தாள். இப்பொழுது வந்தாளானல் பிள்ளையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டிவிட்டதாக என்மீது கூசாமல் பழி சுமத்துவாள். நல்லபிள்ளையும் தாயும்!

தாயானவள் வருவதற்கு முன்னுகை குழந்தையை எப்படியாவது உடனே சமாதானப் படுத்தி ஆகவேணுமே. மனம் ஒரு நிலைப்படாமல் அவதிப் பட்டது.

அவள் வெளியே போயிருந்த ஒன்றரைமணி நேரத்திலும் அடிக்கொருமுறை தொட்டிலருகே போய்நின்று உறக்கத்தில் ஆழ்ந்திருக்கும் எல்லாக் குழந்தைகளிடமும் பொலியும் தெய்வீக அழகைக்கண்குளிரப் பருகி ஆறுதலடைந்திருந்தேன்.

நம் தெய்வம் என் தெய்வம் என்று உலகமாந்தரனைபேரும் சண்டைபோட்டுக் கொள்கிறார்களே, கடவுளைத் தேடி எங்கெங்கோ சென்றலைகிறார்களே அந்த மாயா வடிவம் இங்கே என் வீட்டுத் தொட்டிலுக்குள்ளே அல்லவாபடுத்துறங்குகிறது. ஏழையின் குடிசை என்ன மாதவம் செய்ததோ. ஆனல், தெய்வமே நீ வந்த வழியை எனக்குக் கூறமாட்டாயா ...

தேன் நிலவோ
தென் காற்றோ
தித்திக்கும் செந்தமிழோ
தாய்மைப் பெருந்தவமோ
தந்தைமனத் துடிதுடிப்போ
வந்த வழி எது
கண்ணே அதை
நீ வாய் திறந்து
சொல்லாயோ ?

எதை எண்ணி நான் இதனை வேளை அஞ்சி ஒடுங்கி நின்றேனே அந்தப் பூகம்பம் கடைசியில் நிகழ்ந்தே விட்டது. குழந்தை வீறிட்டு அலறத் தொடங்கினன். வானமும் பூமியும் ஒன்ருகச் சேர்ந்து என் தலையில் இடிந்து விழுந்ததுபோல திகைத்துப் போய்விட்டேன். என்பாட்டை அந்தமட்டில் நிறுத்திக்கொண்டு ஆந்தையாய், பூனையாய், கோட்டானய், குருவியாய் பலவித சப்தசாலம் செய்து வேடிக்கை காட்டினேன். தொட்டிலை மடமடவென்று வேகமாக ஆட்டிவிட்டேன். எல்லா முயற்சிகளும் வியர்த்தமாகிப்போயின. கை அயர்ந்து கால் அயர்ந்து சற்று முன்னதாகத் தொட்டிலுக்குள்ளே தெய்வ அருள் பொலியத் தூங்கிய குழந்தையா இது என்று மனமும் அலுத்துக்கொண்டது. உறங்கிக் கொண்டிருந்தபோது உலகத்தையே அடிமைப்படுத்திவிடும் மோகன மென்நகையும் விம்மலும் சுளிப்பும் மின்னல் கொடிபோல நளிந்து ஓடிய அந்தச் செம்பவள வாய்தானு இப்படிக் கதறிக் கூக்குரலிடுகிறது......

மனம் உடைந்து, குழந்தையைத் தொட்டிலைவிட்டுத் தூக்கிக்கொண்டு வெளி முற்றத்தில் இறங்கினேன...

சீதேவி தண்ணீர் கொண்டு போக குடமும் [illegible] சுமந்து தெருப்படலையைத் திறந்து கொண்டுவந்தாள். என் வீட்டுக்கு எதிராக உள்ள பனைக் காணிக்குள் குடியிருப்பவள். கல்யாணமாகி நாலு வருஷம் தான் ஆகியிருக்கும். இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகியிருந்தாள். இரண்டாவது பிறந்து இன்னும் ஒரு வருஷம் ஆகவில்லை. தகப்பனுக்குப் பனைஏறிக் கள்ளுச்சேர்க்கும் வேலை.

பனைக்காணி என்று சொன்னேன். அதுதவறு. பனைக்காடு என்றுவேண்டுமானல் சொல்லிக்கொள்ளுங்கள். கண்ணுக்கெட்டிய தூரம் கூட்டம் கூட்டமாக ஆயிரம் ஆயிரமாகப் பனைகள். அத்தனை பனைகளையும் ஒன்ருகச் சேர்த்து ஒன்றன்மீதொன்ருக அடுக்கிவிட்டால் சீதேவியின் ஆணழகன் அதன்வழியே சந்திரமண்டலத்துக்கு ஏறிச்சென்று கள்ளுக்குப்பதிலாக அமுதபானம் வடித்துக்கொண்டு வருவான். பனைக்காட்டுக்கு தான் தனிக்காட்டு இராசா மாதிரி மனதுக்குள்ளே ஒரு நினைப்பு அவனுக்கு. சுற்றியிருக்கும் இருபத்தைந்து குடிகளும் அதற்கு அட்டி சொல்வதில்லை.

விற்றுப்போகாத கள்ளு எப்பொழுகாவது வீட்டில் தங்கிப் போனல் இரண்டு போத்தலைக் கூடவே மாந்திவிட்டு "எடியே மூதேவி, நான் இருப்பது பூலோகமா, சுவர்க்கலோகமா?" என்று பிதற்றுவான். மிஞ்சினல் எங்கள் வீட்டுக்கு அவன் குரல் கேட்கும். அதற்கு மேல் அவனல் யாருக்கும் தொல்லை இல்லை...

தண்ணீருக்கு வந்த மூதேவி, மன்னிக்கவும், சீதேவி நான் குழந்தையோடு மல்லாடுவதை குடத்தை நிலத்தில் வைத்து விட்டு முற்றத்தில் நின்றவாறே வேடிக்கை பார்த்தாள். "இது எதுக்காக்கும் கத்துது. தாய்க்காரி இந்தவேளை பார்த்து எங்கே போனளோ—"

இந்தவேளை பார்த்து நீ ஒரு மூதேவி தண்ணீருக்குக் குடம் கொண்டுவந்திருக்கிறாய். இந்தவேளை பார்த்து அது ஒரு சனியன் எங்கேயோ போயிருந்து பேச்சளந்து கொண்டிருக்கிறது—

உலகமே அறியாத குழந்தை நோயுற்றுத் துன்பப்படுவதும் அழுது ஓலமிடுவதும் எனக்கு என்றைகுமே பிடிக்காத சங்கதி. "உன் கண்ணில் நீர் வழிந்தால் என் கண்ணில் உதிரம் கொட்டுகிறது" என்று இப்படி ஒரு குழந்தை அழுவதைப பார்த்துததான் கவிஞன் பாடியிருக்கவேண்டும்.

ஒருவழிக்கும் இணங்கி வராமலே குழந்தை என் கையில் சிக்குண்டு துவண்டு துவண்டு இன்னமும் அழுதுகொண்டேயிருந்தான்.

முற்றத்தில் மேலுங் கீழுமாக நான் சுழன்று கொண்டிருந்தேன்.

நிலத்தில் வைத்த குடத்தைத் தூக்கிக்கொண்டுபோய் கிணற்றடியில் வைத்துவிட்டுத் திரும்பி வந்தாள் சீதேவி. என்னிடம் கைகளை நீட்டிக் குழந்தையை வாங்கினள்.

"நீ அவனைத் தூக்கி என்ன செய்வாய்? அவன் தான் அடம் பிடிக்கிருனே!"

குழந்தை அவள் கைக்கு மாறியதும் நான் கிணற்றடிக்குப் போய் சீதேவியின் குடங்களில் தண்ணீர் நிரப்பினேன்.

பத்து நிமிஷம் ஆகியிருக்காது. நான் திரும்பி வந்த போது சீதேவியின் அணைப்பிலிருந்த பயல் அழுகை ஓய்ந்து என்னைப்பார்த்துச் சிரித்தான்.

(யாவும் கற்பனை)

**ஏ. எஸ். எம்.**

---

உருவகக்கதை

# காதலோ காதல் !

— "வட்டூர்கானம்" —

கவினுறு மலர்கள் பூத்துக் குலுங்கும் சோலை.

மாலை நேரம்.

சோலையில் மந்திகள் இரண்டு ஜோடியாகத் துள்ளிக் குதித்துத்திரிகின்றன. ஆண் குரங்கு ஓர் அழகிய மலரைப் பிடுங்கி தன் காதலியிடம் கொடுக்க பெண் குரங்கு அதை ஆவலுடன் வாங்கிக்கொள்கிறது. காதல் மனிதர்களுக்கு மாத்திரம் உரியதா? அதோ அந்தக் குரங்குகள் இரண்டும் தம் கண்களால் பேசுவது காதல் மொழிதான்.

பூ கொடுத்து ஆளை மயக்கு வதை எங்குதான் கற்றுக கொண்டீர்களோ? கேலியாகப் பேசியது பெண் குரங்கு.

ஆண் குரங்கின் முகத்தில் ஒரு புன்முறுவல்-

பெண் திரும்பவும் கூறியது: "மனிதர்களும் இப்படித்தான். ஏதேதோ எல்லாம் கொடுத்துப் பெண்களை மயக்கி விட்டு, நீ இன்றேல் நான் இல்லை என்றெல்லாம் ஆசை ஊட்டிப்பேசி விட்டு, பிற்பாடு ஏமாற்றிச் சென்று விடுவார்கள். ஆதி காலத்திலே நம் இனத்திலிருந்து பிறந்ததுதானும் மனித இனம். அப்படி இருக்கிற போது உங்களை நான் எவ்வாறு நம்புவது?"

ஆண்குரங்கிற்கு காதலிமேல் கோபம் ஏற்பட்டு விட்டது— போலிக் கோபம் தான். அது தன்னைச் சோதனை செய்து பார்க்கிறதென்பது அதற்குத் தெரியும். என்ருலும் மனிதனுடன் தன்னை ஒப்பிட்டுக் காட்டுகிறதே என்று ஆண் குரங்கிற்கு மனத்திலே வருத்தமாக இருந்தது.

"மனிதர்களுடனு என்னை ஒப்பிடுகிருய்? காதல் காதல் என்று கூறி வெறும் இச்சையை தீர்த்துக் கொள்ளுவோர் காட்டும் அன்பிலே தூய்மை இருக்கிறதா? அவர்கள் வெறும் பாசாங்குக்காரர்கள். அதனல் எம்மினமும் அப்படியா? இதை நீ இன்னும் அறியாமலா இருக்கிருய். அவர்கள் காட்டும் அன்பைப் போலவா நான் உன்னிடம் கொண்டுள்ள அன்பு இருக்கிறது. மனிதர்கள் தங்களுக்கு பேச்சுச் சக்தியும், சிந்தனைச் சக்தியும் இருப்பதனல் தாங்கள் மற்ற எல்லா உயிரினங்களிலும் பார்க்க உயர்ந்தவர்கள் என்று கருதுகிருர்கள். ஆனல் அவர்களின் குணதிசயங்களும், பண்பாடும் மற்ற உயிரினங்களின் பண்புகளுக்கு குறைந்தவையே. நான் எதைச் சொன்னலும் ஏற்பேன்.ஆனல் எம்மினத்திலிருந்து தோன்றியதுதான் மனித இனம் என்பதை கேட்டுக் கொள்ள எனக்குச் சகிக்காது" என்று இவ்வாறு ஆண் குரங்கு கூறியது

"அப்படியானல் என்னை நீங்கள் ஒருபோதும் கைவிடமாட்டீர்கள் என்று நான் நிச்சயமாக நம்பலாம்—?"

"குரங்கினத்தில் எந்த ஆண் தனது காதலியையோ மனைவியையோ ஏமாற்றி அவர்கள் தவிக்க வைத்ததை நீர் கேள்விப்பட்டிருக்கிருயா? மனிதர்கள் தான் அதில் பெயரெடுத்த மகா கெட்டிக்காரர்கள்!"

பெண் குரங்கு மேலேவாதம் செய்யாமல் நிறுத்திக் கொண்டது. 'நான் எல்லாம்வெறும் கேலிக்காகத்தான் கூறினேன். கோபித்துக் கொள்கிறீர்களா?' என்ற வண்ணம் தன் காதலன் முகத்தை வருடியது.

---

# இன்றைய எழுத்தாளர்களுக்கு வழிகாட்டிய ஆசிரியர் கிரேன்

ஸ்டீபன் கிரேன் 1875–ல் பிறந்தார். 29 வயதாகுமுன்பு காலமானர். அவர் எழுதிய காலம் சிறியதே. ஆனல் அவர் எழுதிய கதைகள் இருபதாம் நூற்ருண்டு எழுத்தாளர் பலருக்கு வழிகாட்டின. அவர் கவிதைகளும் எழுதினர். உருவக் கதைகள் பல தோன்ற அவை வித்திட்டன. முறையாகவும், இடையருமலும் உள்ளதை உள்ளபடிஎழுதிய முதல் அமெரிக்க ஓவியர் அவர் என்று சொல்லலாம்.

அவர் கல்லூரியில் ஓராண்டு படித்தார். பின்பு வேலைதேடி தமது சொந்த மாநிலமான நியூஜெர்ஸியிலிருந்து நியூயார்க் சென்றார். அவருக்கு எழுத்தார்வம் இருந்ததால், அவர் செய்தி நிருபராக வேலையேற்றர். ஆனல் இந்த இளம் நிருபருக்கு இயல்பாகவே இயற்கைச் சூழலில் பெரும் பற்றுதல் இருந்தது. செய்திகளைத் திரட்டிச் சொல்வதில் அவர் கடைப்பிடித்த நடை புகழ் பெறவில்லை. நியூயார்க் வேலையை விட்டார். தம் விருப்பப்படி அவ்வப்போது கதைகள் எழுதி வெளியிடுவதில் ஈடுபட்டார்.

முதலில் குறைகள் இருந்த பொழுதிலும் ஸ்டீபன் கிரேன் ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த நிருபர் என்பதில் ஐயமில்லை. அவரது அற்புதமான சாதனை, இலக்கியத்தில் புதுமைபடைப்பது பற்றிய இரு வெவ்வேறு கருத்துக்கள் சரியென்று புலப்படுத்தியது. எழுத்தாளர்களின் சொந்த அனுபவத்திலிருந்தே அற்புதமான கருத்துக்கள் பிறக்க முடியுமென்பது ஒரு கருத்து. போர் எதையும் பார்க்காமலே கிரேன் போரைப் பற்றி அற்புதமான நாவல் ஒன்றை எழுதினர். அவரது மற்றைய கதைகள் சொந்தவாழ்க்கையையும், தொழிலையும் அடிப்படையாகக் கொண்டவை.

ஏனெர்ஸ்ஹெமிங்வே 1929ல் "போருக்கு ஒரு முழுக்கு" (Farewell to arms) எனனும் நாவல் எழுதுவதற்கு நெடுங் காலத்திற்கு முன்பே கிரேன் 1895–ல் "தீரத்தின் சிவப்புமுக்

(9-ம் பக்கம் பார்க்க)

ஒரு கடல் வாணிபக் கதை

# நடுக்கடலில் மூன்று தினங்கள்

— என். எஸ். அரசரத்தினம் —

அரக்கனிலிருந்து அரிசி ஏற்றி வந்த வர்த்தக கப்பல் ஒன்று பகைவரின் நீர்மூழ்கியினால் தாக்குண்டு கடலில் மூழ்கத் தொடங்கியது. கைக்கு ஒரு துரும்பு அகப்பட்டாலே போதும் என்ற நிலையில் கப்பல் சிப்பந்திகள் தத்தளித்துக் கொண் டிருந்தபோது "சமுத்திரம் என்னைப் பிரித்தாலே ஒழிய நான் கப்பலை விட்டு ஓர் அடியும் நகரப்போவதில்லை" என்று கடமை காத்து நின்றார் ஒரு தீரர். அவர் தான் கப்பற் தலைவர்—

இது நிகழ்ந்தது 20 ஆண்டுகளுக்கு முன்— இரண்டாவது உலக யுத்த காலத்தில்—

வட இலங்கையில் ஊர்காவற்றுறை மக்களிடையே கடலில் துணிந்து முன்னேறும் தீரமாலுமிகள் பலர் உளர். அவர்கள் "திரைகடலோடியும் திரவியம்தேடு"ம் கப்பலோட்டிய பரம்பரையில் வந்தவர்கள் என்பதற்கு ஓர்எடுத்துக்காட்டாய் விளங்குகிறார்கள். கடல் அவர்களுக்கு ஒரு விளையாட்டு மைதானம்என்றே கூறலாம். பல வயது முதிர்ந்த மாலுமிகள் தத்தம் அனுபவங்களைச் சொல்ல ஆரம்பித்தால் கேட்பவர் உடல் சிலிர்க்கும். அவர்களின் அந்த அனுபவங்கள் சிந்துபாத்தின் சரிதையையும் ரொபின்சன் குருசோவையும் நமக்கு நினைவு படுத்தும். அப்பேர்ப்பட்ட பயங்கரமும், தீரமும் செறிந்த கதைகளில் இதுவும் ஒன்று. ஆனால் இது உண்மையாக நிகழ்ந்தது.

இரண்டாவது உலக மகாயுத்தம் ஆரம்பமாகி யப்பானியர், பர்மா, அரக்கன், அந்தமாந்தீவு, சிங்கப்பூர் முதலாமிடங்களைக் கைப்பற்றியதும் மற்றும் கிழக்குலக நாடுகளைக் கைப்பற்றத் திட்டமிட்டதும் இந்து மகாசமுத்திரத்தில் ஆங்கிலேயர் கடற் கண்ணிகளை விதைத்ததும், ஈற்றில் அவர்களே வெற்றிபெற்றதும் நாம் அறிந்ததே. இவ்வித யுத்த கருமேகங்கள் அகில உலகிலும் கவிந்துவந்த காலத்தில் நடுக்கடலில் நிகழ்ந்த ஒரு சம்பவம் இது.

கப்பல் தொழிலிலும் கடல் தொழிலிலும் கைதேர்ந்தவர்கள், ஊர்காவற்றுறை மக்கள். அன்று தொட்டு இன்று வரை மரக்கலங்களில் இந்தியாவரை சென்று ஏற்றுமதி இறக்குமதி செய்து வருகிறார்கள். இவர்களின் மரக்கலங்களில் ஒன்றே "இலட்சுமி கோவிந்தா" என்பது. இது 1941-ம் ஆண்டு தனது வழமையான வர்த்தக கடல் பிரயாணத்துக்குச் சித்தமாகியது. யுத்தம் நடைபெறுவதையும் பொருட்படுத்தாது மாலுமி தொழிலில் திறமையும் அனுபவமும் வாய்ந்த திரு. நீக்கிலாப்பிள்ளை என்பவரோடும், அவரின் கீழுள்ள இருபத்தொரு கப்பற் சிப்பந்திகளோடும், முழுப்பாய்களையும் விரித்துக் கொடியை உயர்த்தி வெகுவேகமாக இந்தியாவின் பிரசித்திபெற்ற அரக்கன் துறைமுகத்தை நோக்கிச்சென்றது. மாலுமியின் அனுபவத் திறமையினால், கடலிலேவிதைத்திருந்த கண்ணிகளால் ஆபத்து ஏதும் ஏற்படவில்லை.

அரக்கனை அடைந்ததும் அங்கு சில மாதங்கள் தங்கி ஆறாயிரம் அரிசி மூடைகளை ஏற்றிக்கொண்டு 1942-ம்ஆண்டு பங்குனி மாதம் 2-ந் திகதி, தாய்நாடாம் இலங்கையை நோக்கித் திரும்பியது திரும்பும் வழியில் காலத்துக்கேற்ற கோலத்தில் காற்று வீசாதபடியினால் வங்காள விரிகுடாப் பாதையைத் தவிர்த்து அக்கியாப்பூருக்குத் தெற்கேயும் அந்தமாந்தீவுக்குச் சற்று அருகாமையிலும் கப்பலைச்செலுத்த வேண்டியதாயிற்று. இப்பாதையில் தான் பகைவரின் நடமாட்டம் மும்முரமாய் இருந்தது.

பங்குனி மாதம் 10-ந் திகதி அதிகாலை கப்பல் சிப்பந்திகள், வெகுதூரத்தில் ஓடம்போல ஏதோ ஒன்று கடலில் நகர்வதைக்கண்டார்கள். சிப்பந்திகள் ஆச்சரிய மிகுதியினால் அதை உற்றுநோக்கிக் கொண்டிருந்தார்கள். ஏனெனில் அந்தக்கரை காணாச் சமுத்திர மத்தியில் ஓர் ஓடத்தையோ வள்ளத்தையோ காண்பதரிது. ஓடம் போலத் தோன்றிய யப்பானியரின் நீர்மூழ்கிக் கப்பல் "இலட்சுமி கோவிந்தா"வை நோக்கி வெகு விரைவாக வந்து கொண்டிருந்தது. பிற்பாடு அது பார்வையிலிருந்து மறைந்து விட்டது. மாலுமிகள் அது நேசதேசங்களின் நீர்மூழ்கிக் கப்பலாய்த்தான் இருக்க வேண்டும் என்று எண்ணியவண்ணமிருக்கையில் திடீரென்று அது மிகச் சமீபமாக ஒரு நூறுயாருக்கப்பால் கடலில் மறுபடியும் தோன்றியது. சிப்பந்திகள் எல்லோருக்கும் ஒரே ஆச்சரியமாய்ப்போய்விட்டது. இளங்கன்று பயமறியாது என்பது போல எல்லோரும் கூடிநின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால் போர்க்கப்பலில் நின்ற குள்ள மனிதர்களைப் பார்த்து இவர்கள் யப்பானியராயிருப்பார்களோ என்று சந்தேகப்பட்டுக் கொண்டிருக்கையில் அக்கப்பலிலிருந்து ஒரு பயங்கரவெடிகுண்டு வெளிப்பட்டு "லட்சுமி கோவிந்தா"வின் பாய்களையும் மரங்களையும் ஊடுருவிக் கொண்டு சென்றது.

இவ்வாறு சம்பவித்தமாத்திரத்தே நமது மாலுமிகள் தாங்கள் நிராயுதபாணிகள் என்றும் போரிடும் நோக்கம் தமக்கில்லை என்றும் விரும்பினால் கப்பலைச் சோதனைபோட்டுப் பார்க்கலாமென்றும் அறிவிக்கும் முகமாகக் கப்பலின் பாய்களைச் சுருக்கிக்கட்டினார்கள். இருந்தும் அக்கொடியவர் மனம் கசியவில்லை. மீண்டும் ஒரு குண்டு கப்பலூடே பாய்ந்து சென்றது. அது கப்பலின் சமையலறையிலிருந்த சிப்பந்தி ஒருவரின் காலைப்பிளந்ததுமல்லாமல் கப்பல் தளத்தில்நின்ற அனைவருக்கும் படுகாயமேற்படுத்திவிட்டது. அத்தோடு கப்பலில் ஏற்றிவைத்திருந்த இரு ஓடங்களில் ஒன்றையும் சிதறடித்துச்சென்றது. இதை அடுத்து மூன்றாவது குண்டும் கப்பலின் தண்ணீர் மட்ட ஓரத்தில்பாயவே லட்சுமிகோவிந்தா தண்ணீருக்குள் வெகுவிரைவில் மூழ்கத் தொடங்கியது. இந்நேரத்தில் இவர்கள் திக்கற்றவர்களாயும் நிராயுதபாணிகளாயும் இருந்தார்கள் ஆகையால் ஒருபுலி பூனையை எளிதாக கொல்லுவதுபோல யப்பானியர் இவர்களைச் சிதைந்து விட்டுச் சென்றார்கள். மூன்றாவது குண்டில் கப்பலில் ஓட்டை விழுந்து அது கடலுக்குள் மூழ்கியபோதுதான் பகைவர் யப்பானியர் என்பதுசந்தேகத்துக்கிடமில்லாமல் தெரிந்து போயிற்று

கப்பல் கடலுக்குள் மூழ்கிக் கொண்டிருந்தது. கப்பல் தலைவரின் இருபுதல்வர்களும் மற்றும் சிப்பந்திகளும் தலைவரைப் பற்றிக்கொண்டு கொடியிழந்த கொம்புபோல அலறினார்கள். கப்பல் கடலில் மூழ்கினால் தப்பிக் கொள்ள ஆதாரமொன்றுமில்லையே என்பதை நினைத்தவுடன் அவர்கள் இதயம்நின்றுவிடும் போலிருந்தது. பெருமிதப்பங்களைத்தேடி அங்குமிங்குமாக எல்லோரும் தறிகெட்டு ஓடினார்கள். ஓரோர் சமயம் திகைத்து நின்றார்கள். கப்பலிலிருந்த இருசிறு தோணிகளில் (மச்சுவாய்கள்) குண்டுபட்டுச் சிதைவுற்றது போக மற்றது படகின் கயிற்றில் சிக்கிவிட்டதால் அதை வெளியிலெடுக்கவோ, அல்லது அசைக்கவோ கூடாத நிலையிலிருந்தது. கப்பல் மூழ்கிக்கொண்டே இருந்தது. இவ்வளவு ஆபத்திலும் அல்லோல கல்லோலத்திலும் மாலுமி நீக்கிலாப்பிள்ளை மட்டும் ஒன்றையும் பொருட்படுத்தாது, மூழ்கிக்கொண்டிருக்கும் கப்பலின் தளத்தில் நின்று தமது இஷ்ட தெய்வத்தின் "சொரூபத்"தைக் கையில் ஏந்தியவாறு கண்மூடித் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். சிப்பந்திகள் அவர் தம்மைக்காப்பாற்றிக் கொள்ள ஒரு மிதப்பை அவரிடம் எடுத்துக் கொடுத்தபோது "என் கப்பலை விட்டு ஒரு அடி கூட எடுத்து வைக்க மாட்டேன். சமுத்திரம்என்னைப் பிரிக்கும்வரை நான் கப்பலை விட்டு ஒரு இம்மியும் நகர மாட்டேன்" என்று உறுதியுடன் மறுத்துக் கூறிவிட்டார். அவரது கடமைஉணர்ச்சி எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியது.

இவ்வேளை அவரின் இரு புதல்வர்களான என். எஸ். ஆரணமும், என். எஸ். நவரத்தினமும் மாலுமியின் காலைக் கட்டிக்கொண்டு "அப்பா!" எனக் கதறினார்கள். எல்லோரும் ஒன்றாக மடியப் போகிறோமே. தந்தை மடிவதை மகளும், மக்கள் மடிவதைத் தந்தையும் பார்க்கும் பாவிகளாகிவிட்டோமே என்று அலறினார்கள். இத்தருணத்திலும் கூட மூடிய கண்களை அவர் திறக்கவில்லை. ஆனால், குமுறும் எரிமலை வெடிப்பதற்குமுன் அங்கிருந்து புகைப்படலம் எழுவதுபோல மூடிய கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் பெருக்கெடுத்தோடியது. இந்நேரத்தில் கப்பல் தளத்தின்மேல் மூன்று அல்லது நாலு அங்குல அளவுக்குத் தண்ணீர் எழுந்து விட்டது. பாய்மரங்களை விட்டுக் கப்பலின் மற்றைய பாகங்களெல்லாம் கடலில் மூழ்கிவிட்டன. எல்லோரும் உணர்ச்சியின் உச்சநிலையை எட்டியிருந்தார்கள். இனி எவ்வித ஆதாரமுமில்லை என்று பெரும்பகுதியும் நம்பிக்கை இழந்துபோயிருந்தார்கள்.

சிப்பந்திகள் அனைவரும் தளபதியைச் சூழ்ந்து நின்று கண்ணீரும் கம்பலையுமாய்ப் பிரியும் தருணம். தத்தம் உயிரைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ள வழிதேடும் கடைசி நிலை. "அப்பா நீங்கள் ஒரு வார்த்தைகூடப் பேசாதிருக்கிறீர்களே. அம்மா, அண்ணன், தம்பி எல்லோரும் நம்வரவை எதிர்பார்த்தபடி இருப்பார்களே. நாம் மடிவதை எப்படி அவர்கள் அறிவார்கள்" என்று தலைவனின் இரு பிள்ளைகளும் கதறி அழுதார்கள்.

அப்போது தான் எரிமலை வெடித்தது. "மக்களே, எனது செல்வங்களே!" என்று அலறியவண்ணம் மக்களைத் தழுவி "என்னைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். நீங்கள் நிச்சயம் சுகமே போய்ச் சேருவீர்கள். அம்மா, அண்ணன், தம்பிமாரைத் தேற்றுங்கள். நான் இல்லாத குறை தெரியாதபடி உங்கள் அம்மாவைக் காப்பாற்றுங்கள். கடவுள் உங்களைக் காப்பாற்றுவார்" அவர் இவ்வாறு கூறியமாத்திரத்தே ஓர் இராட்க்ஷச அலைவந்து மூழ்கடித்து பல திசைகளிலும் ஆட்களைப் பிரித்துவிட்டது.

இககோர ஆபத்திலிருந்து தெய்வாதீனமாய் உயிர்தப்பியவர்கள் ஒன்பதுபேர் தான். அவர்கள் இவ்வரலாற்றைக் கண்ணீரோடு தான் கூறினார்கள். நாமும் கலங்கிய கண்களுடனே தான் கேட்டோம். மூன்றாவது குண்டு பிரயோகித்தவுடனே யப்பானியரின் நீர்மூழ்கி அவ்விடத்தை விட்டகன்றது. போர்முறைப்படி கூட ஒரு கப்பல் இன்னொரு கப்பலை மூழ்கடித்தால் மூழ்கடிக்கப்படுமுன் அல்லது மூழ்கடிக்கப்பட்டபின் அக்கப்பலிலுள்ள மாலுமிகளைத் தங்கள் கப்பலில் ஏற்றிக்கொள்வார்கள். அல்லது சிப்பந்திகளையெல்லாம் ஓர் இடத்தில் இறக்கிவிட்ட பின் கப்பலை மூழ்கடிப்பார்கள். ஆனால் இங்கு யப்பானியர் ஒன்றுமே செய்யவில்லை. கப்பல் மூழ்கடிக்கப்பட்ட மாத்திரத்தே அதிலிருந்தவர்களை நிர்க்கதியான நிலையில் விட்டு யப்பானியரின் நீர்மூழ்கிக்கப்பல் திரும்பவும் கடலுள் ஆழ்ந்து சென்றுவிட்டது.

'இலட்சுமி கோவிந்தா' கடலுள் மூழ்கி மறைந்தது. கப்பலிலிருந்த மிதப்புக்களும் பலகைகளும் மிதக்கக்கூடிய மற்றும் எல்லாப் பொருள்களும் மிதக்க ஆரம்பித்தன. பல அரிசி மூடைகள் மிதந்தன. 'மலையே வந்தாலும் தலையே சுமை' என்பது போல நம் மாலுமிகள் இத்தருணத்திலும் தைரியத்தைக் கைவிடாது கடலில் மிதந்த பலகைகளிலும் மிதவைகளிலும் பிடித்துக்கொண்டு தங்கள்

(10-ம் பக்கம் பார்க்க)

## மலர்க் கொத்து

— தாஸ் —

வரி வடிவில் அமைக்கப்பட்ட மொழிகளில் உலகத்திலேயே மிகவும் பழமையானது சுமேரியமொழி தான் என்று மேல்நாட்டு ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இப்போது ஈராக் என்று வழங்கப்படுவது பழங்காலத்தில் மெஸோபடேமியா என்று அழைக்கப்பட்டது. மெஸோபடேமியப் பள்ளத்தாக்கில் கண்டெடுக்கப்பட்ட களிமண் ஓடுகளில் சுமேரிய எழுத்துக்கள் காணப்படுகின்றனவாம். இவை 6000 ஆண்டுகளுக்கு முந்தியவை என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது!

∴ ∴ ∴

"கேட்டதையெல்லாம் கொடுக்கவில்லையே என்று குழந்தை வருந்துகிறது; கேட்டதையெல்லாம் கொடுத்தால் குழந்தைக்கு ஆகாதே என்று தாய் வருந்துகிறாள்" என்று இரு உயிர்களுக்கிடையில் ஏற்படும் வருத்தத்தை அழகாகச் சித்தரிக்கிறார், பெ. தூரன். 26-9-1908-ல் பிறந்த இவரது முழுப்பெயர், ம. ப. பெரியசாமித்தூரன். பி. ஏ., எல். டி. பட்டதாரியான இவர், தற்போது தமிழ் கலைக்களஞ்சியத்தின் பிரதம ஆசிரியராகப் பணியாற்றிவருகின்றார்.

∴ ∴ ∴

கடவுள் எல்லா இடங்களிலும் இருக்கமுடியவில்லை. அதனால் தாயைப் படைத்தார். — யூதப் பழமொழி

∴ ∴ ∴

ஜேகசிற்பியனின் உண்மைப் பெயர் யாதென்பது பலருக்குத் தெரியாது. ஜோசப் என்பதே இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர். இவர் ஒரு கத்தோலிக்கர். இவர் எழுதிய முதல் கதையின் பெயர் 'சுந்தரனின் சோபனம்'. 1939-ந் ஆண்டு, ஜூன் மாதம் 'நல்லாயன்' என்ற கத்தோலிக்க மாதசஞ்சிகையில் இக்கதை வெளியாயிற்று!

∴ ∴ ∴

'இதுவே வேத புத்தகம். இதில் சந்தேகமே இல்லை. பயபக்தியுடன் திரும்புவோர்க்கு இது நேர் வழிகாட்டியாக இருக்கின்றது' — திரு குர் ஆனின் முதல் அத்தியாயத்திலுள்ள முதல் மூன்று வாக்கியங்கள் இவை.

∴ ∴ ∴

உலகத்திலேயே பொலிஸகாரர்கள் அதிகமாக உள்ள நகரம், பாகிஸ்தானின் தலைநகரான கராச்சி தான். கராச்சியின் ஜனத்தொகை 23 லட்சம். இங்கு முன்னூறு பேருக்கு ஒரு பொலிஸ்காரர் வீதம் இருப்பதாக அண்மையில் மேற்குப் பாகிஸ்தானிலிருந்து வெளியான செய்தியொன்று குறிப்பிட்டுள்ளது.

∴ ∴ ∴

"உன் மனைவி யார்?, உன் மகன் யார்?, நீ தான் யார்?, எங்கிருந்து வந்தாய்? இவ்வுலக வாழ்க்கையே ஒரு விசித்திரம். இதையெல்லாம் சிந்தித்துப்பார்த்தால், உன் மயக்கம் தெளியும். அப்போது, இந்த உன் ஜீவாத்மா பரமாத்மாவே என்பதை உணர்வாய்" — சங்கரர்

∴ ∴ ∴

மனிதன் பூமியில் வசிப்பதைப் போலவே நீருக்குள்ளும் வசிக்கலாம் என்பதை பிரெஞ்சு கடல் ஆராய்ச்சியாளர் ஜாக்வெஸ் கோஸ்டோ என்பவர் கண்டுபிடித்துள்ளார். நவீன வசதிகளுடன் கூடிய வீடுகளை நீருக்குள் கட்டப்போவதாகவும்; பூமிக்கு வராமலேயே உண்டு உறங்கும் மீனவர்கள் இந்த நகரங்களில் வசிப்பார்கள் என்றும், முதலில நீருக்குள் எட்டு மீட்டர் தூரத்தில் தான் இந்த வீடுகள் கட்டப்படும் என்றும் அவர் கூறினார்!

# ★ கலை ★ அரங்கம் ★



# சந்திரபாபு டைரக்டராகிறார்!

**பிரபல நகைச்சுவை நடிகர் சந்திரபாபு, வெறும் நடிப்புடன் நின்றுவிடாது இப்பொழுது டைரக்டராகவும் மாறப்போகிறார்**

'பராசக்தி', இரத்தக் கண்ணீர், முதலிய படங்களைத் தயாரித்த நேஷனல் பிக்ஸர்சார் 'நல்ல முகூர்த்தம்' என்ற சமூகப்படத்தை விரைவில் படமாக்கத் திட்டமிட்டுள்ளனர். இந்தப் படத்தைத் தான் சந்திரபாபு டைரக்ட் செய்யவிருக்கிறார்.

இப்படத்தில் சந்திரபாபு முக்கிய பாகமேற்றும் நடிப்பார்.

ஜெமினி கணேசன், விஜயகுமாரி, முத்துராமன், நாகேஷ், மனோரமா ஆகியோர் நடிக்கவிருக்கும் இப்படத்தின் திரைக்கதை வசனத்தை இறைமுடிமணி எழுதுவாராம். 'நல்ல முகூர்த்தம்' குறுகியகாலத் தயாரிப்பெனத் தெரியவருகிறது.

## ராதாவை காப்பாற்றிய ராஜேந்திரன்

ஏழை மக்கள் வசிக்கும் சில குடிசைகளைக் கொண்ட பகுதி அது. பகலெல்லாம் பாடுபட்டு உழைத்த மக்கள் அயர்ந்து துயிலும் நேரம். திடீரென்று "தீ தீ" என்ற பெருங்குரல் அதனைத் தொடர்ந்து ஒரே குழப்பம். குடிசைகள் தீப்பிடித்து எரிந்தன.

குடிசைகளுக்கு தீ மூட்டிவிட்டுப் பதுங்கி ஓடநினைத்த கயவனை மக்கள் சூழ்ந்து வளைத்துக்கொண்டனர். மக்கள் அவன்மீது கோபமாகப் பாயப் போகும் சமயம் ஒரு இளைஞன் வந்து அந்தத் தீயவனைக் காப்பாற்றுகிறான்.

## உடற்பயிற்சியாளராக எம். ஜி. ஆர்.

அந்தக் கிராமப்பள்ளியின் உடற்பயிற்சி ஆசிரியர் அந்த இளைஞர் (எம். ஜி. ராமச்சந்திரன்) அவரின் மாணக்கர்களில் ஒருவன் தான் கமலஹாஸன் அது மட்டுமல்ல, உடற்பயிற்சி ஆசிரியரின் காதலி தேவிகாவின் தம்பி. தேவிகா கமலஹாஸன் இவர்களின் தந்தை எஸ். வி. சகஸ்ரநாமம் நடத்தும் பள்ளிதான் அது. எம். ஜி. ராமச்சந்திரனுக்கும் பள்ளி உரிமையாளருக்கும் மிகவும் வேண்டியவரான பி. எஸ். வீரப்பாவுக்கும் மனக்கசப்பு ஏற்படுகிறது. அது காரணமாக எம். ஜி. ஆர். தம் வேலையை ராஜினாமாச் செய்துவிடுகிறார். இக்காட்சிகள் ஹரிஹரன் பிலிம்ஸின் "ஆனந்த ஜோதி"க்காக வி. என். ரெட்டி டைரக்ஷனில் வாஹினி ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டன.

## சிவாஜி – சாவித்திரி ஜோடி

"நாகநந்தினி", "மாடப்புறு" ஆகிய படங்களைத் தயாரித்த பி. வி. என். புரொடக்ஷன்ஸாரின் அடுத்த தயாரிப்பில் சிவாஜிகணேசன் – சாவித்திரி ஜோடியாக நடிக்கின்றனர். இப்படத்தின் மூலம் ஜகதீசன் என்ற கதாசிரியர் திரையுலகுக்கு அறிமுகமாகிறார். படத்தின் வசனங்களை "இளங்கோவன்" எழுதுகிறார்.

இப்படத்தில் மற்றும் எம். ஆர். ராதா, முத்துராமன், தேவிகா ஆகியோரும் பிரதம பாகங்களில் நடிக்கின்றனர். ப. நீலகண்டன் டைரக்ஷனில் படம் உருவாகிவருகிறது



"அந்த முழுநிலா எப்படி" என்று கேட்க, 'உன் முகத்தைவிட அழகா?' என்று ஜெமினி பதில் கூறுகின்றாரோ என்னவோ. 'கப்பல்ஒட்டிய தமிழன்' பதில் கூறும். சினிமாஸ் திரைகளில் இப்படம் விரைவில் காட்சியளிக்கும்.

# 'கனவு பலித்ததம்மா' இரட்டை வேஷங்களில் டி. ஆர். மகாலிங்கம்

கலைமகள் படநிலையத்தின 'கனவு பலித்தம்மா' மெஜஸ்டிக்கில் மீண்டும் வளரத்தொடங்கிவிட்டது. 'குலதெய்வம்' ராஜகோபாலும், மைனாவதியும் சேர்ந்து நடித்த காட்சிகள் அண்மையில் வளர்ந்தன.

மைனாவதி சர்க்கஸ் ஆட்டக்காரியாக இப்படத்தில் தோன்றுகிறார். மைனாவதியின் ரசிகனை ராஜகோபால் நடிக்கிறார்.

சர்க்கஸ் ஆட்டக்காரி மைனாவதியைக் காண ராஜகோபால் கையாளும் தந்திரங்கள் படமாக்கப்பட்டன. இப்படத்தில் மைனாவதி இரட்டை வேஷத்தில் தோன்றுகிறார். டி. ஆர். மகாலிங்கம் இரட்டை வேஷங்களில் நடிக்கும் இப்படத்தை இராமநாதன் இயக்குகிறார்.

## பொலிஸ் நிலையத்தில் ஜெமினி!

நேரம் நடுநிசி! பூரண கர்ப்பிணியான ஒருத்தியைத் தன் ரிக்ஷாவில் ஏற்றிக்கொண்டு பிரசவ ஆஸ்பத்திரிக்கு விரைந்துகொண்டிருந்தான் அந்த ரிக்ஷாக்காரன். அந்தப் பெண் இருந்த பரிதாப நிலையில் அவன் அவளை உரியகாலத்தில் ஆஸ்பத்திரியில் சேர்த்துவிடத் துடித்த நிலையில் தன் ரிக்ஷாவில் விளக்கை ஏற்ற மறந்துவிட்டான்.

ஊரில் ரோந்து சுற்றிக்கொண்டிருந்த பொலிஸ்காரருக்கு இதெல்லாம் எப்படித் தெரியும். ரிக்ஷாவில் விளக்கு இல்லையென்று தெரிந்ததும் விசிலை எடுத்து ஊதினர். அப்பொழுது ரிக்ஷாக்காரன் இருந்த சூழ்நிலையில் அதனைப் பொருட்படுத்தாது நிற்காமல் போய்விட்டான்.

அந்தப் பெண்ணை ஆஸ்பத்திரியில் இறக்கிவிட்டு, அங்கிருந்து அந்த ரிக்ஷாக்காரன் நேரே பொலிஸ் நிலையத்திற்கு வந்தான். இன்ஸ்பெக்டரிடம் தான் விளக்கு ஏற்றாமல் போனதும், பொலிஸ்காரர் விசில் ஊதியும் நிறுத்தாமல் போனதெல்லாம் தவறுதான் என்பதனை ஒப்புக்கொண்டு அதற்கான சூழ்நிலையையும் அவரிடம் விவரித்தான்.

ரிக்ஷாக்காரனின் நேர்மையும் பரோபகார குணமும் இன்ஸ்பெக்டரை வியக்கவைத்தன.

# நாடக விமர்சனம்

## சோழனின் செல்வன்

சோழனின் மகன் உதயவர்மனுக்கு முடிசூட்டவேண்டிய நேரத்தில் அவ்விதம் நிகழ்ந்துவிடாது வஞ்சகத்தினால் சோழமன்னனைக் கொன்று அயல்நாட்டானிடம் நாட்டைக் காட்டிக்கொடுத்து விடுகிறான் தளபதி சோமநாதன்.

ஸ்ரீசரவணபவா நாடகமன்றத்தினர் சென்ற சனிக்கிழமை மனோகரா தியேட்டரில் மேடையேற்றிய நாடகத்தின் மையம் இது. இதைச் சுற்றி கதை சுழல்கிறது. இறுதியில் வழமையான கல்யாணத்துடன் நாடகம் முடிவடைகிறது.

**நடிப்பு**

சோழனின் மகன் உதயவர்மனாக நடித்த சி. டி. செல்வராஜா பழைய நடிகர் என்பது தெரியவந்தது. அதாவது நடிப்பு பழைய முறையில் இருந்தது. அவரைப் பொறுத்தவரை ஒப்பனைக் கலைஞர் சிறிது கவனம் செலுத்தியிருக்கலாம். அவரது தலையில் சிறிய முடிவைத்திருக்கலாம். அல்லது ஒன்றுமே வைக்காது இருந்திருக்கலாம். இவ்விதம் செய்திருந்தால் இளமை, கம்பீரம் நன்கு வெளிப்பட்டிருக்கும்.

தளபதியாக நடித்த கே. துரைசிங்கம் இவ்வித பாகமேற்றுப் பழக்கப்பட்டவர் என்பது அவரது நடிப்பில் தெரியவந்தது.

மற்ற நடிகர்களின் நடிப்புப் பறவாயில்லை.

மூலக்கதையும் வசனமும் எழுதியவரே இயக்குனராக சினிமாவில் இருப்பது போல் இந்த நாடகத்திலும் ஏ. எஸ். மணி எல்லாவற்றையும் கவனித்தது பாராட்டவேண்டியதுதான். ஆனால் தி[illegible]மை?...

பாடல்களை டி. நமசிவாயம் எழுதியிருந்தார். ஒப்பனைக் கலைஞர் 'மேக்கப்ராசா': ஒப்பனையை (மேக்கப்) தன்னுடன் (ராசா) பொருத்திவைத்திருக்க நியாயமுண்டு. அவரது கை பல இடங்களில் நடிகர்களுக்கு கை கொடுத்திருந்தது.

★

## கந்தனின் காதலி

பேரைப் பார்த்ததும் சமூக நாடகம் என்று சொல்லத் தோன்றுகிறதல்லவா? ஆனால் "கந்தனின் காதலி" சமூக நாடகமல்ல. பழைய "வள்ளி திருமண" நாடகமே இப்புதிய பெயருடன் சென்ற ஞாயிற்றுக்கிழமை கொழும்பு பம்பலப்பிட்டியிலுள்ள சரஸ்வதி மண்டபத்தில் அரங்கேற்றப்பட்டது.

பெயரில் மட்டும் தான் இந்நாடகம் புதுமை பெற்றுவிளங்கியது என்று சொல்லிவிட முடியாது. விநாடிக்கொரு புதுமை தோன்றிய இந்நாடகம் உண்மையில் சற்றும் எதிர்பாராத வகையில் விலாப் புடைக்கச் சிரிக்கவைக்கும் விகட சித்திரமாக அமைந்துவிட்டது!

சினிமா மோஸ்தரில் "கட்" மீசை வைத்த நாரதர், இவர் கையில் தம்பூராவையும் காணோம்! தாளக்கட்டையையும் காணோம்! இதனைப் புராண நாடக உலகில் புகுத்தப்பட்ட மிகப் புரட்சிகரமான மாற்றம் என்று சொல்லலாமா?

நாடகத்தில் வரும் கோமாளி குட்டியண்ணை வேட்டுவ மன்னன் தம்பிராஜனின் மகன் என்று சொல்லப்படுகிறது. ஆனால் வேட்டுவத் தலைவன் மகனை இப்பாத்திரம் காட்சியளிக்கவில்லை. கிராப்பும் மீசையும் வைத்து நீண்ட லாங்ஸ் தரித்த குட்டியண்ணை ஒரு "ஆபிஸ்" "பியோன்" போல் காட்சியளிக்கிறார். இது மற்றோர் மகத்தான புரட்சியா?

வசன அமைப்பிலும் இந்நாடகத்தில் பல புதுமைகளைக் காண்கிறோம். குட்டியண்ணை "கிள்ளி"யிடம் நான் உன்னை "லவ்" பண்ணுகிறேன்! நீ ஒரு "டான்ஸ் ஆடு" என்ற தோரணையில் ஆங்கிலமும் தமிழுமாகச் சக்கைப்போடு போடுகிறான்!

நாடகத்தில் கதைக்குச் சம்பந்தமற்ற நடனங்களுக்கும் கேலிக்கூத்துக்களுக்கும் குறைவில்லை. முத்துலட்சுமி, ராஜமணி என்ற நடிகைகளின் டான்ஸ் மகாமட்டம், பரத[illegible]ட்டியமாடிய பெண் மட்டும் அழகாக ஆடினர்.

இவ்வளவும் சொல்லிவிட்டதால் இந்நாடகத்திலே ஒரு சிறப்புமே இல்லையென்று முடிவு கட்டக்கூடாது. சுப்பிரமணியராக நடித்த செல்வராஜா நன்றாகப் பாடி நடித்தார். பக்கவாத்தியங்களும் நன்றாக அமைந்திருந்தன.

காட்சியமைப்பிலும் உடை விஷயத்திலும் எவ்வித கவனமும் செலுத்தப்படவில்லை. இந்நாடகத்துக்கு அண்ணாவியார் ஒருவர் இருந்ததாகவே தெரியவில்லை. எல்லோரும் தம்மனம் போனபோக்கில் கூத்தடித்தார்கள்!

யாழ்ப்பாணத்திலிருந்து வந்த நாடகம் என்று பலரும் நாடகத்திற்கு ஆவலுடன் வந்திருந்தார்கள். ஆனால் ஏற்பட்டது ஏமாற்றம் தான்!

நல்ல நடிப்புத் திறனும் இசைப் பயிற்சியும் உள்ள நடிகர் பலர் இருந்தும் நாடகம் இவ்விதம் அமைந்தது சரியான டைரக்டர்— இல்லாமைதான்.

—கலைக்குயில்



'கப்பல் ஒட்டிய தமிழனை' சிவாஜி தோன்றுவதைப் பார்த்து ஆச்சரியப்படுகிறாரோ ஜெமினி? 'கப்பல் ஒட்டிய தமிழனில்' சிவாஜி, ஜெமினி.

★

## 'சினிமாடகம்'

சென்றசனிக்கிழமை வண்ணை ஸ்ரீ சரவணபவா நாடகமன்றத்தினர் 'சோழனின் செல்வன்' என்ற சரித்திர நாடகத்தை யாழ். மனோகரா மேடையில் அரங்கேற்றிய போது நாடக அமைப்பாளரும், சிறந்த நகைச்சுவை நடிகருமான திரு. எஸ். சண்முகநாதன் (சானா) தமது தலைமையுரையில் நாடகக்கலையின் அவசியத்தையும் அதன் மூலம் மக்களுக்கு ஏற்படும்பல பலன்களையும் எடுத்துக்கூறி கடந்த ஐந்து ஆறுவருடங்களில் நாடகக்கலை எவ்வளவோ முன்னுக்கு வந்திருக்கிறது என்றும் சிலசில மன்றங்கள் நாடகத்[illegible] நாடகமாகச் செய்யாது "சினிமாடகம்" ஆக்கி நாடகத்தின் தரத்தையும் குறைப்பதோடு பொதுமக்களிடையே "என்ன நாடகம்" என்று பேசிக்கொள்ளுமளவிற்கு நடத்திக்காண்பிக்கிறார்கள் என்றும் கூறினர்.

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு மாசி மீ 19 (3 - 3 - 63)

# அனுபவங்கள்

ஐம்பத்தி எட்டாம் வருடம் கலகம் நடந்ததல்லவா? அச்சமயம் கொழும்பிலிருந்து ஓரன்பர் குடும்பத்துடனே கப்பலில் யாழ்ப்பாணம் வந்தாராம். வேலையிலிருந்து ஓய்வுபெற்று, பென்ஷன் வாங்கி இனி சிங்களவர் முகத்திலும் விழிப்பதில்லை என்று வைராக்கியம் கொண்டு, இங்கு தம் ஊரிலேயே தங்கி, ஏதாவது கைத்தொழில் ஆரம்பித்துவைக்க எண்ணினர்.

ஆனல் அவரது நெருங்கிய உறவினர் செய்த தொந்தரவு காரணமாக, தமது ஊரிலே தமது வீட்டிலும் நிம்மதியாக இருக்க முடியாமல், மறு மாதமே கொழும்புக்கு தமது குடும்பத்துடன் திரும்பிவிட வேண்டியதாயிற்று! இப்படி நேருமென்று தெரிந்திருந்தால் வேலையிலிருந்தே ஓய்வு பெற்றிருக்க மாட்டாராம்.

கதை முடியவில்லை. கொழும்பிலே தொழில் நுட்பம் தெரிந்த ஒரு தமிழரின் உதவியை நம்பி சிறிய கைத்தொழிலை ஆரம்பித்தார். தொழிலைப் பெருக்க ஒரு சிங்கள நண்பரைக் கூட்டுச் சேர்த்துக் கொண்டார். இதற்கிடையே தொழில்நுட்ப நிபுணரான அத்தமிழர், குடிப்பழக்கம் காரணமாகத் தொழிலைச் சரிவரக் கவனிக்கவில்லை. சண்டை பிடித்துக்கொண்டு விலகிவிட்டாராம்!

தொழிலை ஆரம்பித்த அன்பர், பெரும் நஷ்டமும் மனவேதனையும் அடைந்தார். தொழிற்சாலை மூடப்பட்டது. கூட்டுச் சேர்ந்த சிங்களவரின் உதவியினல், கடன் கஷ்டத்திலிருந்து விடுதலை அடைந்ததையும், தமது வாழ்விலே இது நல்ல பாடமென்றும், சிங்களவர் மீது தமக்கு ஏற்பட்டிருந்த மனக்கசப்பு அடியோடு மாறி தமிழரைவிட சிங்களவர் நல்லவர்களென்ற எண்ணம் தமக்கு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றார்.

நம்மில் பலருக்கும் இதுபோன்ற பல்வேறு அனுபவங்களிருக்கலாம். ஒரு சிங்கள அன்பர், சிங்களவரை நம்புவதைவிட தமிழரையே நம்புவாராம்! 'உடன் பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டாம், உடன் பிறந்தே கொல்லும் வியாதி, மாமலையிலுள்ள மருந்தே பிணி தீர்க்கும் அம்மருந்தைப் போல்வாரும் உண்டு' என்ற முதுரை நமக்கு நினைப்பு வருகிறது. இதைப் பற்றிச் சிந்திக்கும்போது நமக்கு யார் வேண்டியவர், யார் கூடாதவர் என்பதைத் தீர்மானிக்க முடியாமல் மனம் குழம்புவதாக இருக்கிறது.

"மேன்மைகொள் கம்யூனிஸ நீதி" உலகெல்லாம் பரவிவிட்டால், இப்பூலோகமே சுவர்க்கமாக மாறிவிடலாமென்று நம்மில் சிலர் நினைக்கின்றோம். ஆனல் கம்யூனிஸத்தின் மூலஸ்தானமான ரஷ்யாவிலும் கள்ளமார்க்கெட், கைலஞ்சம் முதலிய குற்றங்களுக்காகச் சிலர் சுடப்பட்டும், கடும் தண்டனை விதிக்கப்பெற்றுமுள்ளதாக மாஸ்கோ செய்திகள் கூறுகின்றன. கம்யூனிஸ தலைவர்களுக்குள்ளும் நாடுகளுக்குள்ளும் வேற்றுமை, மனக்கசப்பு, மோதல்கள் ஏற்படுவதாக இரும்புத்திரையைப் பிளந்துகொண்டு கிடைக்கும் பல செய்திகளைக் கேட்கிறோம். "ராமேச்வரம் போனலும் சனீச்சரன் பின்னேடே"!

பின் நமது சங்கடங்களுக்கு விமோசனம் தான் என்ன? "இப்பதவி தப்பினல் எப்பதவி வாய்க்குமோ" என்று நம்மில் சிலர் சுயநல பதவி வேட்டையில் ஈடுபட்டுள்ளதாகவும், சாதி, கட்சி, மதம், இனம், வர்க்கம் முதலிய வெறிகளைக் கிளப்பி, தங்கள் சுயநலத்தைச் சிலர் வளர்ப்பதாகவும் ஒரு பெரியார் மனங்குமுற எழுதுகின்றார். நமது குறைகளை நாம் எவ்வளவு சீக்கிரத்தில் உணர்ந்து, அதைத் திருத்திக்கொண்டு, மனம் மாறி மக்கள் குலமனைத்தும் ஒன்றென்றும், உலகெலாம் ஒரே குடும்பமாக வாழவேண்டுமென்றும் உணர்கின்றேமோ, அவ்வளவுக்கு நமது விமோசன தினமும் நெருங்குவதாகும். அதற்கான உதவியை நமது வாழ்க்கை அனுபவங்கள் நம்மையும் மீறிச் செய்துவருவதைப் பார்க்கின்றேமல்லவா?

## இரத்தினக் கம்பளம்

# சந்நியாசியாரின் 'நகைச்சுவை'

வினேபாஜி என்பவர் பல்லாயிரம் மைல் பாதயாத்திரை செய்து நிலமற்ற ஏழைகளுக்கு பூமிதானம் பெற்று வந்ததைப் போல காந்திஜி, அவர் காலத்தில் தாழ்த்தப்பட்ட ஹரி ஜனங்களுக்காக நிதி சேர்த்து வந்தார். எந்த ஊருக்கு என்ன காரியமாகப் போனலும் இந்தியாவின் ஏழைகளை அவர் மறந்ததில்லை. கொஞ்சமும் தயக்கமின்றி அவர்களுக்காகத் 'துணியை விரித்து'விடுவார்.

காந்திஜி இலங்கை வந்தது உங்களுக்கு நினைவிருக்கிறதா? எனக்கு நினைவிருக்கிறது. அப்பொழுது எனக்கு வயது ஐந்து. கிராமத்தில் தமிழ்ப் பள்ளிக்கூடமொன்றில் முதலாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன்.

காந்தி என்று ஒரு சந்யாசி தெல்லிப்பழைக்கு வந்திருப்பதாக ஒருநாள் ஊரெங்கும் பேச்சாகவிருந்தது. அவரைப் பற்றிப் பலரும் பலமாதிரிப் பேசிக்கொண்டார்கள். 'சாதிபேதம் இல்லை என்று சொல்கிறராம். அந்நிய தேசத்தவர் எங்களை ஆளக்கூடாது என்கிறராம். அந்நிய நாட்டுத் துணிகூடக் கட்டுவதில்லையாம். இதுக்கெல்லாம் சண்டை போடுகிறதற்குக் காசு சேர்த்து வருகிறராம். புரட்சிக்காரராம். கள்ளச்சாமியாம் — என்று இப்படிப் பலதினுசாகக் கிராமத்தில் பேசிக்கொண்டார்கள். இவ்வாறு பேசியவர்களிலும் பலபேர் தெல்லிப்பழைக்குப் போய் காந்தி சாமியாரைத் தரிசித்துக்கொண்டு திரும்பினர்கள். எங்கே போனலும் என்னையும் கூட்டிச் செல்லத் தவருத என் பாட்டிகூட மர்மமனிதரான காந்தி சாமியாரைத் தரிசிக்கச் சென்றபோது எனக்குச் சொல்லாமலே போய்விட்டார்.

காந்திஜியின் பாதச்சுவடு நமது நாட்டில் பட்ட மாத்திரத்தே ஊர்மக்களிடையே ஏற்பட்டிருந்த ஒரு கிளர்ச்சி என்றுதான் சொல்லவேண்டும், அன்றைய தினம் பள்ளிக்கூடம் நடைபெறவில்லை பிள்ளைகள் ஒருவரும் பள்ளிக்கூடம் போகவில்லை. இந்தச் செய்தி காந்தி சாமியார் புதினத்தை விட எனக்கு அதிக மகிழ்ச்சி அளித்தது.

அநேகமாய் 35 ஆண்டுகளுக்கு முன்பாக காந்தி சந்யாசி நமது நாட்டினருக்கு ஒரு மர்மமனிதராகத் தோன்றியதனல் கிராமத்திலிருந்து அவரைப் பார்ப்பதற்காக அன்று தெல்லிப்பழைக்குப் போனவர்கள் ஒருவர் மற்றவரிடம் சொல்லிக்கொள்ளாமலே போனர்கள். எங்கள் ஊரில் அன்றைக்குப் பள்ளிக்கூடமே சாத்தப்பட்டுவிட்டதென்றல் அதற்குமேல் என்னசொல்வது?

நமது நாட்டிற்கு வந்திருந்த காந்தி சந்யாசியாரை ஒருசமயம் யாழ்ப்பாணத் தமிழ்ப் பெண்கள் பலர் சூழ்ந்துகொண்டு ஒவ்வொருவரும் ஒரு புத்தகத்தைக் கையொப்பத்துக்காக, அவரிடம் நீட்டினர்கள் ஹரிஜன நிதிக்கு காசு சேர்ப்பதில் கண்ணுங்கருத்துமாயிருந்த காந்தி சந்யாசி, சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் கையொப்பத்துக்குப் பணம் தரவேண்டுமென நிபந்தனை விதித்துவிட்டார். ஆனல் அதற்குப் பிற்பாடும் பெண்கள் அவரை அணுகி கையெழுத்துப் புத்தகங்களை நீட்டினர்கள். காசு கேட்டாலோ "இல்லை" என்று கையைவிரித்தார்கள். இவர்கள் தங்கள் நகைகளை முன்னெச்சரிக்கையாக வீட்டில் கழற்றி வைத்துவிட்டு வந்திருந்தார்கள். இப்படித் துணிச்சலாகச் சென்ற பெண்கள் பலபேரின் கழுத்தில் தாலி இருந்தது. "உங்களுக்குத் தருவதற்கு எங்கள் கையில் ஒன்றுமே இல்லை சாமி. நாங்கள் ஏழைகள். உங்கள் கையெழுத்தை வைத்துப் பூசிப்பதற்காக பக்தி விசுவாசத்துடன் உங்கள்முன் வந்து நிற்கிறேம்" என்றார்கள். "அப்படியானல் உங்கள் கழுத்தில் ஏதோ மின்னுகிறதே. அது என்ன?, அதைக்கழற்றித் தாருங்கள்" என்றுபளிச்செனக் கேட்டார் காந்திஜி. காந்தி சாமியார் இப்படிக் கேட்பார் என்று எதிர்பார்க்காத பெண்கள் "ஐயையோ, அது எங்கள் மாங்கல்யம் அல்லவோ சாமி. தாம்பத்ய வாழ்க்கைக்கு என்றைக்கும் அழியாத சின்னமாக இருக்கும் பொருளாச்சே. எங்கள் கணவரின் அனுமதிபெருமல் நாம் அதைத் தொடக்கூடாதே" என்று கைபிசைந்து நின்றார்கள்.

காரியத்தில் கண்ணுயிருந்த காந்தி சாமியார் அவர்கள் பேச்சில் எடுபட்டுவிடவில்லை. "ஓ, அப்படியென்றல் அது உங்கள் குடும்பவிஷயமா? அப்போ முதலில் நீங்கள் வீட்டுக்குப் போய் உங்கள் கணவரிடம் அதற்கு அனுமதி பெற்று வாருங்கள் அல்லது அவர்களை வேண்டுமானல் இங்கே அழைத்து வாருங்கள். எனக்கும் ஒரு மனைவி இருக்கிருள். எனது மனமுவந்த ஒப்புதலை எழுத்தில் நான் உங்களுக்குத் தரவேண்டுமானல் அதற்கு அவளிடம் நான் அனுமதி பெற்றுகவேண்டும்" என்று ஒரே பேச்சாகக்கூறி, கையெழுத்துத் தர மறுத்துவிட்டார் காந்தி அடிகள்.

"நீலாம்பரி"

# காந்தி இயக்கத்தில் குதித்த 'கல்கத்தா வக்கீல்'

அந்நாளில் அதாவது ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பாக, அரசாங்க வேலைக்கு அடுத்தபடி அதிக மதிப்புள்ளது வழக்கறிஞர் வேலையாகும். மதிநுட்பமும் வாக்குவன்மையும் வாய்ந்தவர் வழக்கறிஞரானல் பெரும் பொருள் சேர்க்கமுடியும். பெரிய குடும்பத்தைப் பாதுகாத்து ஏழை எளியவருக்கும் ஏராளமாக உதவவேண்டும் என்று விரும்பிய ராஜேந்திரர் 1911-ல் வக்கீல் தொழிலில் இறங்கினர். அப்போது பீகார் மாகாணத்தில் உயர்நீதிமன்றம் இல்லை. ஆதலால் கல்கத்தா நகரில் உள்ள உயர் நீதிமன்றத்தில் அவர் வக்கீலாய் அமர்ந்தார். அவர் மாணவ நிலையிலேயே மதிநலம் மிகுந்தவர் என்பதைக் கேள்வியுற்ற வழக்காளிகளில் பலர் அவரிடமே தம் வழக்குகளை ஒப்படைக்க விரும்பினர். அதனல், ஆரம்பத்திலேயே அவரது வருமானம் மிகவும் பெருகியது. பெரிய வழக்கறிஞர்களும் அது கண்டு வியந்தார்கள்.

நாளடைவில் அவர் மிகப் பெரிய வழக்கறிஞராய் விளங்கினர். அதற்கு ஏற்ப, அவரது வருவாயும் பெருகியது. அச் செல்வப் பெருக்கினைக் கண்டு அவர் அகந்தை அடையவில்லை. ஆனல் அடக்கமே மிகுந்து ஏழை மாணவருக்கும் வறிய மக்களுக்கும் தாராளமாக உதவிவந்தார்.

வழக்கறிஞராய் வேலைபார்த்துக்கொண்டே 1915-ம் வருஷம் அவர் எம் எல். பட்டப் பரீட்சைக்குப் போனர். அதில் முதலாவதாய்த் தேறியதை அறிந்து வழக்கறிஞர் சங்கத்தார் அவரை மிகவும் பாராட்டினர். 1916-ல் பீகார் மாகாணத்தின் தலைநகரான பாடலிபுரத்தில் உயர்நீதிமன்றம் ஒன்று ஏற்பட்டது. உடனே ராஜேந்திரர் அந்நகர் சென்று அங்கே வழக்கறிஞராக வேலைதொடங்கினர். 'கல்கத்தா வக்கீல்' என்று வழக்காளர் பலரும் அவரைக் கொண்டாடினர். வழக்குகள் வந்து குவிய வருமானமும் குவிந்தது.

பொய்யை மெய்யென்றும், மெய்யைப் பொய்யென்றும் திரித்துக் கூறி வாதிக்கும் வல்லமை உடையவரே ஆற்றல் படைத்த வழக்கறிஞர் எனப்படுவர். ராஜேந்திரர் அவ்வழியை மேற்கொள்ளவில்லை. மெய்யான வழக்குகளையே ஏற்றுக்கொண்டார். அந்நிலையிலும் அவரது பெயரும் வரும்படியும் ஓங்கி உயர்ந்து வந்தன. பாடலிபுரத்தின் பெரிய வழக்கறிஞர்களும் நீதிபதிகளும் அதுகண்டு அவரை மெச்சினர்கள்.

ஆற்று வெள்ளம்போல வருவாய் பொங்கி வந்தும் ஆடம்பரத்தில் அவரது சிந்தை செல்லவில்லை. எளிய இனிய வாழ்க்கையிலேயே அவர் சித்தம் நிலைத்தது. அவரது நடையும் நேர்மையும் கண்டு ஆங்கில அரசாங்கமே அவரை மெச்சிநின்றது. அவருக்கு உயர்நீதிமன்றத்தில் நீதிபதிப் பதவியளிக்கவும் சமயம் பார்த்திருந்தது.

1919-ல் ரௌலட் சட்டம் காரணமாக மகாத்மா காந்தி சத்தியாக்கிரக இயக்கம் தோற்றுவித்தார். அப்போது வழக்கறிஞருட் பலர் அந்த இயக்கத்தில் ஈடுபட்டனர். ஊருக்கு உழைக்கும் ராஜேந்திரரும் அதில் ஈடுபட்டார். அதனல் அவருக்கு நீதிபதிப் பதவி கிட்டாதுபோயிற்று.

# ராஜன்பாபு மறைவுக்கு தலைவர்கள் அஞ்சலி

புதுடில்லி, மார்ச் 2.

இந்தியாவின் முன்னுள் ஜனதிபதி டாக்டர் ராஜேந்திரப் பிரசாத்தின் மறைவு குறித்து நேற்று நாடு பூராவும் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. அனுதாபக்கூட்டங்கள் பல நடைபெற்றன. பல்வேறு தலைவர்களும் அனுதாபம் தெரிவித்துள்ளனர். யுகோஸ்லேவியா அதிபர் மார்ஷல் டிட்டோ, பாரதப்பிரதமர் நேருவுக்கு அனுப்பிய அனுதாபச் செய்தியொன்றில், "தலைசிறந்தவொரு அரசியல் வாதியை பாரதம் இழந்துவிட்டதென்று" குறிப்பிட்டுள்ளார்.

ராஜேந்திர பிரசாத்தின் மறைவு குறித்து நேற்று பாட்னுவில் நடைபெற்ற கூட்டமொன்றில் உள்துறை மந்திரி திரு லால் பகதூர் சாஸ்திரி பேசுகையில், டாக்டர் ராஜேந்திர பிரசாத் ஒரு துறவி போல வாழ்க்கை நடத்தினர் என்று கூறினர்.

டாக்டர் ராஜேந்திரபிரசாத்தின் மறைவுகுறித்து தமிழ்நாடு கவர்னர் விஷ்ணுராம் மேதி, தமிழ்நாடு முதன மந்திரி திரு. காமராஜர், திரு. ஆச்சாரியகிருபாளினி, நாகலாந்து நிர்வாகத் தலைவர், ஜனசங் தலைவர், சீக்கிய தலைவர்கள், நேபாள மந்திரிசபை துணைத்தலைவர், மலாயாப்பிரதமர் திரு துங்கு அப்துல் ரஹ்மான் ஆகியோர் அனுதாபச்செய்திகள் அனுப்பியுள்ளனர். நேபாளத்திலிருந்து வெளியாகும் பத்திரிகைகள், டாக்டர் ராஜேந்திர பிரசாத்தின் மறைவுக்கு புகழ் அஞ்சலி செலுத்தின.

# உலகமேடை

டி. எம். எம்.

## பர்மிய வங்கிகள்

பர்மாவில் சகல வங்கிகளும் தேசிய மயமாக்கப்பட்டது பொருளாதாரத் துறையில் ஒரு முக்கிய சம்பவம். 14 வெளிநாட்டு வங்கிகளும், 10 உள்நாட்டு வங்கிகளும் இதனால் பாதிக்கப் பட்டிருக்கின்றன. பிரிட்டிஷ், இந்திய, மற்றும் சில வெளிநாட்டு வங்கிகள் இதில் அடங்கும். பர்மாவில் வங்கிகள் 43 சதவிகித லாபம் சம்பாதிப்பதாயும், இதை அனுமதிக்க முடியாதென்றும் தேசிய மயமாக்கப்பட்டதற்குக் காரணமாக, அரசாங்க தரப்பில் கூறப்பட்டது. இந்த வங்கிகளுக்கு 3 மாதங்களில் நஷ்டஈடு வழங்கவிருப்பதாயும் அறிவிக்கப்பட்டது. பிரிட்டிஷ் வட்டாரங்களும், இந்திய வட்டாரங்களும் இந்த நடவடிக்கை காரணமாக ஏமாற்றமடைந்திருக்கின்றன. இந்திய வங்கிகளுக்குத் திருப்திகரமான நஷ்டஈடு வழங்கப்படுமென எதிர்பார்ப்பதாய் நிதிமந்திரி திரு. மொரார்ஜிதேசாய் அறிவித்திருக்கிறார்.

சில வருடங்களுக்கு முன், (நீவினுக்கு முன்பு) இருந்த அரசாங்கம் இந்தியர்களுக்குச் சொந்தமாய் இருந்த லட்சக்கணக்கான ஏக்கர் நெல்வயல்களை மிகக் குறைந்த நஷ்டஈட்டுடன் எடுத்துக் கொண்டது ஞாபகமிருக்கும். இதனால் குறிப்பாகத் தென்னிந்தியர் முதலீடு பாதிக்கப் பட்டது. செட்டிநாடு ராஜா (ராஜா சர் அண்ணாமலை செட்டியார்) குடும்பத்துக்குச் சொந்தமாயிருந்த பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நெற்காணிகள் இதன்மூலம் பறிபோயின. நியாயமான நஷ்டஈடு பெறுவதற்கு இந்திய அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள் பயனற்றுப்போயின.

பர்மாவில் இப்போது வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டதற்கு, வேறு நிர்ப்பந்தங்களும் உண்டு. வெளிநாட்டு வர்த்தகத்தை தேசியமயமாக்கும் கொள்கையை சென்ற ஆண்டிலேயே பர்மிய புரட்சி சபை பிரகடனப்படுத்தியது. அது மட்டுமின்றி உற்பத்தி, போக்குவரத்து, விநியோகம், தகவல் தொடர்பு ஆகிய சகல துறைகளையும் தேசியமயமாக்க வேண்டும் என அப்போது அது பிரகடனப்படுத்தியது. பர்மிய புரட்சிச்சபையில் தீவிர இடதுசாரிகள் செல்வாக்கு பெற்றுவருவதே இதற்குக் காரணம். விவசாய மந்திரி டின்பே தலைமையிலுள்ள இடதுசாரிக்குழு, கம்யூனிஸ்ட் வழியில்-குறிப்பாக சீனக் கம்யூனிஸ்ட் வழியில் சிந்தித்து வருகிறது. பர்மாவிலுள்ள சகலவற்றையும் தேசியமயமாக்க வேண்டுமென்பதே அவர்கள் கொள்கை.

இதற்குத்தடையாக, மத்திய வழியைப் பின்பற்றிவந்த பிரிகேடியர் ஆங்கீயை ஒழித்துக் கட்டுவதில் சென்றமாதம் அவர்கள் வெற்றி பெற்றனர்.

பர்மியப் புரட்சிச்சபையில் ஜெனரல் நீவினுக்கு அடுத்து மந்திரி ஆங்கீ, இரண்டாவது முக்கியத்துவம் பெற்றிருந்தார். பர்மிய ராணுவத்தின் உபதலைவர் பதவியிலிருந்தும், வர்த்தகமந்திரிப் பதவியிலிருந்தும், பர்மா எண்ணெய்க் கம்பெனி டைரக்டர்கள் சபைத் தலைவர் பதவியிலிருந்தும் சென்ற மாத ஆரம்பத்தில் அவர் ராஜினாமாச்செய்ததுடன், புரட்சிச்சபையிலிருந்தே அடியோடு ராஜினாமாச் செய்துவிட்டார்.

பர்மிய உயர்தர ராணுவத் தலைவர்களிடையே கொள்கைப்போராட்டமும், தனிப்பட்டவர் முக்கியத்துவமும், நீவின், 1958-60-ம் ஆண்டில் இடைக்காலப்பிரதமராய் இருந்தபோதே உருவாகிவிட்டன. அப்போது நீவினுக்குப் பக்கபலமாக இருந்தவர்கள் ஆங்கீயும், இப்போது இஸ்ரேலில் பர்மியஸ்தானிகராக இருக்கும் மாங் மாங்குமே ஆகும். பர்மிய ராணுவத் தலைவர்களிலேயே ஆங்கீதான் நடைமுறை சாத்தியமான வழியைப்பின்பற்றும் திறமைமிக்க நிர்வாகியாக விளங்கிவந்தார்.

சோஷலிஸக் கொள்கையில், கடந்த 20 வருடங்களாகவே அவர் நம்பிக்கை கொண்டுள்ளார். பர்மிய வழியிலேயே சோஷலிஸத்தை அடைய முயற்சிக்கவேண்டுமென்பது அவரது கொள்கை. சீன-பர்மிய எல்லை விஷயத்தை அவர்தான் வெற்றிகரமாகத் தீர்த்து வைத்தவர். பர்மாவில் வெளிநாட்டு மூலதனத்தைக் கவர அவர் மேற்கொண்ட முயற்சிகளுக்கு புரட்சிசபை முட்டுக்கட்டையிட்டது. இப்போது மூலதனங்கள் தேசிய மயமாக்கப்படுகின்றன.

பர்மிய ராணுவத்தலைவர்களிடையே கடந்த சில ஆண்டுகளாக ஏற்பட்டுள்ள அபிப்பிராய பேதங்களும், கடும்பிடிகளும் தீவிர இடதுசாரிகளுக்கு வெற்றியை அளித்திருக்கிறது. எனவே காலப்போக்கில் படிப்படியாக இன்னும்பல துறைகள் தேசியமயமாக்கப்படும் என எதிர்பார்ப்பதில் தவறில்லை.

★

## ஈதுல்பிதர்

சமீபத்தில் இந்தியாவெங்கும் நடைபெற்ற ஈதுல்பிதர் (ரம்ழான்) வைபவங்களில் ஹிந்து—முஸ்லீம் ஒற்றுமை மகிழ்ச்சிக்குரிய முறையில் வெளிப்பட்டது. ஹிந்துக்களும் சீக்கியர்களும் தங்கள் முஸ்லீம் சகோதரர்களுடன் இதய பூர்வமாகப் பிரார்த்தனைகளில் கலந்துகொண்டனர். உபராஷ்டிரபதி டாக்டர் ஸகீர் ஹுஸெய்னின் இல்லத்திற்கு ஆயிரக்கணக்கான ஹிந்துக்களும் சீக்கியர்களும் சென்று ஈதுல்பிதர் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டனர். அதேபோல் ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு முஸ்லீம்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

டில்லி ஜும்மாமசூதியில் நடைபெற்ற பிரம்மாண்டமான பிரார்த்தனையில் டாக்டர் ராதாகிருஷ்ணன் உட்படப் பல பெரிய தலைவர்கள் முஸ்லீம்களுடன் கலந்துகொண்டனர். கல்கத்தாவில் முதன் மந்திரி டாக்டர் பி. ஸி. ஸென் பிரார்த்தனையில் கலந்துகொண்டார். ஜம்மு-காஷ்மீரில் பிரதம மந்திரி பக்ஷிகுலாம் முகம்மதுடன் ஹிந்துக்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

நாடெங்கும் ஹிந்துக்களும், முஸ்லீம்களும் பரஸ்பரம் வாழ்த்துத் தெரிவித்துக் கொண்டனர் இந்த அழகான காட்சிகளைப்பற்றிய செய்திகள் வந்தபோது, நமது நினைவும் பின்னோக்கிச் சென்றது.

ஆம். காந்தி மகாத்மா. ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமைக்காக வேள்வித்தீயில் குதித்த ஒப்பற்ற செம்மல் அது. இந்திய தேசிய காங்கிரஸ் ஆரம்பமானபின், இருபெரும் சமூகங்களுக்கிடையே ஏற்பட்டிருந்த ஐக்கியம், மகாத்மாவின் காலத்தில் தெய்வீகத்தன்மை பெற்றது. முகம்மதலிஜின்னா காங்கிரஸைவிட்டுவிலகி, முஸ்லீம் லீக்கை நிறுவிய காலம்வரை இந்த ஒற்றுமை அன்பென்னும் தங்கக் கயிற்றால் பிணைக்கப்பட்டிருந்தது. முஸ்லீம்களில் மௌலானா முகம்மதலி, மௌலானா ஷவுக்கத்அலி, பத்ருதீன் தயாப்ஜி, முகம்மதலி ஜின்னா, மௌலானா அபுல்கலாம் அஸாத், டாக்டர் அஸப்அலி போன்ற மாபெரும் மேதாவிகள் நினைவுக்கு வருகிறார்கள். சுதந்திரப் போராட்டத்தில்-அரசியல் துறையில்-சமூகத் துறையில் அவர்கள் இணைந்து செயல்பட்டார்கள். பரஸ்பரம் ஒருவர் உணர்ச்சியை மற்றவர் புண்படுத்தாமல் வாழ்வுக்கே வழிகாட்டியாக இப்பெரும் தலைவர்கள் விளங்கினர். முஸ்லீம்கள் பசுவதைத் தடையை மனப்பூர்வமாக ஆதரித்து ஹிந்துக்களின் உணர்ச்சியை கௌரவித்தார்கள்.

"ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்குமிடையே ஒரு இணைப்புப் பாலம்" என சரோஜினிதேவியால் பாராட்டப்பட்ட காயிதே ஆஸாம் முகம்மதலி ஜின்னா, காங்கிரஸிலிருந்து விலகுமுன்பும், விலகியபின்பும் இரு சமூகங்களின் ஒற்றுமைக்காக காந்திஜீ மேற்கொண்ட தியாகம் தனிப்பெரும் சரித்திரமாகும்.

கடைசியாக ஒரு சம்பவம். 1947-ம் ஆண்டு வகுப்புக்கலவரத்தின் போது, லட்சக்கணக்கான ஹிந்துக்களும், முஸ்லீம்களும் படுகொலை செய்யப்பட்டனர். அச்சமயம் வங்காளத்தில் காந்திஜீ, சாகும்வரை மேற்கொண்ட உண்ணாவிரதம், 24 மணிநேரத்தில் வெற்றிபெற்றது. கலகம் ஓய்ந்தது. தாக்கிய ஆயுதங்கள் காந்திஜியின் காலடியில் சரணடைந்தன. 75 ஆயிரம் பேர் கொண்ட ராணுவப்படை, கலகத்தை அடக்க முடியாது திணறிய போது, காந்திஜீயின் 24 மணிநேர உண்ணாவிரதம் அதை நிறுத்திய அற்புதத்தை, "ஒரு மனிதனைக் கொண்ட எல்லைப்புற சேனை" என மவுண்ட்பாட்டன் பிரபுவருணித்தார்.

இந்தச் சம்பவத்துக்கு முன்பும், பின்பும், ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமைக்காக நூற்றுக்கணக்கான அற்புதங்களை காந்திஜீ தம் வாழ்நாளில் நிகழ்த்தியிருக்கிறார். பிரிவினைக்குப்பின், இந்தியா பாகிஸ்தானுக்குக் கொடுக்க வேண்டியிருந்த 55 கோடி ரூபாய், இந்தியாவுக்கு விரோதமாக உபயோகிக்கப் படும் எனக் கருதப்பட்ட சமயத்தில், அதைக் கொடுக்குமாறு காந்திஜி உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். 55 கோடி ரூபாயைவிட, காந்திஜீயின் உயிர்தான் பெரியது என்று கருதி, இந்தியஅரசாங்கம் அவருக்கு அடிபணிந்துவிட்டது. இவ்வித நிகழ்ச்சிகளே கோட்ஸேஉருவில்வந்து, மன்னுயிர் காத்த மகாத்மாவை மரித்துவிட்டது.

எனினும் தேசத்தில் தோன்றியுள்ள புதிய நெருக்கடி, மீண்டும் அந்த ஐக்கியத்தைக் கொண்டுவந்திருப்பதை இந்த ரம்ழானில் காணமுடிந்தது. ஒரு சுபிட்சமான எதிர்காலத்தையே இது பிரதிபலிக்கிறதெனலாம்.

★

## அமெரிக்க உதவி

கடந்த பெப்ரவரி 25-ம் திகதி 24 கோடி டாலர் (ரூ 114 கோடி) இந்தியாவுக்குக் கடனளிக்கும் ஒப்பந்தத்தில் அமெரிக்கா கையெழுத்திட்டது. ஒரே சமயத்தில் இவ்வளவு பெரிய கடன் தொகையை, பிரிட்டனைத்தவிர வேறு எந்த நாட்டுக்கும் அமெரிக்கா அளித்தது கிடையாது. (1948-ம் ஆண்டு மார்ஷல் திட்டத்தின் கீழ், 33 கோடியே 27 லட்சம் டாலர் கடனை ஒரே ஒருசமயம் பிரிட்டனுக்கு அமெரிக்கா அளித்தது.) இந்தியா பெற்றிருக்கும் இந்தக்கடனுக்கு வட்டி கிடையாது. முதல் 10 வருடங்களில் திருப்பித்தரப்படவேண்டியதில்லை. அதற்கடுத்த 40 ஆண்டுகளில் இது திருப்பிச் செலுத்தப்படும். 3-ம் ஐந்தாண்டுத் திட்டத்தின் இரண்டாவது ஆண்டுக்கு, சர்வதேச "இந்திய உதவி" யின் கீழ், அமெரிக்கா இந்தியாவுக்கு வாக்களித்துள்ள 43 1/2 கோடி டாலரில் இது ஒரு பகுதியாகும். பொருளாதார அபிவிருத்திக்காக, 3-ம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், இந்தியாவின் அத்தியாவசிய இறக்குமதிக்கு புதியகடன் பயன்படுத்தப்படும். 3-வது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு, இதுவரைஅமெரிக்கா 91கோடி. டாலர் உதவியிருக்கிறது. மேலும், இதுவரை மொத்தம் 2000 கோடி ரூபாய் அமெரிக்கா இந்தியாவுக்கு அளித்திருப்பதாகத் தெரிகிறது.

அமெரிக்கா, இந்தியாவின் பொருளாதார அபிவிருத்தியில் இவ்வளவு அக்கறை எடுத்து, பெரிய அளவில் உதவி செய்வது, தனதுநீண்டஎதிர்காலப் பாதுகாப்பை உத்தேசித்தே எனக் கூறப்பட்ட போதிலும், இதன் அரசியல் விளைவுகள் மிகவும் நன்மையையே உண்டாக்கும். இந்தியாவுக்கு அளிக்கப்படும் உதவி ஆசியாவில் ஜனநாயகத்தைப் பலப்படுத்தும் என்பதையும் எவரும் மறுக்கமுடியாது. பொருளாதார அபிவிருத்தியின் மூலம், வாழ்க்கைத்தரம் உயர்ந்துவிட்டால், பிறகு அங்கு கம்யூனிஸத்துக்கு இடமிருக்காது என்பதே அமெரிக்காவின் கருத்து. கருத்து எதுவாயினும் ஒரு நல்ல காரியத்துக்கு இந்த உதவி அளிக்கப்படுவதால் இது வரவேற்கத்தக்க செயலாகும். "இந்திய உதவி"க்கமிட்டியில் அமெரிக்காவைத தவிர பிரிட்டன், மேற்கு ஜெர்மனி, கானடா, ஜப்பான் ஆகியநாடுகளும் இருக்கின்றன. இந்நாடுகளும் இந்தியாவுக்கு நிதிஉதவி செய்கின்றன. ஆயினும் இவையெல்லாம் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன்களாகும். இதுவரை குறிப்பிட்ட தவணையில், குறிப்பிட்ட அளவு ஒழுங்காகக் கடன் திருப்பிச் செலுத்தப்பட்டுவருகிறது. இந்தியாவில், அபிவிருத்தி ஓடும்ஓட்டத்தைப் பார்த்தால், இவைகள் எல்லாம் ஒழுங்காகச் செலுத்தப்பட்டுவிடும் என்பதில் நம்பிக்கை கொண்டே, புதியநாடுகளும், உலகவங்கியும் போட்டிபோட்டுக் கொண்டு உதவி செய்ய முன்வருகின்றன.

# பூஜ்யம் தபால்

**ஸ்ரீமா பண்டாரநாயக்கா அவர்கள்,**
**பிரதம மந்திரி,**
**அலரி மாளிகை,**
**கொழும்பு.**

அம்மணி!

உலகிலேயே ஒரு பெண்ணைப் பிரதமராகக் கொண்ட இலங்கைக்கு, அமெரிக்கா ஒரு பெண்ணையே ஸ்தானிகராக நியமித்தது இரு பெண்கள் மூலமும் இலங்கை-அமெரிக்க நல்லுறவுகள் பலப்பட்டு, அதிக நன்மை ஏற்படுமென்று நம்பினேன். ஆண்களின் கையிலுள்ள உலக ஆட்சி பெண்களின் கைக்கு மாறினால் உலகம் சமாதானமாக சந்தோஷமாக வாழும் என்றும் நினைத்தேன். ஆனால் சென்ற சிலவாரங்களில் இங்கு நடந்துள்ள நிகழ்ச்சிகள் என் அந்த நம்பிக்கையைச் சிதைத்துவிட்டது.

அமெரிக்காவின் உதவி நிறுத்த விஷயமாகத் தாங்கள் எடுத்த நடவடிக்கைகளெல்லாம் சரி. அந்த உதவி நிறுத்தத்தை 'நியூயார்க் டைம்ஸ்' எனும் அமெரிக்கபத்திரிகையே கண்டித்து எழுதியிருக்கையில் இலங்கையின் மானத்தைக் காக்கத் தாங்கள் எடுத்த நடவடிக்கையை இங்கு யார்தான் முன்வந்து ஆட்சேபிப்பர்?

ஆனால், இங்கு அமெரிக்க ஸ்தானிகராகவுள்ள ஒரு சகோதரி, தங்களை நேரில் காணவேண்டுமென்று கேட்டதற்கு, தாங்கள் சம்மதிக்காமல், ஓர் அதிகாரியைப் பார்க்கும்படி கூறிவிட்டீர்களாம். உண்மைதானா?

கருத்து வேற்றுமைகள் எவ்வளவு இருப்பினும், ஒரு பெரிய நாட்டின் பிரதிநிதியை, ஒரு பெண்மணியை தாங்கள் இப்படி அவமதிப்பீர்களென்று நான் நம்பவில்லை.

"உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்பது முதுமொழி. அமெரிக்காவிடமிருந்து நாம் இதுவரை எவ்வளவோ உதவிகளைக் கைநீட்டிப் பெற்றிருக்கிறோம். அந்த நன்றியை நாம் மறக்கமுடியுமா? நமது வீட்டுக்கு வந்துள்ள பச்சை விரோதியையும் மரியாதையாகக் கௌரவிக்கவேண்டுமென்ற பண்பைத் தாங்கள் அறிந்தே இருப்பீர்கள்.

நிற்க. இந்தியாவுக்கும் சீனத்துக்கும் எல்லையிலே சமாதானம் செய்துவைக்க முன்வந்துள்ள தாங்கள், ஒரு விஷயத்தைக் கவனித்தீர்களா? எல்லை விஷயமாகப் பேசுவதுடன் நிறுத்தாமல், நேருஜியையும், அவரது அரசாங்கத்தையும் சீனம் கண்டபடி தாக்கி, இங்கு பிரசாரம் செய்கிறதாம். பொதுமக்களால் அமோகமாகத் தெரிவுசெய்யப்பட்ட இந்திய ஜனநாயக அரசாங்கத்தை, சீனம் இப்படித் தாக்குவது, தங்கள் சமாதான முயற்சிக்கு உதவாததுடன், கம்யூனிஸ்ட் அல்லாத தங்கள் அரசாங்கத்தையும் மறைமுகமாக தாக்குவதாகாதா? இந்தியாவுக்கு இங்கிருந்து உதவிப் பணம் அனுப்பமுடியாதென்று தடுத்த தாங்கள், இதையும் கவனித்து, தேசிய நன்மைக்கான முறையில், எச்சரிக்கையாக இருந்து நடுநிலைமையைக் காத்துக்கொள்ளவேண்டுமென்றே இதை எழுதலானேன். ஆனால் தங்களுக்குப் பக்கத்திலுள்ள சில அரசியல் கன்றுக்குட்டிகள், எனது இந்தக் கடிதத்தைத் தங்களிடம் சேர்ப்பார்களா என்பது சந்தேகமே.

இப்படிக்கு,
பூஜ்யம்.

குறிப்பு:

இங்கு பத்திரிகைகளுக்கும், பத்திரிகைக்காரர்களுக்கும் தங்கள் பெயரால் போட இருக்கும் புதிய கெடுபிடித் தடைகளைப் பார்த்ததும், தங்களுக்குக் கடிதங்கள் எழுதவும் இனிச் சுதந்திரமிராதென்றும், இந்தப் பேனாத்தொழிலையே விட்டு விடலாமென்றும் தோன்றுகிறது. இங்கு பத்திரிகைகளையே அடியோடு ஒழித்துவிட்டால் நல்லதல்லவா?

"பூ"

# ஆதிமனிதன் தோன்றி 20 லட்சம் ஆண்டுகள்

## அணுசக்திப் புதுமையோடு வளரும் ஆராய்ச்சி

அமைதிப்பணிக்கு அணுசக்தியைப்பயன்படுத்த அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட பெரும் நடவடிக்கைகளின் காரணமாக 1961-ம் ஆண்டில் விஞ்ஞானத்துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பல்கலைக்கழக விஞ்ஞானிகளும், வைத்தியர்களும், தொழில் துறையிலுள்ளவர்களும், யு. எஸ். அரசாங்கமும் ஒன்றுசேர்ந்து கூட்டாக ஒத்துழைத்து, அரும் முயற்சி எடுத்து வந்ததன் பயனாக பல துறைகளில் யு. எஸ். முதலிடம் பெறுவது சாத்தியமாயிற்று.

கதிரியக்கக் கரிப்பொருளிலிருந்து காலத்தை நிர்ணயிப்பதும், ஆதி மனிதன் தோன்றிய காலத்தை நிர்ணயிப்பதும், அணுசக்தியால் இயங்கும் வானிலை ஆராய்ச்சிக்கூடத்தை நிறுவுவதும் சாத்தியமாயிற்று; இவை அமெரிக்காவின் சாதனைகளாகும்.

ஹைட்ரஜன் குண்டு வெடிக்கும் போது ஏற்படும் பிரமாண்ட சக்தியையும் உஷ்ணத்தையும் இதுவரைபயன்படுத்த முடியாமலிருந்தது. இதனைக் கட்டுப்படுத்த வெஸ்டிங்ஹவுஸ் ஆராய்ச்சிக் கூடத்தில், ஒரு சாதனத்தை உபயோகிக்க முக்கிய ஆராய்ச்சி நடைபெறலாயிற்று. ஆகவே ஹைட்ரஜன் குண்டு வெடிக்கும் பொழுது வெளிப்படும்சக்திகளைக் கட்டுப்படுத்தி, நமக்கு பயன்படக்கூடிய மின்சார சக்தியை உற்பத்தி செய்வதற்கான வழி பிறந்தது.

இந்த ஆராய்ச்சிக் குழுவின் தலைவர், பௌதிக விஞ்ஞானி டாக்டர் ஜே. ஜே. ஹாம், செப்டம்பர் மாதத்தில் மேற்கண்ட சாதனத்தை அமைத்துத் தந்தார். ஹைட்ரஜன் குண்டில் அடங்கியுள்ள சக்தியை இதுபோன்ற சாதனம் கட்டுப்படுத்தும் என்று துணிந்து கூறினார். வெளிப்படும் உஷ்ணத்திலிருந்து நமக்குப் பயன்படும் மின்சார சக்தியை உண்டுபண்ணும் காலமும் தொலைவிலில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

புருக்ஹேவன் தேசிய ஆராய்ச்சிக் கூடத்தில் ஜூலை மாதத்தில் அணுசக்தி விஞ்ஞானிகள், துகள்களின் வேகவளர்ச்சியை அதிகரிக்கும் சிங்க்ரோட்ரான் கருவியைப் பயன்படுத்திப் பலவகை அடிப்படை பௌதிக ஆராய்ச்சிகளை நடத்தி வந்தனர். 3,000 கோடி எலக்ட்ரான் வோல்ட் சக்தியுள்ள புரோட்டான் கற்றையைமூன்று தினங்கள் உற்பத்திசெய்தனர். துகள் வேக வளர்ச்சிக் கருவியில உற்பத்தியான சக்தியில் இதுவே மிகவும் உயர்ந்த பட்சமானது என்று கருதப்படுகிறது.

### ஆதிகாலமனிதன்

கலிபோர்ணியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஜே. எப். எவர்ன்டன், ஜி. எச். கர்ட்டிஸ் ஆகிய இரண்டு அமெரிக்க விஞ்ஞானிகளும், ஆதி மனிதன் சுமார் 20 லட்சம் வருடங்களுக்கு முன் (இதுவரை நம்பப்பட்டதைவிட மும்மடங்கு காலத்திற்கு முன்னால்) தோன்றினான் என்று முடிவுசெய்தனர்.

ஜின் ஜான் த்ரோபஸின் மண்டை ஓட்டின் படிவம் புதைந்திருந்த பாறையின் காலத்தைக்கண்டுபிடிக்க கதிரியக்க-பொட்டாஸியம்-ஆர்கான் கதிரியக்க முறையை பயன்படுத்தினார்கள். ஆதிமனிதன் வசித்துவந்த காலத்தில எரிமலை கக்கியதனால் இப்பாறை உண்டாயிற்று.

### ஆளில்லாத வானிலை ஆராய்ச்சிக்கூடம்

உஷ்ணம், காற்று, வாயு அழுத்தம் முதலியன பற்றிய விவரமான அறிக்கைகளை அணுசக்தி மூலம் இப்பொழுதுபெறுவது சாத்தியமாகிறது. மனிதர்கள் இயக்காமல் தானே இயங்கக்கூடிய வானிலை ஆராய்ச்சிநிலையம் கனடாவின் வடகோடியிலுள்ள ஆக்ஸல் ஹீபர்க் தீவில் ஆகஸ்ட் மாதத்தில் செயல்படத் தொடங்கியது. வானிலை பற்றியபடங்கள் இதுவரை நிரப்பப் படாமல் இருந்தன. இப்பொழுது 3மணி நேரத்திற்கு ஒரு தடவை இந்நிலையம் வானிலைபற்றிய அறிக்கைகளை அனுப்புகிறது. இது, இரண்டு வருஷங்கள் எவ்வித எரிபொருள் சக்தியும் ஊட்டப்படமல் இயங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு ஸ்டிரான்ஷியம் - 90 (ஒரு ரூத்தல்) விசை அளிக்கிறது.

ஸ்டான்போர்டு பல்கலைக் கழகத்தில் 7 வருஷங்களாக அணுவைப் பிளக்கும் பரிசோதனைகளை நடத்தியபின் கடந்த ஏப்ரல் மாதத்தில் அணுஉட்கரு பற்றியபுதிய வடிவ அமைப்பு தெரியவந்தது. எலக்ட்ரோ - டைனமிக்ஸ் அளவுக் கொள்கையை ஆதரிக்கும் சான்றுகளை விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர். மின் ஏற்றத்தில் மாறுபடும் புரோட்டான், நியூட்ரான்களின் ஒற்றுமை பற்றி இதுவரை விளக்கிக்கூற முடியாமலிருந்தது.

மூலகம்—103 என்று குறிப்பிடப்படும் புதியமூலகம் மூன்று வருஷ பரிசோதனைக்குப் பின் கிடைத்தது. கலிபோர்ணியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த லாரன்ஸ் கதிரியக்க ஆராய்ச்சிக் கூடத்தில் ஆல்பர்ட் கியார்ஸோ, டார்ப்ஜார்ன் ஸிக்கலாண்ட், ஆல்மன் இ. லார்ஷ், ராபர்ட் எம். லாட்டிமர் ஆகியோர் இதனைக்கண்டு பிடித்தனர்.

நோபல்பரிசுபெற்ற லாரன்ஸ் பெயரால் (அணுவைப் பிளந்து வெற்றி கண்டவர்; இந்த ஆராய்ச்சிக்கூடத்தை நிறுவியவர்) இந்த மூலகம் 'லாரன்ஸியம்' என்று பெயரிடப்பட்டது.

### புரதத் தொகுப்பைக் கட்டுப்படுத்தல்

உயிரின் அடிப்படைத் தத்துவங்களைத் தெரிந்து கொள்ள ஏப்ரல் மாதத்தில் அணுசக்தியை டாக்டர் ஜி. டேவிட் நோவல்லி (ஆப் ரிட்ஜ் தேசிய ஆராய்ச்சிக் கூடத்தைச் சேர்ந்தவர்) பயன்படுத்தினர். உயிரின் அடிப்படை வளர்ச்சிமுறைகளை பரிசோதனைக் குழாயில் (உயிருள்ள ஸெல்கள் நீங்கலாக) கூர்ந்துகவனிக்கக்கூடிய வழியைக் கண்டுபிடித்தவர்.

டாக்டர் நோவல்லி கையாண்ட உத்தி வருமாறு: செய் பொருளில் குறிப்பிட்ட பகுதிகளை கதிரியக்கத்திற்கு உட்படுத்தி புரதத்தின் தொகுப்பை தவிர்ப்பதாகும். அதன்பின் நியூக்ளிக் அமிலத்தின் பகுதியைச் சேர்த்துமீண்டும் புரதத்தின் தொகுப்பைத் தூண்டுவதாகும். இவ்வாறு பரிசோதனைக்குழாயில் உயிரின வளர்ச்சியை நிறுத்தி, மீண்டும் ஆரம்பித்தார்.

இதனால் புரதத்தொகுப்பு செய்முறையை ஆராய்ச்சியாளர் கண்ணால் காணும் சந்தர்ப்பம் கிடைத்தது.

### அணுசக்தி மின்கலம்

விண்வெளியிலே செலுத்தும் செயற்கைக் கோளில் முதன் முதலாக அணுசக்தி மின்கலத்தை ஜூன் மாதத்தில உபயோகிக்க ஆரம்பித்தார்கள். டிரான்ஸிட் 4-ஏ. என்ற செயற்கைக் கோளின் 4 ஒலிபரப்புக் கருவிகளில் இரண்டிற்கு இவ்வாறு மின்சாரசக்தி கிடைத்திருக்கிறது. இதில் பொருத்தப்பட்ட மின்விசை உற்பத்திக்கருவி ஒரு திராட்சைப்பழம் போன்ற அளவுள்ளது. 207 வாட் மின்சக்தியை உற்பத்தி செய்கிறது. 5 வருஷங்களுக்கு இது போதுமானது. இவ்வளவுகாலம் இவ்வளவு மின்விசை உற்பத்தி செய்ய ஐந்து டன் எடையுள்ள சாதாரணபாட்டரிகள் தேவை.

### புற்றுநோய் ஆராய்ச்சி

ஆராய்ச்சி நடத்தி, புற்றுநோய் பற்றி நடப்பு ஆண்டில் கண்ட தகவல்கள் வைத்தியத் துறையில் புதிய நம்பிக்கையை அளித்தன.

மார்புப் புற்றுநோய்க்கு கதிரியக்க யாற்றியத்தை உபயோகித்தனர். 24 நோயாளிகளுக்கு கலிபோர்ணியா வைத்திய நிலையத்தில் இந்த சிகிச்சை அளித்ததில் மூன்றில் ஒரு பங்கினருக்குப் புற்றுநோய் குறைய ஆரம்பித்தது.

பிட்யூட்டரி சுரப்பி இருக்கும் மண்டையோட்டின் பகுதிக்கு மூக்கு வழியாக இக்கதிரியக்கப் பொருளின் சிறிய துளிகளைச் செலுத்துவதன் மூலம் புற்றுநோய் வளர்ச்சியைத் தூண்டும் ஹார்மோன்களைக் கட்டுப்படுத்த முடிந்தது. இம்முறை முற்றிலும் புதிதானது.

ஆழத்தில் புதைந்துள்ள புற்றுநோய்களுக்கு அயோவர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் டைட்டஸ் ஸி. இவான்ஸ், டாக்டர் ஜேம்ஸ் ஜே நிக்ஸன் ஆகிய இருவரும் முதலில் கதிரியக்க சிகிச்சை முறையைத் தெரிவித்தார்கள்.

புற்றுநோயை ஒழிக்கும் திறமை கதிரியக்கத்தின் மூலம் அதிகரிப்பதற்கு முதலில் வளர்ச்சிப் (புற்றுநோய் உள்ள பகுதி) பகுதிக்கு காற்றைச் செலுத்தினார்கள். எல். எச். கிரே என்னும் பிரிட்டிஷ் விஞ்ஞானி, காற்று ஊட்டப்படும் பொழுது கதிரியக்கச் செயலுக்குப் புற்றுநோய் பணிகிறது என்று கண்டுபிடித்ததை அனுசரித்து இப் புதிய சிகிச்சை முறை கையாளப்படுகிறது.

அமெரிக்கா அணுசக்திமூலம் மின்விசை உற்பத்தியை அதிகரித்துள்ளது. செபடம்பரில் 11 சம்பெனிகள், அணுஉலையை அமைத்து 4,10,000 கிலோவாட் மின்விசை உற்பத்தி செய்தன. 1962-ம் வருஷத்தில் மேலும் 16 கம்பெனிகள் 6,00,000 கிலோவாட் மின்விசை உற்பத்திசெய்யும்.

# வளம் குன்றிய நாடுகளில் மேற்குதேசங்களின் செல்வாக்கு

1955-ம் ஆண்டில் அந்நிய நாடுகளுக்கான உதவித்திட்டங்களைச் சோவியத் ரஷ்யா வகுத்தது. ஆனால் கம்யூனிஸ்ட் முகாம் செலவு செய்த தொகையைக் காட்டிலும் ஐந்துமடங்கு அதிகமான தொகையை அமெரிக்காவே வழங்கியிருக்கிறது. பொருளாதார, இராணுவஉதவிகளுக்காக கம்யூனிஸ்ட் முகாம் மொத்தம் 704 கோடி டாலர்களையே வழங்கியுள்ளது. ஆனால் அதே காரியங்களுக்காக அமெரிக்கா 3902 கோடி டாலர் வழங்கியுள்ளது. இரண்டாவது உலக யுத்தம் முடிந்தபிறகு இதுவரை வெளிஉதவிகளுக்காக அமெரிக்கா வழங்கியுள்ள மொத்தத் தொகை 8407 கோடி வெள்ளியாகும். கம்யூனிஸ முகாமின் உதவி அனைத்தும் நடைமுறையில் கடன்களாகவும், வரவுகள் வைக்கும் வகையிலும் செல்கின்றன. ஆனால் அமெரிக்கா வழங்கும் உதவி மான்யங்களாகவும், நன்கொடைகளாகவும் செல்கின்றன. உதாரணமாக, மேலே சொன்ன 8407 கோடி டாலர்களில் 6406 கோடிடாலர் மான்யங்களாகும். 1202 கோடி டாலர் மட்டுமே கடனாக வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட புள்ளிவிவரங்களின் ஒரு பகுதி, கியூபாநெருக்கடியின் உச்சக் கட்டத்தின் போது ஐ. நா. பிரசுரித்த தாக்கீதிலிருந்து தொகுக்கப்பட்டதாகும். சோவியத்ரஷ்யாவின் உதவி குறைந்து வருகிறது என்பது, சர்வதேச மூலதனப் பெருக்கத்தை விளக்க வெளியிடப்பட்ட இத்தாக்கீதிலிருந்து உணரப்பட்டது. 1958-ம் ஆண்டின் போது ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கநாடுகளுக்குப் பொருளாதார உதவியாக ரஷ்யா 100 கோடி டாலர்களுக்குமேல் கொடுத்திருக்கிறது. 1959-ம் ஆண்டில் சோவியத்தின் உதவி 90 . 7 கோடியாகவும், 1960-ம் ஆண்டில் 68 . 0 கோடி டாலராகவும், 1961-ல் 30 . 4 கோடியாகவும் குறைந்து வந்திருக்கிறது. சோவியத்தின் உதவித் தொகைகள் குறையவே கம்யூனிஸ்ட் முகாமின் மொத்தமான்யத் தொகைகளிலும் குறைவு ஏற்படலாயிற்று. 1958-ல் 140 . 9 கோடி டாலர்களை மான்யமாக வழங்கியுள்ள கம்யூனிஸ்ட்முகாம், 1959-ல் 114 கோடி டாலராகவும், 1960-ல் 113 கோடியாகவும், 1961-ல் 93 கோடியாகவும் குறைந்து வந்திருக்கிறது.

ஹங்கேரி, பல்கேரியா, ருமேனியா ஆகிய நாடுகளைப் போன்று செஞ்சீனாவும், அதன் சொந்த நாட்டில் பொருளாதாரம் சீரழிந்திருக்கையில் வெளிஉதவிகளின் விகிதத்தை அதிகரித்திருப்பதாக ஐ. நா தாக்கீது கூறுகிறது. கம்யூனிஸ்ட் சீனாவின் ஏகாதிபத்திய மோகத்தை நேசிக்கும் நாடுகளுக்குள்ளே பீக்கிங்கின் உதவிக் கரம் நீளுகிறது. வடவியட்னாம், அல்பேனியா ஆகியநாடுகளுக்கு அதிக மான்யங்களை அளித்திருப்பதோடு, தற்போது இந்தோனேஷியா, பர்மா, ஏமன், இலங்கை, கினியா, கானா, கியூபாபோன்ற நாடுகளிடமும் கம்யூனிஸ்ட்சீனா அதன் கவனத்தைத் திருப்பி இருக்கிறது.

சீனாவிடமிருந்து ஏமன் பெற்றிருக்கும் புள்ளி விவரத்தை நோக்குகையில் சீனவுக்கெதிராய் இந்தியாவுக்கு அரசியல் ஆதரவை வழங்கமுடிவு செய்த ஐக்கிய அராபியக் குடியரசின் அதிபர் நாஸரின் கொள்கையோடு பீக்கிங் மோதமுற்பட்டிருப்பதைக் காணலாம் என்று ஐ நா. விலுள்ள சில அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

கம்யூனிஸ்ட் முகாமின் மான்யங்களில் மத்திய கிழக்குநாடுகளைக் காட்டிலும், ஆபிரிக்காவும், லத்தீன் அமெரிக்காவுமே அதிக அளவில் உதவி பெற்றிருக்கின்றன. ஆபிரிக்காவில் கானா தேசந்தான் அதிகமான மான்யங்களைக் கம்யூனிஸ்ட் முகாமிடமிருந்து பெற்றிருக்கிறது. 1960-ல் நான்கு கோடி டாலர் உதவியைப் பெற்ற கானா, 1961-ல் 10 கோடிடாலர்களைப்பெற்றிருக்கிறது.லத்தீன் அமெரிக்காவில் கியூபாதான் கம்யூனிஸ மான்யங்களைப்பெறுவதில் முன்னணியில் இருக்கிறது.

தென்கிழக்காசியாவில் இந்தியாவே சோவியத் முகாமின் உதவியைப் பெறுவதில் முன்னணியில் இருக்கிறது. 1951-ல் 14 . 3 டாலர்களைப்பெற்ற இந்தியா, அதே ஆண்டின் கடைசியில் 97 . 1 கோடி டாலர்களைப் பெற்றது. அதற்கு அடுத்த ஸ்தானத்தில்இந்தோனேஷியா 74 . 3 கோடி இருக்கிறது. ஐ. நா. தாக்கீதின்படி, 1961-ம் ஆண்டின் இறுதிவரை, அபிவிருத்தி குன்றிய நாடுகளுக்கு சோவியத்முகாமில வழங்கப்பட்ட பொருளாதார உதவி 406 கோடி டாலர்களாகும். இதில் ரஷ்யா மட்டும் வழங்கியது 300 கோடியாகும். இப்புள்ளிவிவரங்களில் இராணுவ உதவிக் கொள்கைகள் சேரா. 1962-ம் ஆண்டின் மத்திவரை லத்தீன் அமெரிக்காவுக்கு ரஷ்யா வழங்கிய உதவி 54 . 7 கோடியாகும். அமெரிக்கா வழங்கியிருப்பது 402 கோடி டாலராகும். தூரகிழக்கில் ரஷ்யா வழங்கியது 79.9கோடி, அமெரிக்கா கொடுத்தது 509 கோடி. தென்கிழக்காசியாவில் ரஷ்ய உதவி 207 கோடி, அமெரிக்க உதவி 807 கோடி. ஆபிரிக்காவில் ரஷ்ய முகாமின் உதவி 67 . 8 கோடி, அமெரிக்க உதவி 100 கோடி.

1962-ம் ஆண்டுமுடியவுள்ள இப்புள்ளி விவரங்களிலிருந்து, சோவியத்ரஷ்யா தீவிரமுயற்சிகள் மேற்கொண்டிருந்தும், அபிவிருத்தியடைந்து வரும்நாடுகளில் மேற்குமுகாமும் அமெரிக்காவும் தங்கள் செல்வாக்கையும், பெருமையையும் இழக்கவில்லை என்பது புலனாகிறது.

## யுனெஸ்கோ நடத்தும் இந்திய பள்ளிக்கூடம்

பிராங்க்பர்ட் நகரில் நடத்தப்பட்டுவரும் ஸ்டீபன்-வான்-ஹீன் செகண்டரி பள்ளியில் சிலவார காலத்திற்குள் இந்தியா பற்றிய சகல விஷயங்களும் போதிக்கப்படுகின்றன. இந்தியாவைப்பற்றி மேலும் தெரிந்துகொள்ள மாணவர்கள் விரும்பும் பட்சத்தில் பிராங்க்பர்ட்டிலே வசித்துவரும் திரு புரஞ்சன் கெய்ரோலா என்ற இந்தியரிடம் அவர்கள் கேள்வி கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

யூனெஸ்கோ (ஐக்கிய நாட்டுக்கல்வி கலாசார ஸ்தாபனம்) நடத்திவரும் 14 பள்ளிகளில் இப்பள்ளி ஒன்றாகும். இந்தியாவைப்பற்றி மேலும் மேலும் அறிந்துகொள்ள இப்பள்ளியிலுள்ள மாணவர்கள் பேராவல் உள்ளவர்களாக இருக்கின்றனர். இம்மாதிரி இதர நாடுகளைப்பற்றியும் போதிக்கப்படுகின்றன.

யூனெஸ்கோவுடன் சம்பந்தப்பட்ட ஒரு தனிப்பட்ட ஸ்தாபனம் படங்களைக்கொண்டு இந்தியாவைப்பற்றி விளக்கவும் முன்வந்துள்ளது. இந்தியாவைப்பற்றிய சகல தகவல்களுடன் இந்திய சங்கீதம், இந்திய நடனக்கலை இவை பற்றி எல்லாம் கூட இக்கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன. இக் கண்காட்சி எல்லா ஜெர்மன் நகரங்களிலும் நடைபெறும்.

★

## 10 பேர்களில் ஒருவர் சிறந்த விளையாட்டுக்காரர்

ஜெர்மனியர்களில் பெரும்பாலோர் சிறந்த விளையாட்டுக்காரர்கள். மேற்கு ஜெர்மனியில் 31,600 விளையாட்டுச் சங்கங்களில் சுமார் 57 லட்சம் ஜெர்மானியர் அங்கத்தினர்களாக இருந்துவருகின்றனர். மேற்கு ஜெர்மனியின் மொத்த ஜனத்தொகை 560 லட்சம். ஆகவே 10 பேர்களில் ஒருவர் விளையாட்டுக்காரராக இருந்து வருகிறார். 14 வயது முதல் 18 வயது வரை இருப்பவர்களை விட விளையாட்டுகளில் சிரத்தைஉடையவர்கள் வயதானவர்களே அதிகம் (38.2 சதவிகிதம்). 10 யுவர்களுள் 4 பேர் விளையாட்டு சங்கங்களின் அங்கத்தினர்களாக இருந்து வருகின்றனர். இதே வயதுள்ள பெண்கள் 13 சதவிகிதத்தினர் விளையாட்டில் ஆர்வம் காட்டுகின்றனர். கால்பந்து ஆட்டத்தில்தான் அதிக ஆர்வம் காணப்படுகிறது. ஜெர்மன் சிறுவர்கள் எல்லாருமே பள்ளியில் படிக்கும்போது உடற்பயிற்சியில் நன்கு பழக்கப்படுகிறார்கள்.

மேற்கு ஜெர்மனியில் அரசாங்க உத்தியோகம் பார்ப்பவர்கள் மொத்தத்தில் 28 லட்சம் பேர்கள். வேலையிலிருப்பவர்களில் இவர்கள் எண்ணிக்கை 14 சதவிகிதம். 18 லட்சம்பேர் மட்டும் அரசாங்கங்களில் குமாஸ்தாக்களாகவும் அதிகாரிகளாகவும் வேலைபார்க்கிறார்கள்.

# கேட்டிருப்பாய் காற்றே

அத்தியாயம் 9

அவன் அவளை அறிந்து, அவள் அவனை அறிந்து, இருமனமும் ஒன்றிக் கலந்த காதலுக்கு ஒருமாத வயதாகிவிட்டது.

இருவரையும், இருவரும் அறியமுன்பு, தனித்தனி தமக்குள், ஒருவர்மேல் ஒருவர் கொண்ட ஆசையின் ஆரம்ப காலம் எதுவென இருவருக்குமே தெரியாது. அவர்கள், ஒருவரை ஒருவர் காதலிக்க வேண்டும் என்று எண்ணிக் காதலிக்கவில்லையே.

பருவம், நெருக்கம், சூழ்நிலை, உள் ஆசைகள், தேவை என்பனவற்றின் கலவையின் ஊட்டத்தில் அவர்கள் காதல் வளரலாயிற்று.

இருவரின் எண்ணங்களையும் இருவரும் அறிந்தபின்-

அப்புகாமி அவளை நம்பினான்.

குணவதி அவனை நம்பினாள்.

ஒரு மாதத்திற்குள் எவ்வளவு அனுபவம்! குணவதி இப்பொழுது பெரிய அனுபவசாலி; அவள் காதலுக்குப் பழையவள்! அவளுக்கு, அப்புகாமியுடன் எப்பொழுது கதைக்க வேண்டும் எப்படிக் கதைக்க வேண்டும்; என்ன கதைக்க வேண்டும்; என்பதெல்லாம் வெகு நுட்பமாகத் தெரிந்திருந்தது. சொல்லித் தெரியாத கலையை அவளும் சொல்லாமலே பயின்றுவிட்டாள்.

அவள் அவனின் பாதி;

அவன் அவளின் இதயம்.

அப்புகாமிக்கு அவளை இரவில், தனிமையில் சந்தித்துத் தன் அந்தரங்க ஆசைகளைப் பேசவேண்டுமென்று பெரிய ஆசை. அதை அவளிடம் கூறி, அவள் சம்மதத்தைக் கேட்டிருந்தான். அவளோ, அதைத் தன் வாழ்க்கையில் பெரிதாக எண்ணி, அம்மா அறிந்தால் என்ன நடக்குமோ என்ற நடுக்

## குறுநாவல்

கத்தில் மறுத்தே வந்தாள். அவளும் எத்தனை நாளைக்கு என்று மறுப்பாள். ஒவ்வொரு முறை மறுக்கும்போதும் அவளுக்குப் பெரிய துக்கம். அவளுக்கு அப்படியான ஆசை இல்லையா?

இன்றிரவு, அடுக்களைக்குப் பக்கத்தில் நிற்கும் மாமரத்தின் கீழ் சந்திப்பதாக அவள் அப்புகாமிக்குச் சொல்லிவிட்டாள். அவனும், மணிக்கூட்டில் பத்து அடித்ததும் அங்கு வருவதாக வாக்குறுதி கொடுத்துவிட்டான். பத்துமணிக்கு, அம்மாவும் ஐயாவும் நன்ருக நித்திரை செய்துவிடுவார்கள் என்ற துணிவு இருவருக்கும்.

அப்புகாமி முன் விருந்தையில், நீட்டி நிமிர்ந்துவிட்டு முகட்டைப் பார்த்தவாறு கிடக்கிருன். இருகைகளையும் மாறி இரு கக்கத்துள்ளும் வைத்து, மனத்துருதுருப்புடன், மணிக்கூட்டின் ஒலியைக் காத்துக் கிடந்தான்.

இரவின் அமைதியுடன் கலந்து, நிலவு முற்றத்தைப் பகலாக்கியது. அவன் தலையைச்சரித்து முற்றத்தை நோக்கினான். அந்நிலவில், தன் குணவதியுடன் தான் தனிமையில் கதைக்கப்போவதையும் கதைக்கும்போது எழும் இன்பத்தையும் கற்பனையுள் ஒத்திகையிட்டுப் பார்த்தபோது அவனால் அந்தப்பாயில் கிடக்கவே முடியவில்லை.

அவன் எழுந்திருக்கும்போது மணிக்கூட்டில் ஒன்பதரை 'டாங்' என்று அடித்தது. நேரம் நெருங்கிவிட்டதில் அவனுக்கு குழுமையான ஏக்கம். கக்கத்துள் மாறிவைத்த கைகளால் உடலை இறுக்கி, தோளைக் குலுக்கிக்கொண்டான். இதயம் உணர்ச்சிப் பந்தாகக் கனத்து நிறைந்தது.

எழுந்து மெல்லமாக இறங்கினான். அப்போது, அவளுக்குக் கொடுப்பதற்கென, அம்மா சாமான் வாங்குவதற்குக் கொடுத்த பணத்தில் 'சோட்' பண்ணி, வாங்கி, மடிக்குள் பவுத்திரமாக வைத்திருந்த 'சொக்கிளேட்' நினைவில் தட்டியது. நின்று ஒருகையால் மடியைப் பிடித்துப் பார்த்துக் கொண்டான்.

அவன் நடந்து, மாமரத்தை நோக்கினான். அந்தப் பார்வையில் எவ்வளவு ஆவல்; ஏக்கம்.

குணவதி அவனுக்கு முன்பாகவே, மாமரத்தின்கீழ் வந்து நின்று அவன்வரும் திசையைப் பார்த்தவண்ணம் நின்ருள். மாமரக் குழைகளை விலக்கி எறிக்கும் குளிர் நிலவில், அவள் உருவம் முழுமையாக, பதுமைச் சிலையாகப் பளிச்சிட்டதை அவன் கண்ணுற்ருன்.

அவன் தன்னையே தன் நினைவுகளில் மறந்தான்.

குணவதி அவனைக் கண்டதும், மார்பகம் விம்மி உயர, பக்கமாய்த் திரும்பி, தலை குனிந்து, மாவிலைக் காம்பொன்றைக் கைகளால் பிசைந்து நின்ருள். அவளுக்கு அவன் நெருங்க நெருங்க காதல் வெட்கம். அவன் நடந்து வந்து அவள் பக்கத்தில் நின்று, அவளைப் பார்த்தான். ஏதேதோவெல்லாம் அவளுடன் கதைக்க வேண்டுமென்று, தனக்குள்ளே ஆயத்தப்படுத்தி, வந்தவன், அவள் அருகில் சென்றதும், எல்லாமே மறந்து, உள்எழும் நடுக்கம், வெளிஉறுப்புக்களில் ஆட, மௌனமாய், உள்ளே அந்தரமாய் நின்ருன். கதைப்பதற்கென்று வாயைத் திறக்கிருன், வார்த்தைகள் எதுவுமே எழவில்லை.

அவன் மௌனமாய்நின்றதும், குனிந்து நின்ற குணவதி தலையை மெதுவாக அவன் பக்கம் திருப்பி அவனைப்பார்த்தாள். அவன் அவளையேபார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் உடனே வெட்கத்தில் மீண்டும் தலை குனிந்து, கைவிரல்களைக் கடித்துக் கொண்டாள்.

இருவருக்குமே பாஷை இல்லை.

அவனே முயன்று கதைத்தான்.

"குணவதி!"

இரகசியமான அழைப்பு.

"ம்"

"குணவதி!"

"ம்"

அவன் மடியுள் வைத்த 'சொக்லேட்'டை ஒருமுறை பிடித்துப் பார்த்துக் கொண்டான்.

"கதையன்!"

அவள், கைகளை மாறிமாறிப் பிசைந்துகொண்டாள்.

"கதைக்கமாட்டியா?"

"என்ன கதைக்கிற!"

அந்த நிலவின் ஒளியில் மண்ணில் அமர்ந்து, கதைப்பதற்கு அவன் ஆசையானன்.

"கீழை இருக்கிறியா?"

அவள், அசைந்து, கால்களைப் பக்கமாகச் சரித்து, மடக்கி அமர்ந்து, இடதுகையை நிலத்தில் ஊன்றி, வலதுகையால் மண்ணில் கிறுக்கினாள்.

நிலவின் வண்ணத்தில் அவளது உயர்ந்த மார்பகம் அவனுக்கு ஆசையை ஊட்டிற்று.

அவன், உணர்ச்சியில் கொண்ட ஏக்கத்துடன், அவள் மார்பகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் நிமிர்ந்து, அவன் முகத்தை நோக்கினாள்.

"என்ன அப்படிப் பார்க்கிருய்?"

அவன் பார்வையை வெட்டாது சிரித்தான்.

"எனக்கு ஆசையாக இருக்குது!"

"போ!"

அவள் இரு கைகளையும், சிலுவையாய் மார்பில் போட்டுத் தோள்களைப் பற்றிக் கொண்டு, தலையைப் பக்கத்துக்கு வெட்கத்தின் வீறலோடு சரித்தாள். அந்தச்செயல் அவனைக் கிறுகிறுக்க வைத்திற்று.

"குணவதி!"

"ம்"

"எனக்கு உன்னிலை நல்ல ஆசை!"

அவளுக்கும் அப்படித்தான் சொல்லும் ஆவல்; உணர்ச்சிக் கூடலில் மொழி மயங்கிவிட்டது.

அவன் மடிக்குள் வைத்திருந்த 'சொக்கிளேட்'டைக் கையில் எடுத்தான்.

அவள் கூதல்காயும் கோலத்தில் தான் இருந்தாள்.

"இந்தா!"

"என்ன!"

"சொக்கிளேட்!"

அவள் நடுங்கி, நடுங்கிக் கையை முன் நீட்டினாள். அவன் 'சொக்கிளேட்'டை அவள் கையில் வைக்கும்போது, விரல்களை இறுக்கிப் பற்றினான்.

அவள் என்ன செய்வாள்? மறுகை விரல்களால் மண்ணில் நீளமாய்க் கோடுகளைக் கீறினாள்.

"உன்ரை கை நல்லமெதுவா இருக்கு."

அவள்பற்களால் உதட்டைக் கடித்தாள்.

"நல்ல மெல்லிய கை!"

அவளுக்கு மீறும் உணர்வையும், நாணத்தையும் தாங்க முடியவில்லை.

"விடு, காணும்!"

அவன் விரல்களை நழுவவிட்டான்.

"என்ன கோவமா!"

அவள் இல்லையெனத் தலை ஆட்டினாள்.

அவளைத் தன் கண்மணிகளுக்குள் ஆசை உருவமாய்ச் சுவிகரித்து, அந்த லயிப்பில் காலத்தை நீள மறந்தவன், பாலின் நிறத்தில் ஒளிசிந்தும் நிலவில், மினுங்கி நலுங்கும் குணவதியின் கூந்தலை ஆவலாய் இரசித்தான்.

அதைத் தன் கையால் தடவி அதன் மென்மையின் தன்மையை உணரும் எண்ணம் உள்ளே ஒற்றைக்காலில் நின்றது.

தானகவே, நிலத்தில் கைகளை ஊன்றி, இன்னும் சற்று நகர்ந்து அவள் அருகாய் அமர்ந்து அவள் தலைமயிரை மீண்டும் நோக்கினான்.

அவன் இடதுகண், அவனது கட்டையும்மேவி, உணர்ச்சியின் ஏவலாய் எழுந்து, குணவதியின் நெற்றியில் தொடங்கி பின்தோள்வரை கூந்தலைஸ்பரிசித்து நின்றது.

அந்த வாஞ்சையான ஸ்பரிசம், ஏற்கனவே விழித்திருக்கும் பருவத்துடிப்பின் முக்கில் நுள்ளி, உள் நரம்புகளின் நுண்துவாரங்களில் மின்சார நடுக்கத்தைப்பாய்ச்சி அவளைக் கிறங்க வைத்தது.

அவள், தன்னை மறந்து, சூழ்நிலை மேவி, உணர்வின் உச்சியில் எவ்வி அந்தரங்கமாய்த் துணையின் அணைப்பைவேண்டினாள்.

அவன் தன் உறுதியால் தன் மன எழுச்சிகளை அடக்கிக் கொண்டான்.

"நாங்க இப்படி எத்தினை நாளைக்கி இருக்கிற!"

அவன் கேள்வி செவியில் உற்றதும், உச்சியில் நின்று படிகளால் இறங்கித் தன் நிலைக்கு வந்தாள். ஆனால் களைப்பு நீங்கவில்லை.

அவள் கண்களை விழித்து, தோல்வியோடு அவனைப் பார்த்தாள்.

தன் தோல்வியில் அவளுக்கு மகிழ்வு.

"அதுக்கு என்ன செய்யிறது?"

"கலியாணங் முடிக்கிறது தான்."

"என்னெண்டு, —அம்மா விடா."

"அம்மாட்டைச் சொல்லிக் கேப்பம் —நாங்க கல்யாணங் முடிக்கப்போறமெண்டு... என்ன செய்வா?"

அவன் ஆவலாக அவளைப் பார்த்தான்.

"ஐயோ... அவ கொண்டுபோடுவா."

அவள் நடுங்கினாள்,

"ஏன்?"

அவளுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. அவர்கள் சொகுசுக்கு அவள், மெத்தை. அவர்களின் குசாலான படுக்கையின் பாரத்தை, சுமப்பவள் அவள் தானே. அந்த ஊமை மெத்தையின் சுகத்துக்காக, ஒரு கிழமைக்குத் தானும், வெறுங் கட்டிலில் படுக்கமுடியுமா?

"நீயும் வேலைக்காரன்; நானும் வேலைக்காரி; அவங்களுக்கு வேணும்."

அப்புகாமிக்கு அவள் சொல்வதன் பொருள் அரைகுறை விளக்கம்; அவன் இருந்த நிலையில் உறுதிபெற்ருன்.

"நீ என்னோடை வா! நாங்க எங்கையும் போயிடுவம்; நான் கூலிவேலை செய்து உழைப்பன்; நல்ல பெலங் இருக்கு எனக்கு. நீ பயப்படாதை."

அவன் கூறியவை அவளுக்குப் புதுவாழ்வை அளித்தன. அவள் பதிலே சொல்லமுடியாமல் மகிழ்ச்சியில் முக்குளித்தாள்.

"எடியேய்!"

வானத்தில் நின்று, திடீரெனக் குதித்த பிசாசாய் அவர்கள் பின்னால் அம்மா நின்ருள். தற்செயலாக வெளியே வந்தவள் அவர்களைக் கண்டுவிட்டாள்.

"அம்மா!"

இருவரும் சட்டென எழுந்து நடுநடுவென நடுங்கி நின்றனர்.

"எவ்வளவு காலம் இது நடக்குது— இந்தளவுக்குப் போயிட்டீங்களா?"

அவள் கூறிமுடித்து அப்புகாமியைப் பார்த்தாள்.

"எட நாயே!"

அவன் கன்னத்தில் அம்மாவின் கைகள் பதிந்தன.

குணவதியைப் பார்த்தாள்.

"எடி சிறுக்கி, உனக்கு மாப்பிளையா வேணும் —தோறை!"

கோபம் எகிற அவள் தலைமயிரைத்தாவிப் பிடித்து, இழுத்து, அலக்கமலக்கமாகப் புரட்டிப் புரட்டி அடித்தாள். அவள் அடிபடுவதை அப்புகாமியால் பொறுக்கமுடியவில்லை.

"அம்மா, அவளுக்கு அடிக்காதீங்கம்மா —பாவம்."

அம்மா, வீறாப்புடன் இடுப்பில் கைவைத்து, அவனைக் கண்களால் எரித்தாள்.

"இங்கை வாடா!"

அவன் தயங்கினான்.

"வாடா இங்கை! நீயும் வாடி."

இருவரும் பயத்துடன் முன் அருகினர்.

அம்மா இருவரையும், ஏற இறங்கச் சந்தேகப்பார்வை பார்த்தாள்

"இப்ப ரெண்டுபேரும் என்ன செய்தனீங்க?"

"ஐயோ அம்மா!"

"பொய் சொன்னுக் கொண்டு போடுவன். இப்ப என்ன

(10-ம் பக்கம் பார்க்க)

யோ. பெனடிக்ற்பாலன்

## இன்றைய எழுத்தாளர்களுக்கு...

(3ம் பக்கத்தொடர்ச்சி)

திரை" The red badge of Courage) போரின் புகழையும் சிறப்பையும் தகர்த்துவிட்டது.

"தீரத்தின் சிவப்பு முத்திரை" என்னும் கதை அமெரிக்க உள்நாட்டுப் போரைப் பகைப்புலனகக்கொண்டு எழுதப்பட்டது என்பது தெளிவு. ஆனல் இடங்கள் பற்றிய விபரங்கள் திட்டவட்டமாக இல்லை. உண்மையில் கிரேன் இக்கதை மூலம் தெரிவிக்க விரும்பிய நோக்கத்துக்கு காலமும், இடமும் அவசியமல்ல. போர்க்களத்தில் ஒரு சாதாரண போர்வீரன் மனதில் ஏற்படும் விளைவுகளை வர்ணிக்கவே அவர் விரும்பினர். பிளிமிங் என்னும் கதாபாத்திரம் மூலம் மனிதனுக்குள்ள சுயநலத்தை அவர் புலப்படுத்தியுள்ளார். போரைப் பற்றியும், அதில் ஈடுபட்டுள்ள மனிதர்களைப் பற்றியும் முன்பு எழுதப்படாத விதத்தில் அவர் எடுத்துரைப்பதும், அவரது வலுவான உரைநடையும் இந்நாவல் அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் ஏராளமாக விற்பனையாகக் காரணமாயின. ஆசிரியர் புகழ்பெற்ருர்.

கிரேனுக்கு மிகுந்த கிராக்கி ஏற்பட்டது. பல பத்திரிகைகள் அவரை விசேஷ நிருபராகப் பெறப்போட்டியிட்டன. அவரது கதைகளை வெளியிட விரும்பின. நிலைமையை நேரில் கண்டு எழுதுவதற்காகப் பல பிரிட்டிஷ், அமெரிக்க பத்திரிகைகள் அவரைப்போர்ப்பகுதிகளுக்கு அனுப்பிவைத்தன.

1898 ஜனவரியில் "கி-கி மோடர்" என்னும் கப்பலில் கிரேன் சென்ருர். கப்பல்புறப்பட்ட முதல் நாள் இரவே அதில் பெரும் கோளாறு ஏற்பட்டு அது மூழ்கிவிட்டது. கப்பலின் கப்டன், சமையல்காரர், எண்ணெய்போடுவோர் ஆகியோருடன் கிரேன் ஒரு சிறிய உயிர் காக்கும் படகில் ஏறிக்கொண்டார். அவர்கள் கொந்தளிப்பு மிகுந்த கடலில் 30 மணிநேரம் உயிருக்காகப் போராடினர்கள். பின்புபடகை விட்டு நீந்திக் கரைசேர்ந்தனர். நால்வரும் கரைசேர்ந்தபொழுதிலும் எண்ணெய்போடுகிறவர் பின்பு இறந்துபோகிருர். உண்மையான இந்தக் கதையிலிருந்து உருவாக்கப்பட்டதே "திறந்த படகு" (The open boat) என்னும் கதை. இந்தக் கதையும் "நீல விடுதி" (Blue Hotel), "மணமகள் வருகை" (The bride Comes to yellow Sky) ஆகிய கதைகளும் உண்மை நிகழ்ச்சிகளை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்ட அற்புத படைப்புகளாகும்.

எழுத்தில் நிதானம் காட்டுவதில் வெற்றிபெற்றதும், தம் சொந்த வாழ்க்கையில் அதைக் கடைப்பிடிக்க இயலாதுபோன சிறந்த ஆசிரியர்களில் ஒருவர் ஸ்டீபன்கிரேன். எலும்புருக்கி நோய் அவரது உடலை அரித்துத் தின்றுவந்த பொழுதிலும் கிரேன எழுதிக்கொண்டே இருந்தார் உண்மையில் அவர் எழுத்துக்காகத் தம்மையே பலியாக்கினர் என்று சொல்லலாம். தம் வாழ்நாளில் கடைசியாக சில ஆண்டுகள் இங்கிலாந்தில் வாழ்ந்தார். நோய் கடுமையாகவே அவர் வைத்தியத்துக்காக ஜெர்மனிக்குச் சென்ருர். சிறிது காலத்தில் அங்கு காலமானர்.

## நல்ல பங்காளன்

— ச. வே. பஞ்சாட்சரம் —

தண்புன லாடி, வாசச்
சாந்துடல் பூசி, துய்ய
வெண்துகில் ஆடை கட்டி
மேனியின் அழகுத் தூய்மை
கண்டிடும் வேளை ஆன்மா
"கரைந்திட எந்தன் மாசும்
தொண்டெதும் செய்வாய்" என்று
துரத்திடும் கோயிற் பக்கம்!

நாக்குமிழ் நீரில் பொங்க,
'நன்றெ'ன இல்லாட் போற்றி,
மூக்கள வுண்டு, குந்தில்
முடங்கிட முயலும் வேளை
தாக்கிடும் ஆன்மா, "நானும்
சாப்பிட என்ன தந்தாய்?
தூக்கிடு நூலை! பாடு
துய்யவன் புகழே!" என்று!

அந்தியில் வீசும் காற்று
அலைந்துடல் தழுவும் வண்ணம்
தொந்தியை முன்னே விட்டுச்
சுகநடை போடும் போது,
வந்துள அரங்கில் ஏறி,
"வாழிய! இறைவன் பற்றிச்
சிந்தனை செய்வாய் யானும்
சிலிர்த்திட!" எனக்கும் அஃதே.

# நடுக்கடலில் மூன்று தினங்கள்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்வுக்கும் சாவுக்குமிடையே போராடிக்கொண்டிருந்தார்கள். விதி இவர்களைப் பார்த்துச் சிரித்தது. தளபதி நீக்கிலாப்பிள்ளை அவர்களும் மற்றும் மூன்று பேரும் ஒரு பலகையிலிருந்து பலகை கவிழாதபடி சமநிலையில் மிதக்கக்கூடியதாக நீரில் போராடிக்கொண்டிருந்தார்கள். அப்படியே மற்றவர்களும் மிதவைகளைப் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

ஒருவர்பின் ஒருவராய்ச் சுருவுக்குப் பலியாகப்போகின்றோம், எப்படியும் உயிர்தப்ப முடியாது என்றே அவர்கள் எண்ணிக்கொண்டிருந்தார்கள். இப்பதினொருவரும் அந்தப் பெரிய பலகைத்தட்டே ஒரே ஒரு பற்றுக்கோடாக அதன்மீது நின்றூர்கள். பலகை பதினொரு பேரின் சுமையினல் தண்ணீர் மட்டத்திற்குக்கீழே நின்றது. தண்ணீர் நெஞ்சமட்டத்துக்கு நின்றது. அலை உருண்டுவரும் போது இவர்களை முற்றாக மூடிவிடும். அலைமறைந்தபின் தான் அவர்கள் மறுபடியும் தலைகாட்ட முடிந்தது. ஒவ்வொரு அலைக்கும் இவ்விதமே நடந்துகொண்டிருந்தது. கடலின் நீரோட்டம் நாலா திசைகளிலும் ஒவ்வொருவராய் இழுத்துச்சென்றது.

இந்த நேரத்தில் கப்பலில் வளர்க்கப்பட்ட புறுக்களும், பூனைகளும் ஒரே பலகையில் மிதந்தனவாம். ஆபத்துவேளையில் மிருகங்கள்தானும் தங்கள் பகைமையை நீக்கி ஒன்றுக்கொன்று உதவிசெய்யும் போலும். "அருகூட்டும் பைங்கிளியும் ஆடற்பருந்தும் ஒருகூட்டில் வாழ உலகு."

பெரிய பலகையிலிருந்த பதினொருவரும் காலையில் மற்றவர்களைப் பார்க்கக்கூடியதாக இருந்தனர். நேரம்ஆகி இவர்களின் தூரம் வளர்ந்து கொண்டே வந்தது. நீக்கிலாப்பிள்ளை இவர்களைப் பார்த்துச் "சுகமாய்ப் போய்ச் சேர்வீர்கள்" என்று சமிக்ஞை நாட்டினராம். அப்போது புத்திரர் இருவரும் துடியாய்த் துடித்துக் கண்ணீர் விட்டார்களாம்.

மாலையானதும் இவர்கள் மற்றவர்களைக் காணக்கூடாத தூரத்திற்கு வெள்ளம் இழுத்துச் சென்றுவிட்டது. மற்றவர்களுக்கு என்னகதி ஏற்பட்டதோ! இவர்கள் அதைத் தெரிந்துகொள்ள இயலாமல் போய்விட்டது இருள்சூழ்ந்து குளிர் அதிகரித்து கொடிய சுருமீன்கள் விழுங்கிவிடுமோ என்ற பீதியும் இவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது. இப்படியே மூன்றுநாட்களாகப் பட்டினி என்னும் கொடியநோய்த க்க வாடிவதங்கினூர்கள். இந்த மூன்று நாட்களும் மூன்று யுகம்போல இருந்திருக்குமென்பதில் ஐயமில்லை.

அவர்கள் தண்ணீரில் இருந்தார்கள் எனினும் பருகும் தண்ணீரற்ற பாவியானூர்கள். "இலட்சுமிகோவிந்தா" அமிழ்ந்திய இரண்டாம்நாள் பதினொருவருள் இருவரான ஜெபமாலை ஜேம்ஸ் என்பவர்கள் பயத்தின்காரணமாக மதியை இழந்தார்கள். ஆகவே இவர்கள் மற்றவர்களின் சொற்களையும் மதியாது தங்கள் இஷ்டம் போல கடலுக்குள் திரியத் தொடங்கினூர்கள். இவர்களைப் போகவிடாமற் தடுப்பதற்கும் மற்றும் சகோதரர் சக்தியற்றிருந்தார்கள். இருந்தும் இவர்களுக்காக மிகவும் பரிதாபப்பட்டு இவர்களை அங்குமிங்கும் போகவிடாமல் தடுத்துவைகக மற்றவர்களு கு இயலாமற் போய்விட்டது. இதன் விளைவாக இரண்டாம்நாள் இரவு கொடிய சுருவுக்கு இவர்கள் பலியானூர்கள். மூன்றும்நாள் விடிந்ததும் இவர்களைக் காணூது மற்றைய ஒன்பது பேரும் மனம் வருந்தினர். என் செய்வது தமக்கும் அக்கதி தானே என விதியின் சக்தியை நொந்துகொண்டனர்.

மூன்றும்நாள் அதாவது பங்குனிமாதம் பன்னிரண்டாம் திகதி சூரியன் உதித்ததும் இவர்களுக்கும் நற்காலம் உதிக்கத தொடங்கிவிட்டது. அன்று பதினொரு மணியளவில் ... இவர்கள் கண்ட கப்பலைப்பால் ஒன்றைக் கண்டார்கள். இவர்கள் கண்டது எச். எம். எஸ். எமறல்ட் என்ற ஆங்கிலேயரின் கப்பல். அதுவந்து இவர்களைக் காப்பாற்றியதாம். அப்போது ஆங்கிலேயரின் கப்பல் இவர்களைக் காப்பாற்றியிராவிட்டால் அன்றிரவுக்கு முன்னரே அனைவரும் ஒருவர்பின் ஒருவராய் இறந்திருப்பார்களாம். இவர்களைக் காப்பாற்றிய ஆங்கிலேயர் இவர்களின் மற்றைய சகோதரர்களைக் கண்டுபிடிப்பதற்கு விமானத்தையனுப்பி கடலில் விபத்து ஏற்பட்ட இடத்திலிருந்து பலமைல் தூரங்களுக்கெல்லாம் சென்று பார்த்தும் ஒன்றும் தென்படவில்லை. அப்போது இவர்கள் மற்றும் சகோதரர்களையும் இதேமாதிரிக் கல்பல்கள் காப்பாற்றியிருக்கக்கூடுமென மனம் ஆறினர். ஆனல் இதுவரை அந்த ஒன்பதுபேரைத் தவிர மற்றையவர்களின் தகவல் ஒன்றும் தெரியாது. இவர்களைக் காப்பாற்றிய ஆங்கிலேயர் எண்ணிறந்த நன்மைகளைச் செய்து இலங்கைக்கு வெகு விரைவில் இவர்களை அனுப்பி வைத்தனர். இப்பேராபத்திற் சிக்கிண்டு தப்பிய பெரும் பான்மையோர் இன்றும் கடலில்நின்று கலங்காது உழைக்கின்றனர். இவர்களின் அஞ்சாமையும், வீரமும் போற்றப் படவேண்டியதே.

## இசைக்கலைவளர...

மேற்கு ஜெர்மன் மாணவர்களுக்கு இலவசமாக கடனுக வழங்க சுமார் 160 சங்கீத கருவிகள் சேகரித்து வைக்கப் பட்டுள்ளன. சங்கீதக்கருவிகள் வாசிக்க கற்றுக்கொள்ள விரும்பும் பாலர்கள் இந்த லைப்ரரியிலிருந்து தலைக்கு ஒரு கருவியாகப்பெற்று 6 மாதம் முதல் ஒரு வருடம்வரை தங்களிடமே வைத்துக்கொள்ளலாம். சங்கீத கருவிகள்கற்க இதனல் ஆர்வம் ஏற்படுவதுடன் அதிக விலைகொடுத்து வாங்கமுடியாதவர்களுக்கு இக்கருவிகள் கிடைக்க இதனல் வழி ஏற்படுகிறது.

## கேட்டிருப்பாய் காற்றே

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்தனீங்க. இப்பிடி எத்தினைநாள் செய்யிறீங்க."

அவர்கள் நடுங்கினர்.

"இல்லைங்கம்மா, ஒண்டும் செய்யேல்லை."

அம்மா குணவதியைக் கருத்தோடு நோக்கினுள்.

"ஐயோ அம்மா சத்தியமா ஒண்டும் நடக்கலைங்க."

"எட நாயே! உனக்கு என்ன செயிறனெண்டு பார், கலியாணமா முடிக்கப்போறீர். நேரத்துக்கு நேரம் சப்பினல் சும்மா இருக்கேலாது தான். — விடியட்டும் உன்னை அனுப்புறன்."

அம்மாவுக்கு மூச்சு வாங்கியது.

அவர்களும், மனித உயிர்கள். தனக்குள்ள ஆசைகள் உணர்ச்சிகள் தேவைகள் அவர்களுக்கும் உண்டென்பதை அவள் மறந்தேவிட்டாள்.

அப்புகாமி குற்றவாளியாய் நின்ருன்.

"போடா நாயே!"

அப்புகாமி மௌனமாய் நடந்தான்.

"போடி நீ, உன்ரை திமிர் அடக்கிறன்!"

அவள் தலைமயிரைப் பற்றி இழுத்து. முன்னே உதைத்து விட்டாள்.

அவள் நடந்தாள். எங்கு நடக்கின்ருள்; ஏன் நடக்கின்ருள் என்றே அவளுக்கு விளங்காத மூளைக்கலக்கம். அதை அம்மாவே உண்டாக்கினுள்.

தம் சொகுசான இன்பங்கள் அளவில் குறைவதை எள்ளளவும் விரும்பாது, அந்த இன்பங்களை முழுமையாகப் பெறுவதற்காக, இன்னெரு மனித உயிரின் முறையான இன்பங்களை, துடிப்புகளை முளையிலேயே அழிக்கும் சிறு கூட்டம் வாழவேண்டுமா? அழியவேண்டுமா?



# தமிழ்த்தாத்தா, மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்

## (19-2-1855—28-4-1942)

— வித்துவான் க. வேந்தனுர் —

எச். எஸ். ஸி. வகுப்பில் பயிலும் மாணவர்களுக்குப் பயன் தரத்தக்க முறையில் 'தமிழ் வளர்த்த சான்ருேர்கள்' என்ற வரிசையில் தமிழ்ப் பேரறிஞர்கள் சிலரைப்பற்றிய கட்டுரைகள் இங்கு தொடர்ந்து வெளிவரும்.

சங்க இலக்கியங்களையும் பிறபல காவியங்களையும் பதித்துத் தமிழன்னையின் தனிப் பெரும் பெருமையை மலர்த்திய மாபெரும் புலவர் உ. வே. சாமிநாதையர் அவர்களேயாவர். ஏட்டிலேயிருந்த சங்க நூல்களைத் தேடித் தேடி எடுத்து அச்சில் ஏற்றிய ஐயர் அவர்களின் தமிழ்த் தொண்டை தமிழகத்தார் மறக்கவே முடியாது. ஐயர் அவர்கள்தான் பழந்தமிழ் இலக்கியங்களின் பாதுகாவலர். ஐயர் அவர்களைத் தமிழ்ப்புலமை நிரம்பியவராய்த் தமிழ்த் தொண்டு ஆற்றித் தமிழ் மொழியை வாழ்விக்கக்கூடிய வல்லமையும் பொறுமையும் வாய்ந்தவராய்ப் படைத்துதவிய பெருமை மகாவித்துவான், மீனுட்சிசுந்தரம்பிள்ளை அவர்களுக்கே உரியதாகும். ஐயர், தமது 17-வது வயது தொடங்கி (1871 — 1876) மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்களிடம் கல்விகற்ருர். தமது ஆசிரியரிடம், ஐயர் அவர்கள் மிகுந்த அன்பும் மதிப்பும் உடையவராய் விளங்கினர்.

"பலகாலமாகத் தவம்புரிந்து ஒரு தெய்வ தரிசனத்திற்குக் காத்திருக்கும் உபாஸகனைப் போல நான் இருந்தேன். அவனுக்குக் காட்சியளிக்கும் அத்தெய்வம்போல அவர்வந்தார்." (என் சரித்திரம். அத்தியாயம் 27) என்று அவர் கூறியிருப்பதை நோக்குக.

இங்ஙனம் மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் அன்புக்குரியவராய்க் கற்றுத்தெளிந்த ஐயர் அவர்கள், திருவாவடுதுறை ஆதீனத்துச் சந்நிதானமாக விளங்கிய சுப்பிரமணிய தேசிகர் அவர்களிடமும் கற்றுநிறைந்தார். ஐயரின் தமிழ் அறிவு ஒளிவீசத தொடங்கியது. 1880-ம் ஆண்டில் கும்பகோணம் அரசாங்கக் கல்லூரியில் தமிழ் ஆசிரியராக அமர்த்தப்பட்டார். கல்லூரி வாயிலாக ஐயர் அவர்களின் தமிழ் ஆராயவுத் திறனும் ஆழ்ந்த புலமையும் பல தமிழறிஞர்களின் தொடர்பை ஏற்படுத்தின. அவர்களுள் பூண்டிஅரங்கநாத முதலியாரே ஐயர் அவர்களை ஊக்கித் தமிழ்த்தொண்டில் ஈடுபடுத்திய சான்ருேராவர்.

முதலியாரின் தூண்டுதலும் ஐயர் அவர்களின் தமிழார்வமும், இணைந்து செயற்பட்டதன் பயனே இன்று நாம் சங்க இலக்கியங்களைப் படித்து மகிழக்கூடிய பெருவாழ்வைப் பெறச் செய்தன. ஐயர் அவர்கள் நூல்களை (ஏடுகளை) ஆராய்ந்து பதிக்கும்முறை மிக மிகச் சிறந்த தொன்ருகும். அவர் ஒரு முதற்கண் கடிதத்தில் பெயர்த்தெழுதி அதனைப் படிஎடுத்துக் கொள்வார். பின் தாம் படியெடுத்த பிரதியுடன் பல ஏட்டுப் பிரதிகளையும் ஒப்பிட்டு நோக்குவார். அங்ஙனம் ஒப்பிட்டு நோக்கி நோக்கிப் பாட பேதங்களைக் குறித்துக் கொள்வார். பின் அந்நூலைப் பலமுறை படித்துப் பொருளை விளங்கிக்கொள்வார். இதறகுப் பின் அந்நூலின் வரலாற்ருேடு தொடர்புடைய பலநூல்களையும் படித்துப் பரிசோதனை செய்வார் இதுடன் அமையாமல், அந்நூலில் சிறந்தபுலமையுடையவர்களாக விளங்கும் வடமொழி, தென்மொழிப் புலவர்களைத் தேடிச்சென்று, அவர்களிடமும் பல உண்மைகளைக் கேட்டுத்தெளிந்துகொள்வார். இதனபின்புதான் அந்நூலை அச்சேற்றத் தொடங்குவார்.

இங்ஙனமெல்லாம் மிகவும் ஆர்வத்துடனும் மதிப்புடனும் அச்சத்துடனும், ஆராய்ந்து, கேட்டு, தெளிந்து, தமிழ்நூல்களைச் சிறந்த முறையில் அச்சேற்றி அளித்த பெருமையும் தொண்டும் ஐயர் அவர்களுக்கே அமைந்தனவாகும். அவர், பதித்துள்ள நூல்களின்கண் காணப்படும் ஆராய்ச்சி முன்னுரையும், பதிப்புரையும், மேற்கோள் விளக்கமும், ஒப்புவமைப் பகுதிகளும், தனிதனி நூலாக வெளியிடக் கூடிய பொருட் சிறப்புடையனவாகும்.

புறநானூறு, பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, பரிபாடல், பத்துப் பாட்டு, குறுந்தொகை எனுஞ் சங்கநூல்களும், சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை முதலிய பிறசான்ருேர் நூல்களும், நன்னூல் சங்கரநமச்சிவாயர்உரை நன்னூல் மயிலைநாதர்உரை, முதலிய இலக்கண நூல்களும் ஐயர் அவர்களால் அரிதின் முயன்று பதிக்கப்பட்டனவாகும்.

ஐயர் அவர்களால் ஆராய்ந்து எழுதப்பட்ட மீனுட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம் என்னும் நூல் சிறந்ததோர் தமிழ்வரலாற்றுக் களஞ்சியமாகவிளங்குகின்றது. அவர் எழுதிய என் சரித்திரம் என்னும் உரைநடை நூல் தமிழ்மொழிக்கும் தமிழ்ப் புலவர்கட்கும் புதியதோர் விருந்தாகப் பொலிகின்றது. புதியதும் பழையதும் என்னும் நூல், புலமைப் பண்பாட்டின் நிலைக்களமாக நின்றுநிலவுன்கிறது.

இனி இவற்றுக்கெல்லாம் மேலாகச் சிறந்துவிளங்குவது ஐயர் அவர்களின் உரைநடை அமைப்பேயாகும். எளிய, இனிய, தெளிந்தசெம்பாகமான உரைநடை எழுதுவதில் அவரே அவருக்கிணையாக விளங்குகின்ருர்.

"இவன் ஓரரசன். போரில் வல்லவன், சிறந்தகொடையாளிகளுள் ஒருவன். செங்கோலை உடையவன். மழவர்களுக்குத் தலைவன். தொண்டைமானென்னும் அரசனிடம் ஔவையைத் தூதுவிடுத்தோன். சேரமானுடைய உறவினன்" என்பது, ஐயர் அவர்களின் உரையில் ஒரு பகுதியாகும்.

இங்ஙனம் தமிழ்அன்னையின் மாண்பைச் சங்கநூற் பதிப்பாலும் தமது ஆராய்ச்சித்திறத்தாலும் மேம்படுத்தி விளங்க வைத்த தோலாநாவின்மேலோனுகிய தமிழ்ச்சான்ருேன் சாமிநாதையரின் தமிழ்த்தொண்டைப் போற்றி மகிழ்வோமாக.

"இருந்தமிழே உன்னல் இருந்தேன்."

# சிறுவர் பூங்கா

## அன்பும் நட்பும்

— கந்த. இரவீந்திரன் —

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு"

இக் குறள் மூலம் வள்ளுவர், 'ஒருவரோடு ஒருவர் முகம் மாத்திரம் மலரும்படி நட்புக்கொள்ளுவது மட்டும் உண்மையான நட்பு அல்ல; அன்பினால் அகமும் முகமும் மலரப் பண்ணுவதே நட்பாகும்' என்றார். அன்பு பிறரிடம் விருப்பத்தை உண்டுபண்ணுகிறது. அந்த விருப்பம்தான் பிறரிடம் நட்பு எனும் அளவற்ற சிறப்பினை உண்டுபண்ணுகிறது. அதிகாரத்தினால், ஆணவத்தினால் சாதிக்க முடியாததையெல்லாம் இந்த நட்பினால் சாதித்துவிடலாம். நட்பினால் அநேக நன்மையுண்டு. நல்ல அறிவுடையோரின் நட்பு எமது அறிவை வளர்க்கும்.

நட்பின் பெருமைபற்றி தேசிங்குராஜன் மூலம் நாம் அறியலாம். தேசிங்குராஜனின் நண்பன் மௌத்துக்காரன் பேரில் ஆற்காட்டு நாவாப்பினால் வஞ்சனையாகக் கொலை செய்யப்பட்டான். இச்செய்தியை அறிந்த தேசிங்குதன் ஆருயிர் நண்பன் இறந்த பின்பு, தான் வாழ்வது தகுமா என்று எண்ணி, வாளினால் தன் மார்பில் குத்தி உயிர் துறந்தான். இத்தகைய பெருமை வாய்ந்த நட்பைக் கொண்டுகூட சிலர் இனிய பசப்பு வார்த்தைகள் பேசி நன்மைசெய்த நண்பனுக்கே துரோகம் விளைவிக்கின்றனர். ஆம்! மனிதனோடு நெருங்கப் பயன்படும் நட்பு மனிதனை அழிக்கவும் பயன்படுகிறது. அதனால்தான் ஆராய்ந்தறிந்து ஒத்த கருத்துள்ள, ஆபத்துக் காலத்தில் உதவும் உண்மை நண்பர்களை அடைந்திடல் வேண்டும்.

தவறான வழியில் செல்லும் மகனைத்தாய் திருத்துவது போல், தீயநெறியில் செல்லும் நண்பனைத் திருத்துவதே நண்பர்களின் கடமை. திருவள்ளுவர்கூட,

"செயற்கரியயாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரியயா உளகாப்பு"

என்றார்.

நட்பு மிகவும் அவசியமானதென்றும், நட்பைப்போல அருமையானது வேறெதுவுமில்லையென்றும் இக்குறள் மூலம் நாமறியலாம். இவற்றின்மூலம் நட்பிற்கு மூலகாரணம் அன்பென அறியக்காண்கிறோம்.

நண்பர்களோடு உறவை வளர்ப்பது அன்பு; பெற்றோர் தம்மைமந்தர்மேல் சொரிவது அன்பு; விருந்தினரை வரவேற்று இன்முகம்கூறி உபசரிப்பதும் அன்பு. இதனால் எமது வாழ்விற்கு அன்பு மிகவும் அவசியமானது என்றுதெரிகிறது. அன்புதான் இன்பம். அன்பின்றேல் இன்பமில்லை.

ஆகையால் சிறுவர்களாகிய நாமும், வாழ்வில் இன்பம் பொங்கிட அறிவுடைய நண்பர்களின் நட்பைப்பெற்று அன்புடன் வாழ்வோமாக!

## கிறிஸ்துவின வாழ்வில் ஒரு நாள்...

— எஸ். டி. ராஜன் —

இயேசுநாதர் ஒரு நாள், தமது சீடர்களுடன் 'எருசேலம்' என்னும் இடத்திற்குச் சென்றபோது, அங்கு அவரை ஒரு வீட்டில் விருந்துண்ண அழைத்தார் கள்.

அக்காலத்தில் சாப்பாட்டுக்கு முன், விருந்தளிப்பவர், விருந்தினரின் பாதங்களைத் தம் ஆட்களைக்கொண்டு கழுவித் துடைத்துவிடுவார். சில சமயங்களில் விருந்தினரில் ஒருவரே மற்றவர்களின் பாதங்களைக் கழுவி விடுவராம்.

இயேசுநாதர் விருந்துக்குச் சென்ற வீட்டில் வேலையாட்கள் இல்லையென்பதை, அவரின் சீடர்கள் அறிந்தும், அவர்கள் "மற்றொருவரின் பாதங்களை நாம் கழுவுவதா" என்றெண்ணி வாளாவிருந்தார்கள். அவர்களுடைய செருக்கைக் கண்ணுற்ற இயேசுநாதர், அவர்களுக்குப் புத்தி புகட்ட எண்ணி, அந்த அறையின் மூலையொன்றில் இருந்த தண்ணீர்ப் பாத்திரத்தை எடுத்து, தமது சீடர்களின் கால்களைக் கழுவித் துடைத்தார்.

பின்பு தம் இருக்கையில் அமர்ந்த இயேசுநாதர், "அன்பர்களே! யான் கூறுவதைக் கவனியுங்கள். உலகில் மக்களாய்ப் பிறந்த நாம் நமது நலத்தையே கருதக்கூடாது. பிறர் நலத்தைக் கருதிப் பணி செய்வதே மோட்சத்தை அடையும் வழி. அடியார்க்கு அடியாராய் நாம் இருக்கப் பழகவேண்டும்" என்று கருத்துச்செறிவுள்ள பொன்மொழியைக் கூறினர்.

## தெய்வ அருள்

"மீசாலைக் கந்தையா"

நாளும் பொழுதும் பூசுவதால்
நாதன் அடியைப் பெறலாமோ?
பாழும் பொய்யும் படிறுமற்ற
படிமை வாழ்வு பற்றுதோ?

சாறும் தேரும் செய்வதனால்
சாமி யருளைப் பெறலாமோ?
கூறும் உண்மை வழியாகக்
குறித்த பொருளும் வேண்டாவோ?

பிண்டச் சோற்றுக் குவியலினால்
பெருமா னருளைப் பெறலாமோ?
அண்டப் படைப் பிலோரேழை
அழிபசி தீர்த்தா லாகாதோ?

உண்மை மனத்தை ஒளியாமல்
உண்மை நெறியில் வாழ்ந்தாரே
திண்மை யாகப் பெறுவார்கள்
தெய்வ அருளு மதுவேயாம்.

## முரடன்

— அன்ரனி பெர்னாண்டோ —

பாருக் பொல்லாத முரட்டுச் சுபாவம் கொண்டவன். அந்த வகுப்பில் உள்ள அத்தனை மாணவர்களும் அவனுக்குப் பயம்அவன். விரும்பாத ஒன்றை யாராதுவ செய்துவிட்டால் 'சட் பட்' என்று அடித்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பான்.

அடிபட்டவன் ஆசிரியரிடம் முறையிட்டால் பள்ளிக்கூடம் விட்டுத் தெருவில் இறங்கியதும் பிடித்துக்கொள்வான். போதிய மட்டும் அடியும் உதையும் கொடுத்துப் பழி தீர்த்துக்கொள்வான்.

அந்த வகுப்பில் படித்த பாலா ஒரு அப்பாவி. மெலிந்து ஒல்லியான அவனை எல்லோரும் 'ஒல்லித் தடி' என்று கேலி செய்வார்கள். அவன் அப்போதெல்லாம் நன்றாக அழுவான். அவன் சின்னப் பாப்பாபோல் அழுவதைக் கண்டு ஆசிரியர் கூடச் சிலவேளைகளில் சிரிப்பார்.

பாருக் அடிக்கடி பாலாவுக்குப் புதுப்புதுப் பட்டங்களைச் சூட்டிக் கேலிசெய்வான். பாலா பாவம் அழு அழு என்று அழுதுவிட்டு இருப்பதை விட அவனால் வேறொன்றும் செய்யமுடியவில்லை. சில ஆசிரியர்கள் இதைக் கண்டுவிட்டுப் பலமுறை பாருக்கைக் கண்டித்திருக்கிறார்கள். ஆனால் இதையெல்லாம் பாருக் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

ஒருநாள் நண்பகல் ஓய்வு நேரம். பிள்ளைகள் ஓடியாடி விளையாடுவதை ஓரத்தில் நின்று கவனித்துக்கொண்டிருந்தான், பாலா. அப்போது இன்னும் சில ராடு அவ்விடத்துக்கு வந்த பாருக், பாலாவின் தலையில் ஒரு குட்டுக் குட்டிவிட்டு ஒன்றும் தெரியாதவன்போல் நின்று விளையாட்டைக் கவனிப்பது போல் பாசாங்கு செய்தான். பாலா திரும்பிப் பார்த்துவிட்டுத் தலையைத் தடவிவிட்டுக்கொண்டான்.

அவன் தலையிலிருந்த கையை எடுத்ததுதான் தாமதம், மற்றொரு குட்டு சற்றுப் பலமாக விழுந்தது. பாலாவுக்குப் பொறுக்கமுடியவில்லை. முகத்தைச் சுளித்துக்கொண்டு மனதுக்குள் அவனைத் திட்டினான். "என்னடா முகத்தைச் சுளிக்கிறாய்? நொறுக்கிப்போடுவேன் நொறுக்கி" என்று கையை ஓங்கி அவனுக்கு அடிக்கப் போவது போல் பயங்காட்டிவிட்டு அகன்றான் பாருக்.

சற்று தூரம் சென்ற பாருக் மீண்டும் திரும்பி எதையெதையோ சொல்லி பாலாவைக் கேலிசெய்தான்.

பாலாவால் எவ்வளவுதான் பொறுக்கமுடியும். "போடா போ, தடி ராஸ்கல்" என்று முணுமுணுத்தான். அது பாருக்கின் காதில் விழுந்துவிட்டது. உடனே ஓடிவந்து பாலாவின் மேற்சட்டையைப் பிடித்து ஒரு குலுக்குக் குலுக்கினான். பாலாவுக்கு எங்கிருந்துதான் துணிவு வந்ததோ தெரியாது, 'பளார் பளார்' என்று பலங்கொண்ட மட்டும் பாருக்கின் முகத்திலும் தலையிலும் மாறிமாறி அறைந்தான். பாலா ஒருகணம் அசல் முரடனாகவே மாறிவிட்டான். இதைக் கண்டு மற்ற மாணவர்கள் ஆச்சரியத்தில் வாயைப் பிளந்தனர்.

பாருக் சும்மா இருப்பானா? அவனும் பாலாவை நையப் புடைத்தான். ஆசிரியர் ஒருவர் வந்துதான் சண்டையை நிறுத்தினர். அப்போது பாருக்கின் தலையிலிருந்து இரத்தம் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது. அவன் தலையில் மூன்று நான்கு இடங்களில் காயம்.

பாலா தன பற்கள் பாருக்கின் தலையில் குத்திவிட்டதாகச் சொல்லித் தன் வாயைக் கையால் பொத்திக்கொண்டான். எல்லோரும் அதை மெய்யென்று நம்பிக்கொண்டனர். பாருக்கூட அப்படித்தான் நினைத்தான். ஆனால்—

உண்மையில் நடந்தது அதுவல்ல. தலையில் குட்டியதும் போதாமல், பாருக் கேலிசெய்யவும் தொடங்கியதால் கோபமடைந்த பாலா ஒரு கல்லை எடுத்துக் கையில் பொத்திக்கொண்டான். அதன் பிறகுதான் முணுமுணுத்தான். சண்டையும் வந்தது. அவன் தலையில் நன்றாக இரண்டு போட்டும் விட்டான். இது பாலாவுக்கு மட்டுந்தான் தெரியும்.

பாலா செய்தது சரியோ பிழையோ, அதன் பின் பாருக் அவனைக் கேலிசெய்வதில்லை. அவன் முரட்டுச்சுபாவமும் குறைந்துவிட்டது. அது மற்ற மாணவர்களுக்கும் நன்மையாகவே முடிந்தது.

## அந்த நாள் மறந்திடுமோ?

— சு. சண்முகானந்தன் —

அன்று காலை நானும் அப்பாவும், யாழ்ப்பாணத்திலுள்ள ஒருகல்லூரிக்கு வந்தோம். எனக்கு கல்லூரியில் சேரப் போகிறேன் என்ற பெருமை. எனினும் நான் முன்பு படித்த பள்ளிக்கூடத்தில் இருக்கும் கந்தையா மாஸ்டரைப்போல் ஒருவர் இங்கும் இருந்துவிட்டால் என்பதை நினைத்ததும் என்னையறியாமலே பயம் பிடித்துவிட்டது.

அப்பாவும் நானும் கல்லூரி அதிபரின் அறைககுள் புகுந்துவிட்டோம். அதிபர் ஏதோ படித்துக்கொண்டு இருந்தார். அவரைப்பார்த்தால் வெகு அன்பனவர்போல் தெரிந்தது. அதுவரையில் திருப்தி. அப்பாவும் அவரும் நீண்டநேரமாகப் பேசினார்கள். அவர்கள் பேச்சில் எனக்குக் கவனம் இருந்தால்தானே. எனக்குக் கவனமெல்லாம், அங்கு பிரம்பு இருக்கிற என்பதே. 'சரி, இப்பவே வகுப்பில் கூட்டிக்கொண்டேவிடுங்கள்' என்றார் என் அப்பாவிடம், அதிபர்.

நான் அவரின் பின் குனிந்தபடி சென்றுகொண்டிருந்தேன். வகுப்பில் நுழையுமுன்னே மணி அடித்துவிட்டது. மாணவர்களும் ஆசிரியரும் வெளியே வந்துகொண்டிருந்தார்கள். அடுத்தபாடம் தொடங்குவதற்கு ஆயத்தமானது. நான் முன்வாங்கில்போய் அமர்ந்துவிட்டேன். ஆசிரியர்வந்துவிட்டார். எல்லோரும் எழுந்து, 'குட்மோணிங்சார்" என்றனர். நான் தடுமாறி "வணக்கம்" என்றேன். மாணவர்கள் எல்லோரும் 'கொல்' என்று சிரித்தனர். ஆசிரியருக்கும் இது ஆச்சரியத்தைக் கொடுத்தது. 'புதுப் பொடியன் ஒருவன் வந்திருக்கிறான் போலிருக்கே! தம்பி முன்பு எங்கு படித்தனிர்?' என்றார். நான், 'தீவிலே' என்றேன். தீவு என்றவுடன் மாணவர்கள் எல்லோரும் 'தீவான்' என்று மீண்டும் சிரித்தனர். எனக்கோ அவமானமும் ஆத்திரமும்பொத்துக்கொண்டு வந்தது. என்ன செய்ய முடியும்?

உபாத்தியாயர் கணக்குப் படிப்பித்தார். ஏதோவெல்லாம் கரும்பலகையில் எழுதினார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. இடைவேளை மணி அடித்தது. என்னைச்சுற்றி மாணமர்கள் குவியத்தொடங்கினார்கள். என் பெயரை வினவினார்கள். நான் 'ஆனந்தன்' என்றேன். ஒருவன், 'டேய் தீவான்' என்றான். மற்றவன், "இன்றைக்கு ஒரு புது ஆள் வந்திருக்கு. எங்களுக்கெல்லாம் இன்றைக்கு 'ஐஸ்பழம்' வாங்கித்தரட்டும்" என்றான். அதற்கிடையில் இன்னொரு உருவம், "டேய் எழும்படா, சுறுக்கு எடு காசை" என்று மிரட்டியது. சுமார் 150 றாத்தலுடையது அந்த உருவம். இன்னொருவன், "பாவம் புதுப் பொடியனை வெருட்டாதீங்கடா" என்றது. அவர்கள் மிரட்டியது எனக்குப் பழைய பள்ளிப்படிப்பை நினைவூட்டியது. 'நானும் இப்படித்தானே சுப்புவும் மணியும் புதிதாக வந்தபோது... அதன் பலன்தான் எனக்கு இப்போது திரும்பி வந்தது...'என எண்ணிக்கலங்கினேன்.

இப்படியிருக்கையில் இன்னொருவன், 'தம்பி படம்பார்க்கவில்லையா? எம். ஜி. ஆர். நடித்த படம் ஓடுது. வாவேன் பாடசாலை விட்டபின் போவம்' என்றான்.

மணியும் அடித்தது. அவரவர்கள் தங்கள் இடங்களில் போய் அமர்ந்துகொண்டனர். ஆசிரியரும் வகுப்பறைக்குள் நுழைந்தார். அவரைப் பார்த்தால் ஆசிரியர் குலத்திலும் ஹிட்லர், முஸோலினி இருப்பார்கள் போல் இருந்தது. அவரைப் பார்க்க அவ்வளவு பயமாக இருந்தது! அவர் வந்தவுடன், 'குடியியல் கேள்விகளுக்கு விடை எழுதாது வந்தவர்கள் எழும்பலாம்' என்றார். வகுப்பில் ஒரே குசுகுசுப் பேச்சு. சிறிது நேரத்தில் எல்லோரும் எழுந்து நின்றார்கள். ஆசிரியர் வகுப்பை நோக்கினார். என்னைத்தவிர மற்ற எல்லோருமே எழுந்து நின்றனர். உடனே என்னை ஆசிரியர் பார்த்துவிட்டு, "ஒருவன்தான் எழுதிவந்திருக்கிறான், மற்றவர்கள் எல்லோரும் சும்மா வந்திருக்கிறார்கள்" என்றார். எனக்கென்றால் ஒரே ஆச்சரியமாய்ப் போய்விட்டது. உடனே ஒருவன், "சார், இன்றைக்குப் புதிதாய் வந்தவன் சார்" என்றான். உடனே அந்த ஆசிரியர், "அதுதானே நான் பார்த்தன். பழையபையன் என்றால் அவனும் எழுந்து நிற்பானே" என்றார். எனக்கென்றால் ஒரே சிரிப்பாக வந்தது. சரி அமருங்கள் என்றார் ஆசிரியர். அப்போதுதான் நான், எழுதினவர்களும் சேர்ந்து எழுந்து நின்று, எழுதாதவர்களுக்கு அடிவாங்கிக் கொடுக்காமல் தப்பவைத்த ஒற்றுமையைப்பற்றி எண்ணினேன்.

மத்தியான போசனத்தின் பின் மிகுதிப் பாடத்துக்காக வகுப்புக்குள் நுழைந்தேன். எனக்கு ஒரே பயம். ஐயோ, என்னை எல்லோரும் சேர்ந்து கேலிசெய்யப் போகிறார்களே என்று, கடவுளே நீதான் என்னைக் காப்பாற்றவேண்டும் என்று, நான் மணியடிக்கும் வரையும் கடத்திவிட்டு, மணியடித்த சமையம் பார்த்து வகுப்பில் நுழைந்தபடியால், என்னைக்கேலிபண்ண ஒருவருக்கும் சந்தர்ப்பம் கிட்டவில்லை. நான் அப்பாடா என்று பெருமூச்சுவிட்டேன்.

ஆசிரியரும் வந்துவிட்டார். ஆங்கிலம் படிப்பிக்கும் ஆசிரியர்.

அந்தப் பாடமும் முடிந்து, மற்றப்பாடமும் ஒருமாதிரி முடிந்துவிட்டது. இனி, கடைசிப்பாடம்! இது முடிந்தால் ஒரே ஓட்டம் விடுதிக்கு. இதற்கிடையில் ஒருவன், "நாளைக்கு வகுப்புக்கூட்டமடா. புதுமுக அறிமுகத்தில் இவரைக்கழட்டவேண்டுமடா"என்றான். நான், பல்கலைக்கழகத்தில் இப்படி நடப்பதைக் கேள்விப்பட்டு இருக்கிறேன். எனவே எனக்கு ஒரே பயம் பிடித்துவிட்டது.

இதற்கிடையில் 'பியோன்' இடாப்புகளை வகுப்பு வகுப்பாக எடுத்துக்கொண்டு ஒரு துண்டும் கொண்டுவந்தான். எங்களது இடாப்பையும் எடுத்துவிட்டு, துண்டை ஆசிரியரிடம் கொடுத்தான். ஆசிரியர் "நாளை பாடசாலை விடுமுறை; பண்டாரநாயக்கா தினம்" என்றார். எனக்கோ ஒரே மகிழ்ச்சி. புதுமுக அறிவித்தலுக்குத் தப்பியாச்சு என்று மகிழ்ந்துகொண்டே இருக்கும்போது மணியும் அடித்தது. ஒரே ஓட்டம் விடுதியை நோக்கி!

# மறைந்தும் மறையாத ராஜன்பாபு

இந்தியாவின் முதல் ஜனாதிபதியாக விருந்த டாக்டர் ராஜேந்திரபிரசாத் அவர்கள், கடந்த 1959-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தபொழுது இப்படங்கள் எடுக்கப்பட்டன.



யாழ்ப்பாணம் வீதி வழியாகத் திறந்த காரில், டாக்டர் ராஜேந்திரபிரசாத் செல்லும் காட்சி.



பலாலி விமான நிலயத்தில் டாக்டர் ராஜேந்திர பிரசாத் மகிழ்ச்சி பொங்கும் முகத்துடன் விமானத்திலிருந்து இறங்குகிறார்.



யாழ்ப்பாணம் நகரசபை அளித்த வரவேற்பில் கலந்து கொண்ட ராஜன்பாபு பொது மக்களுக்கு சிரம் கூப்பி வணக்கம் செலுத்துகிறார்.



திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், திரு. அல்பிரட் துரையப்பா ஆகியோர் ராஜன் பாபுவை விமான நிலயத்தில் வரவேற்கின்றனர்.



மங்கள வாத்தியங்கள், ஒலிக்க, டாக்டர் ராஜேந்திர பிரசாத் யாழ்ப்பாணம் வீதி வழியாக அழைத்துச் செல்லப்படுகிறார்.

## சரசாலை கொலை வழக்கு

'ஈழநாடு' சனிக்கிழமை இதழில் சரசாலை இரட்டைக் கொலைவழக்கு விசாரணைச் செய்தியில் சிறு தவறு நேர்ந்துவிட்டதற்காக வருந்துகிறோம். விசாரணை விபரம் நாளை திங்கட்கிழமை வெளிவரும்.

## 383 கிராம சேவகர்கள் மேலும் நியமனம்?

கொழும்பு, வெள்ளி
கிராம சேவகர்களாக மேலும் 383 பேர் பொதுச் சேவைக்கமிஷனால் விரைவில் நியமிக்கப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.


விரைவில் எதிர்பாருங்கள் !

வீர காவியம் !!

சினிமாஸ் திரைகளில்

புதுமையான காதல் ! புரட்சிகரமான வீரம்!!

திகைப்பூட்டும் திரைகடல் ஓவியம் !!!

★ பார்த்தோர் பரவசப்படுகிறார்கள்

★ பார்க்காதோர் பார்க்கத் துடிக்கிறார்கள்!

சிவாஜி கணேசன்
ஜெமினி கணேசன்
சாவித்திரி
முத்துலட்சுமி
வி. நாகையா
குமாரி ருக்மணி
எஸ். வி. ரங்கராவ்
ஜெமினி சந்திரா
எஸ். வி. சுப்பையா
ஏ. கருணாநிதி




மற்றும் பலர் நடிக்கும்

பத்மினி பிக்சர்ஸ்

கப்பலோட்டிய தமிழன்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
அஞ்சலி - ராமராவ் நடித்த
பாலநாகம்மா

மனோகரா (யாழ்ப்பாணம்)
சிவாஜி கணேசன்
சரோஜா தேவி நடித்த
பாகப்பிரிவினை

இலங்கையில் முதலாவதாக குளிர்சாதன அறையில் நவீன யந்திரங்களால் கைப்படாமல் சுகாதார முறைப்படி தயாரிக்கப்படுவது

றோஸ் பிறண்ட் இனிப்புக்களும் ரொபிகளுமே எங்கும் கிடைக்கும்.

ROSE BRAND SWEETS & TOFFEES


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேல் வீதி 83-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 3-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.